விலை ரூபா 20 பக்கங்கள் 32

# உதயன்




சுடர் 31 கதிர் 97 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 19, புதன்கிழமை 02.03.2016

# பிளவுபடாத நாட்டினுள் சமஷ்டித் தீர்வு முழு அதிகாரங்களுடன் தமிழர் தேசம்

## இணைந்த வடக்கு– கிழக்குக்குள்; இவையே எமது இலக்கு என்கிறார் சம்பந்தன்

திருகோணமலை,மார்ச் 2
எமது மக்களின் அன்றாடத் தேவையையும், அபிவிருத்தியையும் நிறைவு செய்தால் எமது இலக்கை அடைந்து விட்டோம் என்று அர்த்தமில்லை. பிளவுபடாத நாட்டினுள் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு, வடக்கு - கிழக்கு இணைந்த அலகு, அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட்ட தமிழர் தேசம், இதனை அடையும் வரை எமது பயணம் தொடரும்.
இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க் கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.
இந்தப் பயணத்தின் இறுதிக் கட்டத்தில் தற்போது இருக்கின்றோம். இதில் வெற்றி கிடைப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாக எமக்கு இருக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
திருகோணமலையிலுள்ள இரா.சம்பந்தனின் இல்லத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இதன்போது, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மேலும் கூறியுள்ளதாவது:-
எமது மக்களின் அன்றாட பக். 27

“மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு அரசில் மிக முக்கியமான அமைச்சு ஒன்றை நான் எடுத்து இருக்கலாம். இதற்கு வாய்ப்பும் இருந்தது. ஆனால் எமது பயணம் அது அல்ல. நாம் தனி நாட்டுக் கோரிக்கையைக் கோரியிருந்தோம். பின்னர் ஆயுத வழியில் போராடினோம். இன்று அரசியல் ரீதியாகப் போராடுகின்றோம்.”



## மைத்திரி குறித்து மகிந்த ஆதங்கம்

கொழும்பு, மார்ச் 2
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டிருந்தாலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலை பக். 27

**கொலை செய்தவருக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறை** பக். 02

## கண்டாவளையில் இராணுவத்துக்கு காணி சுவீகரிப்பை உடன் நிறுத்துக

### உத்தரவிட்டது ஒருங்கிணைப்புக் குழு

கிளிநொச்சி, மார்ச் 2
கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 88 ஏக்கர் காணியை சுவீகரிப்பதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதனை உடனடியாக நிறுத்துமாறு, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட இணைத் தலைமைகள் உத்தரவிட்டுள்ளன.
இதனையடுத்து, குறித்த காணி சுவீகரிப்புக்கான அறிவித்தல்கள், பிரதேச செயலகத்தினால் அனுப்பப்படாது என்று, கண்டாவளைப் பிரதேச செயலர் ரி.முகுந்தன் தெரிவித்தார்.
பாதுகாப்புத் தரப்பினர் தமக்குத் தேவையான காணிகளை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை மீளவும் ஆரம்பித்துள்ளனர். யாழ். மாவட்டத்தில் கீரிமலை-சேந்தாங்குளம் பகுதியில் கடற்படையினரின் தேவைக்கு தேவாலயக்க ாணியை அளவீடு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் பக். 27

முச்சந்தி முரளி



அப்ப... அவை விடச் சொல்லினம் இவை அளக்கச் சொல்லினம்

## பொதுமக்களின் காணிகளை விடுவிக்கவேண்டும் ராணுவம்

### வொசிங்டன் கலந்துரையாடலில் வலியுறுத்தியது அமெரிக்கா

கொழும்பு, மார்ச் 2
இராணுவத்தினர் வசமுள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை, அந்தந்தக் காணி உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டும் என்று அமெரிக்கா மீளவும் இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளது.
வொசிங்டனில் கடந்த 26 ஆம் திகதி நடந்த இலங்கை - அமெரிக்கக் கூட்டுக் கலந்துரையாடல் தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமும், இலங்கை வெளிவிவகார அமைச்சும் பக். 05

## உணவு தவிர்ப்பால் கைதிகள் உடல்நிலையில் கடும் பாதிப்பு

### நேற்று மட்டும் ஐவர் மயக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 2
பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்து, மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று 8 ஆவது நாளாகத் தொடர்ந்தது.
இதனால் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளின் உடல்நிலை மோசமாக உள்ள நிலையில் நேற்று மட்டும் 5 பேர் மயங்கிய நிலையில் சிறைச்சாலை வைத்திய பக். 29

## பாசத்துக்காக காத்திருக்கும் உறவுகளை விடுவியுங்கள்

### விடுதலையான கோமகன் உருக்கம்; யாழ்.நகரில் இன்று கவனவீர்ப்பு

கொழும்பு, மார்ச் 2
சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எமது உறவுகளான தமிழ் அரசியல் கைதிகள் எவரும் ஆயுதம் ஏந்திப் போராடும் மன நிலையில் இல்லை. அவர்கள் தமது உறவுகளின் பாசத்துக்காகவே காத்திருக்கின்றார்கள். பக். 29

## ஞானசார தேரருக்கு மற்றொரு தலையிடி

### தண்டனை வழங்கக் கோரிய மேன்முறையீடு விசாரணைக்கு



கொழும்பு, மார்ச் 2
பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட 13 பேருக்கு தண்டனை வழங்குமாறு கோரி, சட்டமா பக். 06

## இணைந்த நேர அட்டவணை; ஒத்துழைக்க இ.போ.ச. மறுப்பு

### ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்தார் டெனீஸ்வரன்

யாழ்ப்பாணம், மார்ச் 2
வடக்கு மாகாணத்தில் இணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்த இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் ஒத்துழைப்பு வழங்க மறுக்கின்றனர் என்று வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பக். 28




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தியால் குத்திக் கொலை செய்தவருக்கு 10 ஆண்டுகள் கடுழிய சிறைத் தண்டனை

## யாழ். மேல் நீதிமன்று விதித்தது

யாழ்ப்பாணம், மார்ச் 2

குடும்பஸ்தர் ஒருவரை சகோதரர்களும் உறவினருமாகச் சேர்ந்து கத்தியால் குத்திக் கொலை செய்தனர் என்று குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் எதிரி ஒருவருக்கு யாழ்.மேல் நீதிமன்றம் 10 வருடங்கள் கடுழியச் சிறைத் தண்டனையும் பத்தாயிரம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

கோப்பாயில் 2009 ஆம் ஆண்டு மே 5 ஆம் திகதி இரத்தினம் மணிவண்ணன் என்பவரை கொலை செய்தனர் என்று கிருஸ்ண பிள்ளை பிரேமன், கிருஸ்ண பிள்ளை ரவிக்குமார், கிருஸ்ணபிள்ளை ஜெயக்குமார், கந்தசாமி குயிலன் ஆகியோருக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டு சட்டமா அதிபரால் யாழ்ப்பாணம் மேல் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வெளிநாடு செல்வதற்கான பொலிஸ் அறிக்கை பெறுவதற்காக சம்பவம் நடந்த தினத்தன்று காலையில் மணிவண்ணன் பொலிஸ் நிலையம் சென்றிருந்தார். அப்போது எதிர் வீட்டுக்காரருடன் வாய்ச் சண்டை நடந்தது. அவர் பொலிஸ் நிலையத்தில் இருந்து திரும்பி வந்தபோது பிரேமன் என்பவர் மணிவண்ணனின் நெஞ்சில் கத்தியால் குத்தியுள்ளார். முதல் குத்து நெஞ்சின் வலது பக்கத்தில் விழுந்தது. அப்போது அவர் குனிந்தபோது இரண்டாவது முறையாக முதுகில் கத்தியால் குத்திக் கொன்றார். அவரைத் தடுப்பதற்காக ஓடிச் சென்றபோது அவரின் மனைவிக்கும் சிறிய காயம் ஏற்பட்டது.

இறந்தவரின் உடலில் மூன்று வெட்டுக் காயங்கள் காணப்பட்டன. அவற்றில் நெஞ்சில் குத்தியதால் ஏற்பட்ட இரத்தப் போக்கால் அவர் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைக் குற்றத்துடன் சம்பந்தப்பட்ட எதிரிகள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி, கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதியாரிக்கு தகவல் தெரிவித்ததையடுத்து, கோப்பாய் பொலிஸாரால் அங்கு சென்று அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு விசாரணை யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு நேற்றுத் தீர்ப்பளிக்கப்பட்டது.

பிரதான எதிரியான பிரேமன் சாட்சியமளிக்கையில் கொலைச் சம்பவத்தை ஒப்புக்கொண்டார்.

இறந்தவர் தனது தாயாரைக் காலால் உதைத்தார். அதனால் தாயார் கீழே விழுந்து விட்டார். அதைக் கண்டதும் சமையலறைக்குள் ஓடிச்சென்று அவரை அச்சுறுத்துவதற்காக கத்தியொன்றை எடுத்துக் கொண்டு வந்தேன். ஆனால் கத்தி குத்திவிட்டது. அதனால் அவர் இறந்து போனார் என்று பிரேமன் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

அதையடுத்து இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி தீர்ப்பை அறிவித்தார். வழக்கு விசாரணையில் இரண்டாம், மூன்றாம், நான்காம் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை வழக்குத் தொடுநர் சாட்சியங்களின் மூலம் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் காண்பிக்கவில்லை. எனவே, சந்தேகத்தின் பிரதிபலன் எதிரிகளைச் சென்றடைய வேண்டும் என்ற குற்றவியல் விதியின்படி, மணிவண்ணனுடன் எதிரிகள் மூவரும் நேரடியாக ஈடுபட்டதற்கான சாட்சியங்கள் இல்லை.

ஆனால் கத்தியால் தவறுதலாகக் குத்திவிட்டேன் எனக் கூறுவதை ஏற்க முடியாது. காயங்கள் எதிரியின் குற்ற வக்கிரத் தன்மையை நிரூபித்திருக்கின்றன. இருப்பினும் அங்கு சண்டை நடைபெற்றது என்பது மன்றால் ஏற்றுக்கொள்ளப்படுவதால் கைமோசக் கொலைக் குற்றச்சாட்டில் முதலாம் எதிரி குற்றவாளி எனக் கண்டு எதிரிக்கு 10 ஆண்டுகள் கடுழியச் சிறைத் தண்டனை விதித்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. அத்துடன் எதிரி 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த வேண்டும். தவறினால் மேலும் ஒரு வருட கடுழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும். பிரேமனின் சகோதரர்களான இரண்டாம் எதிரி கிருஸ்ணபிள்ளை ரவிக்குமார், மூன்றாம் எதிரி கிருஸ்ணபிள்ளை ஜெயக்குமார் உறவினராகிய நான்காம் எதிரி கந்தசாமி குயிலன் ஆகிய மூன்று பேரும் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர் என நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பில் தெரிவித்தார்.

(ற-4)

# கைதடி - நாவற்குழி பாலத்தில் விரிசல்

யாழ்ப்பாணம், மார்ச் 2

கைதடி - நாவற்குழிப் பாலத்தில் விரிசல்கள் ஏற்படத் தொடங்கி




யுள்ளன. அதனால் அதனூடாகப் பயணம் செய்வோர் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்துக் கேட்டபோது விரைவாக குறித்த பாலத்தை சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்டப் பிரதான பொறியியலாளர் வி.சுதாகர் தெரிவித்தார்.

கைதடி - நாவற்குழிப் பாலம், கடந்த 2000 ஆம் ஆண்டு போர் நடவடிக்கை காரணமாக அழிக்கப்பட்டது. இதன் பின்னர், 2001 ஆம் ஆண்டு இராணுவத்தின் பொறியியல் பிரிவால் பாலம் இரும்புக் கேடர்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டிருந்தது. அன்று தொடக்கம் இன்று வரையும் குறித்த பாலம் மாற்றப்படவில்லை.

ஏ-9 பிரதான வீதியில் முக்கிய பாலமாக இது காணப்படுகின்றது. இதனூடாக தினமும் ஆயிரக் கணக்கானோரும், ஆயிரத்துக்கு மேற்பட்ட வாகனங்கள் - கனரக வாகனங்களும் பயணிக்கின்றன.

இந்த நிலையில் பாலத்தின் கரையோரமாக ஆரம்பத்தில் ஏற்பட்ட சிறு பிளவு தற்போது விரிவடைந்துள்ளது.



அதனால் பாலத்தில் பயணிப்பவர்கள் அச்சத்துடன் பயணிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்டப் பிரதான பொறியியலாளர் வி.சுதாகரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, விரைவாக இதனைச் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ற-ஜ-5-ரி5)

# நாவாந்துறை விளையாட்டு மைதானத்துக்கு இருவாரத்துக்குள் அனுமதி பெற வேண்டும்

## இல்லாவிடின் சட்ட நடவடிக்கை என்கிறது கடலோர பாதுகாப்புத் திணைக்களம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

நாவாந்துறை கடற்கரைப் பகுதியை நிரவி அமைக்கப்பட்டு வரும் சென்மேரிஸ்விளையாட்டுக் கழக மைதானத்துக்கான அனுமதியை இரண்டு வார காலத்துக்குள் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு பெற்றுக் கொள்ளத் தவறினால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் - இவ்வாறு கடலோர பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரி தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட் நாவாந்துறை கடற்கரையை அண்டிய பகுதியில், இளைஞர்களால் அவர்களுடைய விளையாட்டுத் தேவைகளை மேற்கொள்வதற்காக மைதானம் அமைக்கப்பட்டு வருகின்றது. முன்னர் கழிவுகள் கொட்டப்பட்ட பகுதியில், மைதானம் அமைப்பதற்காக மண் நிரவி அதனை சீர் செய்து வருகின்றனர்.

மிகுந்த செலவின் மத்தியில் இது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கான பாதி வேலைகள் முடிவுற்றுள்ளன. இவ்வாறான தொரு நிலையில் கடந்த வாரம், மைதானம் அமைக்கும் பணியை இடைநிறுத்துமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இளைஞர்களின் பொழுது போக்குகளை தடுக்கும் நோக்குடன் இவ் வாறு செயற்படக் கூடாது - என்று அங்கு கருத்துத் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த கடலோர பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரி, இவர்கள் மைதானம் அமைப்பதில் எமக்கு தடைகள் எவையும் இல்லை. அனுமதி பெறாமல் மைதானம் அமைக்க முற்பட்டமையே தவறாகும். கடற்கரையில் மண் நிரவி அமைக்கும் போது இதற்கான அனுமதியை எம்மாலேயே வழங்க முடியாது. ஜனாதிபதியே இந்த விடயத்தில் முடிவு எடுக்க வேண்டும். ஆனால் அனுமதி பெறாமல் மேற் கொள்ள முடியாது. இரண்டு வாரங்களுக்குள் இதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தவறினால், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

(ஜ-5-ரி5)

# நள்ளிரவு கத்தி முனையில் வீட்டுள் புகுந்து கொள்ளை

## இணுவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

வீட்டுக்குள் அத்துமீறி புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களைத் தாக்கி, கத்தி முனையில் நகை மற்றும், பெறுமதியான கைபேசி என்பவற்றைக் கொள்ளையடித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இணுவில் மேற்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது. தூக்கத்தில் இருந்தவர்கள் நாய் தொடர்ச்சியாக குரைப்பதை [illegible] கதவைத் திறந்து வெளியே பார்த்துள்ளனர்.

அதேநேரம் திறந்திருந்த கதவு ஊடாக உள்நுழைந்த கொள்ளையர்கள் வீட்டு உரிமையாளரை தாக்கிவிட்டு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கைபேசி மற்றும் 40 ஆயிரம் ரூபா தங்கச்சங்கிலி என்பவற்றைக் கொள்ளையடித்துள்ளனர். கொள்ளையரின் தாக்குதலில் தம்பையா பரமேஸ்வரன் என்பவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்திய சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார். (ற-ஜ-4,107)

# போதையில் அட்டகாசம்; 50 மணிநேர சமுதாயப் பணி

யாழ்ப்பாணம், மார்ச். 2

குடித்துவிட்டு வீதியில் அநாகரிகமான முறையில் நடந்து கொண்ட வியாபாரி மூலைப் பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞனுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதத்துடன் 50 மணித்தியாலங்கள் சமுதாய சீர்திருத்த கட்டளை வழங்கப்பட்டது.

பருத்தித்துறைப் போக்குவரத்து பொலிஸாரால் இவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (ற-ஜ-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதிக்குள் மயக்க மருந்து தூவி பல்கலை. மாணவரிடம் கொள்ளை

## இணுவிலில் நேற்றுமுன்தினமிரவு சம்பவம்

யாழ்ப்பாணம். மார்ச் 2
யாழ்.பல்கலைக்கழக 2 ஆம் வருட மாணவர்கள் தங்கியிருந்த தனியார் விடுதி ஒன்றிற்குள் நுழைந்த திருடர்கள் அங்குள்ள மாணவர்களுக்கு மயக்கமருந்து தெளித்து பெறுமதியான 8 கைபேசிகள், இரண்டு சைக்கிள்கள், மற்றும் 8ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினமிரவு இணுவிலில் இடம் பெற்றுள்ளது.

மலையகப் பகுதியைச் சேர்ந்த குறித்த மாணவர்களின் குடும்ப நிலை மிகவும் வறுமையானது. அங்கு 13 மாணவர்கள் தமக்கு கிடைக்கும் மாதாந்தக் கொடுப்பனவுப்பணத்தைக் கொண்டே தமது கற்றல் செயற்பாட்டை மேற் கொண்டு வருகின்றனர்.

மிகவும் குறைந்த வாடகையில் இணுவில் பிள்ளையார் கோவில் அருகில் உள்ள கடை கட்டடத்தில் தங்கியிருந்து யாழ்.பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவ கற்கையை கற்று வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்றுமுன் தினமிரவு மாணவர்கள் தூங்கத்திலிருந்த நேரம் பார்த்து உள் நுழைந்த திருடர்கள், யன்னல் வழியாக மயக்க மருந்து தெளித்திருக்கலாம் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனாலேயே அவர்களுக்கு அது தெரியவில்லை என்று கூறப்படுகிறது. இதன் போது மாணவர்களின் தலையணைகளுக்கு கீழ் இருந்த கைபேசி மற்றும் பணத்தை எடுத்துள்ளதுடன், வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு துவிச்சக்கரவண்டிகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

அதிகாலை குறிப்பிட்ட நேரத்தில் எழுந்து படிக்கும் மாணவர்கள் காலை 9:00 மணிக்குப் பின்னரே எழுந்துள்ளனர்.

தமக்கு ஏதோ நடந்துள்ளதாக அதிர்ச்சியடைந்த மாணவர்கள் தமது கைபேசிகளை தேடிய போது மயக்கமருந்து தெளித்து உடைமைகள் சூறையாடப்பட்டமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளை குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-வ-4,107)

# போதையில் அட்டகாசம் 28 பேருக்கு சமூகப் பணி

கடந்த இரு மாதங்களில் மது போதையில் பொது இடங்களில் குழப்பம் விளைவித்த 28 பேரை சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸாரால் மதுபோதையில் பொது இடங்களில் குழப்பம் விளைவித்த வர்களுக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான், தலா 80 மணி நேர சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரிவில் அவர்களை ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சிறுகுற்றங்களுக்காகச் சிறைத்தண்டனை விதிப்பதைத் தவிர்த்து நீதிமன்றங்களால் அந்த நபர்களைப் பொது இடங்களில் சமூகப் பணியில் ஈடு படுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

கடந்த வருடம் சாவகச்சேரி நீதிமன்றால் 96 பேரை சமூகப் பணியில் ஈடுபடுத்த உத்தரவிடப்பட்டது. மேலும் கடந்த இரு மாதங்களில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 60 இற்கும் மேற்பட்ட வாகனங் களின் சாரதிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

# 4000 அதிபர்களை நியமிக்க தயாராகிறது கல்வி அமைச்சு

## இந்த மாத நடுப்பகுதியில் நேர்முகப் பரீட்சை

இலங்கை அதிபர் சேவை மூன்றாம் தரத்திற்கு இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 4 ஆயிரத்து 76 பேருக்குமான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை அதிபர் சேவை மூன்றாம் தரத்திற்கு இணைத்துக் கொள்வதற்காக, கடந்த நவம்பர் மாதம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பிரகாரம் சித்திபெற்றவர்கள் 4 ஆயிரத்து 76 பேரின் பட்டியலை பரீட்சைத் திணைக்களம் கல்வி அமைச்சிடம் கையளித்துள்ளது.

இதற்கமைய குறித்த பரீட்சாத்திகளுக்கான நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு 10 பேர் அடங்கிய நேர்முகப் பரீட்சை சபை ஒன்றை கல்வி அமைச்சு அமைத்துள்ளது. இந்த நிலையில் நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை நடத்த திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (வ)

# வெட்டிக் காயமேற்படுத்திய மூவருக்கு கடூழியச் சிறை

## மல்லாகம் நீதிவான் தீர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2
வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து வாளால் வெட்டிக் காயப்படுத்திய 3 பேருக்கு இரண்டரை வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்த மல்லாகம் மேலதிக நீதிவான் சி.சதீஸ்தரன் பாதிக்கப்பட்டவர்களுக்கு 3 லட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார்.

கந்த ரோடையில் கடந்த 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 22 ஆம் திகதி தீபாவளியன்று வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றது. குற்றவாளிகள் 3 பேரும் அத்துமீறி வீடு புகுந்து தந்தையாருக்கு வாளால் வெட்டியதோடு, மகனுக்கு அடித்துக் காயப்படுத்தியுள்ளனர்.

குறித்த வழக்கு விசாரணையில் இருந்து வந்த நிலையில், அவர்கள் குற்றவாளிகள் என்பது கடந்த 8 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. அதற்கான தீர்ப்பு நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

இதன்படி, அத்துமீறி வீடு புகுந்தமைக்காக 3 பேருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் 4 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வாளால் வெட்டிக் காயப்படுத்திய குற்றத்துக்காக ஒவ்வொருவருக்கும் 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அடித்துக் காயப்படுத்திய குற்றத்துக்காக ஒவ்வொருவருக்கும் 6 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதன்படி ஒவ்வொருவரும் இரண்டரை வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க உத்தரவிடப்பட்டது.

இதுதவிர, காயப்பட்டவர்களுக்கு இழப்பீடாக, ஒவ்வொருவரும் ஒரு லட்சம் ரூபா வீதம் 3 லட்சம் ரூபா செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்று தீர்ப்பளித்தது. (வ-ம)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 01.03.2016 | வெற்றி வாரம் 1949 | வர்ணம் நீலம்
மேடம்
வெற்றி இலக்கங்கள் 16 30 42 43
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000/-
2016-03-04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919

நியத்த ஜய
வெற்றி வாரம் 441
திகதி 01.03.2016
வர்ணம் மஞ்சள்
வாசி தஹரச
விஷேட வெற்றி இலக்கம் 2281
எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜாக்பொட் பரிசுத்தொகை ரூ 12,855,120/-
வெற்றி இலக்கங்கள் 01 11 34 65 Q
011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919
Tel: 011 4 824 824
04.03.2016 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

## வேலையாள்கள் தேவை
பிரபல தனியார் சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு ஆண் / பெண் இருபாலாரும். கல்வித்தகைமை தேவையில்லை வயது 18-45 வரையானவர்கள்.
(மன்னார் நகர்ப்பகுதி அண்மையில் உள்ளவர்கள்)
தொடர்புகளுக்கு: 076 6889 592

## உடனடி வேலை வாய்ப்பு
☼ கனரக வாகன சாரதிகள் (Heavy Vehicle Drivers)
குறிப்பு: வயதெல்லை 35 வயதுக்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது.
தகுதி உள்ளவர்கள் தமது விண்ணப்பம் மற்றும் செல்லுபடியாகும் வாகன சாரதி அனுமதிப்பத்திரத்துடன் நேரில் வரவும்.
மனிதவள முகாமையாளர்
45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
021 222 6239
(c 29585) (14,17,20)

## ஸ்ரீ சரணியா சிவில் என்ஜினியரிங் கொன்ஸ்ரக்ஷன்ஸ் அன்ட் ஹாட்வெயார்
### வேலைக்கு ஆள்கள் தேவை
❖ லாண்ட் மாஸ்ரர் ஓட்டுனர்
பொருள்கள் ஏற்றி பறிப்பதற்கும், லாண்ட் மாஸ்ரர் வேலை இல்லாத நேரங்களில் யார்ட் இல் வேலை செய்யவும் ஒரு ஆள் தேவை.
❖ உதவி நிர்வாகி
மேற்படி யாழ்ப்பாணத்தில் உள்ள நிறுவனத்துக்கு உதவி நிர்வாகியாக பணிபுரிய A/L தகைமையுள்ள ஒரு பெண் தேவை.
அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தட்டாதெருச் சந்தி
தொடர்புகளுக்கு: No.127, ஐயனார் கோயில் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.இல: 071 704 1492, 077 811 8300
(69750) (10.17.20)

## SPOKEN ENGLISH
இளைஞர் யுவதிகள், பல்கலை புகுமுக மாணவர்கள் அரச தனியார் ஊழியர்கள், வெளிநாடு செல்வோர் இணையமுடியும்.
"அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 05.03.2016 சனிக்கிழமை
1. காலை 10.00-12.00 2. பி.பகல் 01.00-03.00 3. மாலை 03.00-05.00
பாடப்புத்தகங்கள் சான்றிதழ் மற்றும் Video DVD என்பன முழுவதும் இலவசம்.
05.03.2016 இற்குமுன் அலுவலகத்தில் பதிவுசெய்தல்வேண்டும்.
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேருக்குமட்டுமே அனுமதி உண்டு.
021 320 3313
077 1570 486

## விற்பனைக்கு
113-XXXX இலக்க CD 125 Benly மோட்டார் சைக்கிள் Four Gear,Red Colour விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6284 275

## தேவை
அரைக்கும் ஆலையில் அனுபவம் உள்ளவரும், பழகவிரும்புபவரும், பொதியிடல், பொதுவேலை என்பவற்றுக்கு பெண்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 077 1746 101

## வயல்காணி விற்பனைக்கு
இரண்டு வயல் காணிகள் விற்பனைக்குள்ளன.
01. கொட்டுக்குளி – நெற்பரப்பு – 31 (கரவெட்டி வயல்)
02. கலியாணக்குளம் – நெற்பரப்பு – 27 1/2
தொடர்பு: 077 9369 369, 077 6141 360, 078 7018 701

## வேலையாள்கள் தேவை
கொழும்பு நகரில் வேலை செய்வதற்கு பெயின்ட் வேலையாள்கள், உதவியாளர்கள் தேவை.
077 470 7511, 077 230 9164

## வேலையாள்கள் தேவை
மீசாலை புத்தூர் சந்தியில் இயங்கி வரும் நிமல் வெல்டிங் கடைக்கு வெல்டிங் வேலை தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை.
(தங்குமிட வசதிகள் கொடுக்கப்படும்)
தொடர்புகளுக்கு: 077 3456 552, 077 2792 811

## வாடகைக்கு தேவை
இருபாலைச்சந்தி / கோண்டாவில் டிப்போ சந்தி அருகில் கிளினிக் நடத்தக் கூடிய, மலசலகூட வசதியுள்ள கடை/ வீட்டின் பகுதி/சிறுவீடு வாடகைக்குத் தேவை.
T.P: 075 9292 402

## SLEAS கருத்தரங்கு
CASE STUDY யும் ஒப்பீட்டுக் கல்வியும்
பேராசிரியர் மா. சின்னத்தம்பி
ஆரம்பம் 04.03.2016 வெள்ளி 3.00 pm
CAPS No. 52, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி (Near Sampath Bank)
தொடர்புகளுக்கு: 077 3867 458

## வேலைவாய்ப்பு
கொண்டா சேவிஸ் டீலர் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் வாகன சேவிஸ் ரேசனுக்கும் மற்றும் மோட்டார் சைக்கிள் மெக்கானிக் அனுபவம் வாய்ந்தவர்களுக்கு அதிஉயர் சம்பளம் (பயிற்சியாளர்களுக்கும் சம்பளத்துடன்) தங்குமிடம், உணவு வசதிகளும் செய்து தரப்படும்.
R.R.S.C மோட்டார் இஞ்சினியேஸ் சுதுமலை றோட், மானிப்பாய்.
T.P: 021 492 7337, 076 833 9898

## Mobile Phone திருத்தும் பாடநெறி

58th Batch Starts on 04-03-2016
Software, Hardware & Unlock
*Smart Phone கள் உட்பட அனைத்து Phone களிலும் ஆரம்பம் முதல் கற்பிக்கப்படும்.
*சுயமாக வேலை செய்யும் அளவிற்கு பயிற்சி.
*இலவசமாக தகவல்கள் அடங்கிய CD & Handbook
*அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
iCS Education
77, மணிக்கூட்டு கோபுரவீதி யாழ்ப்பாணம்
Registration :- 021 7306000 076 7013060

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

**01. FACULTY OF APPLIED SCIENCE, VAVUNIYA CAMPUS, UNIVERSITY OF JAFFNA**

**Senior Professor/Professor of Information & Communication Technology**

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary)** in Environmental Science/ Information & Communication Technology

**Note:**

Preference will be given to those who have specialization at postgraduate qualification / Doctoral degree in Environmental Science/ Waste Water Treatment for the Post of Senior Lecturer Grade I/II in Environmental Science

**02. FACULTY OF ENGINEERING, UNIVERSITY OF JAFFNA**

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary)** in Computer Engineering/ Civil Engineering

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.67,100 – 11x1425 -82,775/-p.m |
| Professor | Rs.56,505 – 13x1310 -73,535/-p.m |
| Senior Lecturer Grade I | Rs.45,545 – 7x1050 – 52,895/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.39,755 – 11x790 – 48,445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27,775 – 10x645 – 34,225/-p.m |

**Note**:

In addition to the above salary, the following allowances will also be paid for academic staff:

i. Academic allowance –

| | | |
|---|---|---|
| Senior Professor | - 152% of the basic salary |
| Professor | - 147% of the basic salary |
| Senior Lecturer Gr. I /Gr. II | - 136% of the basic salary |
| Lecturer (Probationary) | - 100% of the basic salary |

ii. Special allowance -20% of the basic salary
iii. Additional Monthly Allowance-20% of the basic salary
iv. Interim Allowance- Rs.10,000/- p.m
v. Cost of living allowance - Rs.7,800/-p.m

Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff

**Statutory benefits:**

i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
iii) Gratuity payments
iv) Employees Trust Fund benefits
v) Free Medical Services.

**Closing Date:**

| | | |
|---|---|---|
| **Post of Senior Professor/ Professor** | - | **01.06.2016** |
| **Other Posts** | - | **01.04.2016** |

Applications and other documents for the post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with the covering letter. Applications for the other posts shall be sent to the **Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Thirunelvely Jaffna.**

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**01.03.2016**

(c.29583) (13.17.19.20)

## பேராசிரியர் துரைராஜா நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பேராசிரியர் துரைராஜா நினைவுப் பேருரை இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது என்று கல்லூரியின் உப தலைவர் பி. தனபாலன் தெரிவித்துள்ளார். பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா 'த பியூட்டி அன்ட் மஜிக் ஒப் நம்பர்ஸ்' என்னும் தலைப்பில் பேருரை நிகழ்த்தவுள்ளார். (ற-ஜ-ரி)

### காணி தேவை

யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றம்
தமது அலுவலக கட்டடத்தினை
நிர்மாணிப்பதற்கு வசதியாக யாழ் மாநகரசபை
எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வாகன
போக்குவரத்து வீதிகளை அண்மித்ததாக
2 தொடக்கம் 3பரப்பு காணி தேவைப்படுகிறது.

**077 678 0894/ 021 222 6609**

(c.29580) (14.19,20)

### இயந்திரம் மூலம் கழிவு நீர் அகற்றல் சேவை
### GULLY EMPTYING SERVICE

வர்த்தக நிலையங்கள் உணவகங்கள் மற்றும்
தனியார் வீடுகளில் உள்ள மலக்குழிகள்
மற்றும் கழிவு நீர்த்தொட்டி கழிவுகளை
உடனடியாக இயந்திரம் மூலம் சுத்தமாக
அகற்றிக் கொடுக்கப்படும்.

(c 29577) (14,18,20)

**தொடர்புகளுக்கு : பொது முகாமையாளர்,**
**கிளீன்வெல் (பிறைவேட்) லிமிட்டெட்**
இல: 154, 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
021 222 4128, 077 220 9592

### யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
### பழைய மாணவர் பொதுக்கூட்டம் - 2016

7/2013 சுற்றறிக்கைக்கு அமைவாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கான பழைய மாணவர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் 12.03.2016 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(c/29578)(11,19,20) **அதிபர்.**

# சொலெக்ஸ்
## நீர் பம்பிகள்
# உயர்ந்த.நம்பிக்கையான




ரூபா.8450/- முதல்...

**0773 658869**
விற்பனைப் பிரிவு - அவசர தொடர்புகளுக்கு

சொலேக்ஸ் வரையறுக்கப்பட்ட இஞ்சினியரிங் தனியார் கம்பனி
இல. 39, புதிய நுகே வீதி, பேலியகொடை, இலங்கை.

### UNIVERSITY OF JAFFNA,
### SRI LANKA

**PHYSICAL EDUCATION UNIT**
**WALK -IN – INTERVIEW**

Walk in interview for the post of Visiting Instructor in Physical Education for the following fields which is scheduled to be held on **08.03.2016 at 9.30 a.m** at the Board Room of this University has been postponed to **10.03.2016 at 12.00 noon** due to unavoidable circumstances.

**Volley ball-Women / Chess-Men / Chess-Women / Karate / Rugby / Tennis**

All the qualified candidates for the above post are requested to be present for the Walk in interview at 12.00 noon on 10.03.2016 with relevant certificates, NIC and **self prepared application**.

REGISTRAR
01.03.2016

(c/29582) (11,17,20)

### போதையில் இடையூறு ஐவருக்கு அபராதம்

பொது இடத்தில் மதுபானம் அருந்திப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த 5 பேருக்கு 12 ஆயிரத்து ஐநூறு ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று. தலா 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து மல்லாகம் மாவட்ட மேலதிக நீதிவான் ரீ. கருணாகரன் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தார். மானிப்பாய் பொலிஸார், 5 பேருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். வழக்குகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டன. அதன் போது குறித்த ஐவரையும் எச்சரித்த நீதிவான் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ற-ஜ-4,107)

### கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ். ஐந்து சந்திப் பகுதியில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ். குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுமுன்தினமிரவு 7 மணியளவில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 2 கிராம் 70 மி.கிராம் கஞ்சா பைக்கற்றுக்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபர், பொலிஸாருக்கு முன்னுக்குப் பின் முரணானமுறையில் பதில் அளித்துள்ளார். இதன் போது அவரின் உடைமையைச் சோதித்த போது கஞ்சா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-4,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி விழா இன்று

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை அதிபர் சீவகாருணியம் சிவநேசனின் மணி விழா நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும் என பாடசாலைச்சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். பதில் அதிபர் லெஜினா குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆசியுரை, வாழ்த்துரைகளும், பாராட்டுரைகளும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-ரி)

## பொதுமக்களின்

இணைந்து நேற்று வெளியிட்ட கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இந்தக் கூட்டத்தில், பிராந்திய மற்றும்சர்வதேச விவகாரங்கள், பொருளாதார ஒத்துழைப்பு, பாதுகாப்பு ஒத்துழைப்பு, அரசாட்சி, அபிவிருத்தி ஒத்துழைப்பு, மக்களிடையேயான உறவுகள் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டிருந்தது. ஜனநாயகம், ஜனநாயக நடைமுறைகள், நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, நீதி, நல்லிணக்கம்மற்றும் நாடாளுமன்றச்செயல்முறைகளை வலுப்படுத்தும் பொறுப்பு இலங்கை அரசுக்கு உள்ளது என்று இலங்கைப் பிரதிநிதிகளிடம் வலியுறுத்தப்பட்டது.

கடந்த ஆண்டு 19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியமை, ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இணங்கியமை உள்ளிட்ட சில பரப்புக்களில் இலங்கையில் முக்கியமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று அமெரிக்கா வரவேற்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ள பொறுப்பை நிறைவேற்றுவதற்கு இலங்கைக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

மக்களுடன் கலந்துரையாடி புதிய அரசமைப்பை உருவாக்கும் இலங்கை அரசின் முயற்சிகள் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலாகச் சர்வதேச சட்டங்களுக்குஏற்றவகையில்பொருத்தமானசட்டம்ஒன்றைக்கொண்டு வரும் முயற்சிகளை அமெரிக்கா வரவேற்கிறது.

காணிகளை உண்மையான உரிமையாளர்களிடம் ஒப்படைக்க அரசு எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டிய அமெரிக்கா, எஞ்சியுள்ள காணிகளையும் விரைவாக உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வலியுறுத்தியுள்ளது.

போருக்குப் பிந்திய தேவைகளை ஈடு செய்யும் வகையில், இலங்கை மேற்கொள்ளும் பாதுகாப்புத்துறை மறுசீரமைப்புக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கும் என்றும் கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டுக் கலந்துரையாடலில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான இடைநிலைச்செயலர் தொமஸ் சானொன் தலைமையிலான அமெரிக்க அதிகாரிகளும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான அதிகாரிகளும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

**வேலை ஆள் உடன் தேவை**

வவுனியா குட்செட் வீதியில் இயங்கிவரும் விநியோக நிறுவனம் ஒன்றுக்கு விநியோக உதவியாளர் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 112 5931 (68272)(6.19.20)

**சிறுநீரகம் தேவை**

B+ அல்லது O+ உடைய சிறுநீரகம் உடனடியாகத் தேவைப்படுகின்றது. தகுந்த சன்மானம் வழங்கப்படும். (e 29736)(14,18,20)

தொடர்பு: 076 860 3162

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் சகலவசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. காரியாலயம் நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு : 077 365 5824

**விஷேட பல் வைத்திய சேவை**

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

**தென்னிந்திய திருத்தலயாத்திரை**

**நாள்கள் - 16 யாத்திரிகர் - 10**

**ஆரம்பம் - 10.04.2016**

**தமிழ் நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கு ஊடாக திருத்தல யாத்திரை தரிசிக்கும் ஆலயங்கள்.**

உச்சிப்பிள்ளையார், பிள்ளையார்பட்டி,மணக்குளவிநாயகர், காணிப்பாக்கம் விநாயகர், திருப்பதி, சிதம்பரம், திருவெண்ணாமலை, காளகஸ்த்திரி, ஏகாம்பரேஸ்வரர், திருவானைக்காவல், திருவாரூர், திருவிடைமருதூர்,திருவையாறு, தஞ்சாவூர், இராமேஸ்வரம், **உத்திரகோசமங்கை, திருப்புலாணி**, நவபாஷாணம், குருவாயூர், **ஐயர்மலை, சிவன்மலை, பொற்கோயில்,** பத்மநாதசுவாமி, கொடுங்களூர், பகவதிஅம்மன், சுசீந்திரம்,கபாலிஸ்வரர், பஞ்சவடி, அனந்த மங்கலம், ஆஞ்சினேயர் மதுரை மீனாட்சி, கன்னியாக்குமரி,மைசூர் சாமுண்டீஸ்வரி, நந்திகோயில், ஸ்ரீரெங்கம், ஸ்ரீரெங்கபட்டிணம், சமயபுரம், மேல்மருவத்தூர் **பிம்மாகோயில். 9 நவக்கிர ஆலயங்கள்** தனித்தனியாக, திருநள்ளாறு சனிபகவான் உட்பட, ஆறுபடை வீடுகள் (திருச்செந்தூர், பழனி, பழமுதிர்சோலை, திருத்தணிகை, திருப்பரம்குன்றம், சுவாமிமலை,குன்றக்குடி, பைரவன்பட்டி பைரவர், காமாட்சி, வனத்திருப்பதி, திருக்கடையூர் அபிராமி உட்பட 60 இற்கு குறையாத ஆலயங்கள் தரிசிக்கலாம்.

முக்கியமாக கும்பகோணம் மகாமயை குளத்தில் கும்பமேளா நடந்த இடத்தில் 90 நாள்களுள் நீராடினால் தோஷங்களும் பாவங்களும் நீங்கும் என்பது ஐதீகம் புனித குளத்தில் நீராட விஷேஷ ஏற்பாடுசெய்து தரப்படும்.

**தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை** இருவழி விமான ரிக்கட், 3 வேளை சுத்தமான - சுகாதாரமான சைவ உணவு, குடிநீர், 2பேருக்கு குளியலறை இணைந்த அறைகள், ஏசி வாகனவசதி சகல ஆலய நுழைவுக் கட்டணங்கள், உட்பட மேலதிக விவரங்களை கேட்டு அறிந்து பதிவுசெய்யவும்.

கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் (ராஜன் - மகன்)
59. 3 /6, செட்டியார்தெரு,
கொழும்பு - 11
T.P. 077 768 0102, 077 736 2154
F.B.: sridevisriranganathan.thuraiappa

உ
சிவமயம்

தொண்டர் நாள்தோறும் துதிசெயவருள்செய் கேதீச்சரமதுதானே

# திருக்கேதீச்சர ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா



மன்மத ஆண்டு மாசித் திங்கள் 24ஆம் நாள்

(07-03-2016)

திருக்குடத் திருமுழுக்கு (அபிடேகம்) பூசை, அர்ச்சனை நிகழ்வுகளும், சிறப்பு நிகழ்ச்சிகளும் அலங்கார மண்டபத்தில் இடம்பெறும்.

மகாலிங்கப் பெருமானுக்கு வழமைபோல் பாலாவித் தீர்த்தத் திருமுழுக்கு செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

- நான்கு யாமங்களிலும் திருமுழுக்கும் பூசைகளும் இடம்பெறும்.
- நள்ளிரவு 12.15க்கு இலிங்கோற்பவ பூசை இடம்பெறும்.

*சிவனடியார்கள் திரண்டு வாரீர் எம் பெருமானின் அருளைப் பெறுக.*

(67828) (13.19.20)

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியத்தின் முன் கவனவீர்ப்புப் போராட்டம்

கொழும்பு, மார்ச் 2

ஐ.நா. மனித உரிமைகள் சபை நோக்கிய மனிதநேய ஈருருளிப் பயணம், ஐரோப்பிய ஒன்றியத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்துடன் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

கவனவீர்ப்புப்போராட்டத்தில், 'தமிழின அழிப்புக்கு நீதி வேண்டும்', 'சர்வதேச சுயாதீன விசாரணை வேண்டும்', 'எமக்கு வேண்டும் தமிழீழம்', 'எமது தலைவர் பிரபாகரன்' போன்ற கோசங்களை போராட்டக்காரர்கள் எழுப்பியதோடு, தமிழ் மக்களின் அவலங்களை வெளிப்படுத்தும் பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.



அதனைத் தொடர்ந்து தமிழின அழிப்புக்கு சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுறுத்தி ஐ.நா. நோக்கிய மனித நேய ஈருருளிப் பயணம் ஆரம்பமானது. சமநேரத்தில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் அரசியல் சந்திப்புக்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ந-ஐ-5)

## சிறுமி துஷ்பிரயோகம்; சிறுவனுக்கு விளக்கமறியல்

10 வயதுக்கு உட்பட்ட சிறுமி மீது துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 17 வயதுச் சிறுவனை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். சிறுவர் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சிறுமியின் வீட்டில் எவரும் இல்லாத நேரம் பார்த்து உட்புகுந்த குறித்த சிறுவன், சிறுமியை அழைத்து துஷ்பிரயோகம் செய்துள்ளான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை அங்கு எதேச்சையாக வந்த சிறுமியின் தந்தை கண்டுள்ளார்.

அதனையடுத்து சிறுவன் தப்பிச் சென்றுள்ளான். இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அன்று இரவு 12 மணியளவில் சிறுவன் கைது செய்யப்பட்டான். சிறுமியை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் சிறுவனை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ந-ஐ-4,107)

## ஞானசார

அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பின் புறநகர்ப் பகுதியான மாலபேயில் அமைந்துள்ள கத்தோலிக்க போதனை நிலையமொன்றை, கடந்த 2008ஆம் ஆண்டு தாக்கி சேதப்படுத்தியதற்காக கலகோட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட 13 சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணையில் இருந்த நிலையில், கடந்த 2014ஆம் ஆண்டு சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேல் நீதிமன்றத்தின் குறித்த தீர்ப்பு சட்டவிரோதமானது என மேன்முறையீடு செய்த சட்டமா அதிபர், சந்தேக நபர்களுக்கு தண்டனை வழங்க போதுமான ஆதாரங்கள் இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

சட்ட மா அதிபரின் வேண்டுகோளை கருத்திற்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்த வழக்கை மீள விசாரிக்க தற்போது அனுமதி வழங்கியுள்ளது.

இந்த நிலையில் குறித்த வழக்கு தொடர்பான விசாரணை எதிர்வரும் 28ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகோட அத்தே ஞானசார தேரர், நாட்டில் பௌத்தர்களின் உரிமை பறிக்கப்பட்டு வருகின்றது. எத்தகைய இடையூறு வந்தாலும் பௌத்தர்களின் உரிமையை காக்க தொடர்ந்து நாம் போராடப் போகின்றோம் -என்றார். (த-வ)


## கண்ணீர் அஞ்சலி

கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் தேவஸ்தானத்தின் தலைவரும், பஞ்சகர்த்தாக்களில் மூத்த உறுப்பினர்



"சாகித்ய ரத்னா"
கலாநிதி கந்தையா குணராசா
(செங்கையாழியான், SLAS - I)(ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் -நல்லூர், பதிவாளர் - யாழ்.பல்கலைக்கழகம் ஆணையாளர் - யாழ்.மாநகரசபை)

இவர் நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் ஆலயத்தின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்று எமது ஆலயத்தின் வளர்ச்சிக்காகப் பெரிதும் தன்னை அர்ப்பணித்தவர். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(69727) (11,19)
பரிபாலன சபையினர்,
கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் தேவஸ்தானம்.

## கண்ணீர் அஞ்சலி

சிற்றம்பலம் சண்முகரட்ணம்

எமது கல்லூரியின் முன்னாள் மாணவரும், நிதியத்தின் கொடையாளியுமான சண்முகரட்ணம் கிருபானந்தன் அவர்களின் தந்தை காலமான செய்தி எம்மையெல்லாம் ஆழ்ந்த கவலைக்குள்ளாக்கியது. அவரை இழந்த குடும்பத்தினர் அனைவருக்கும் நிதியத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய கொக்குவில் கிருபாகரசிவசுப்பிரமணிய சுவாமியை வேண்டி நிற்கின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்.
(69734) (11,19,20)

## கண்ணீர் அஞ்சலி

அமரர் சிற்றம்பலம் சண்முகரத்தினம் (சனா)

கல்லூரி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வசிப்பிடமாகவும், தீர்த்த உபயகாரரும் எமது ஆலயத்தை சார்ந்தவருமாகிய அமரர் சிற்றம்பலம் சண்முகரத்தினம் (சனா) அவர்கள் காலமானதை யிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலன சபையினர் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலன சபை.
(69653) (13,18)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
## நெஞ்சில் நிழலாடும் நினைவுகளோடு ஆண்டுகள் 25



அமரர்
நாகமணி சிவக்கொழுந்து
(சிவபாலன் மில் உரிமையாளர்)
மண்ணகம் 04.01.1924
விண்ணகம் 08.03.1991
திதி:அபரபக்க அட்டமி

சீரோடும் சிறப்போடும் பேரோடும் புகழோடும்
ஊர்போற்ற வாழ்ந்து சென்ற உத்தமரே ஐயா - நீங்கள்
ஆறாத துயர் தந்து ஆண்டுகள் இருபத்தைந்தாயினவோ?
வாழ்க்கை எனும் பாடத்தை வடிவாகக் கற்றுத் தந்தீர்
வழி நடத்த ஆளின்றி தவிக்கின்றோம் நாமிங்கே...

போக்கால வீதி,
உடுப்பிட்டி.
(69736)(11,19,20)
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர் கலாநிதி
கந்தையா குணராசா

எமது நீண்டகால நண்பரும், எமது புத்தகசாலைக்கு பல ஆக்கங்களை எழுத்து வடிவில் தந்தவருமான கந்தையா குணராசா அவர்களின் மறைவினால் நாம் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்.
ஸ்ரீலங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

உரிமையாளரும், ஊழியர்களும்.
லங்கா புத்தகசாலை
கொழும்பு -12
(c/29572) (11,19)

சிவமயம்
## சபிண்டிகரண வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 31 . 04 . 1931
மறைவு 01 . 02 . 2016

அமரர் திருமதி பரமேஸ்வரி சந்திரசேகரம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.03.2016) புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன வைபவத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அவரைப் பிரிந்து துயருற்றிருந்தவேளையில் எம் துயரத்தில் பங்கேற்று ஆறுதல் கூறியவர்களுக்கும், ஈமச்சடங்கில் பங்கேற்று அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி, தொலைநகல், கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும், நிறுவனங்களுக்கும், பலவழிகளிலும் எமக்குதவிய உறவினர், நண்பர்கள், அயலவர்கள் ஆகிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.916,
கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(69671)(17,19)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
ஜெயதேவி வேலாயுதம்
மலர்வு 03.02.1941
உதிர்வு 08.03.2010
திதி:அட்டமி (02.03.2016)

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
கந்தவனத்து முருகப் பெருமான் திருவருளால்
உங்கள் ஆன்மா சிவப்பேறு பெற
அல்லும் பகலும் கந்தவனத்து முருகனை
வணங்கி நிற்கின்றோம்...

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணபதி,வதிரி,
நெல்லியடி வடக்கு,
கரவெட்டி
(65939)(11,18)
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கம் உருவாக வேண்டுமெனில் அரசியல் கைதிகளுக்குப் பிணை வழங்குக

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 2
நல்லாட்சி என்றுகூறும் இந்த அரசு தமிழ்,சிங்கள மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமெனின்,அரசியல் கைதிகளுக்குக் குறைந்த பட்சம்,பிணையாவது வழங்க வேண்டும். அவர்களதும்-அவர்களது குடும்பத்தினதும் தமிழ் சமூகத்தினதும் அபிமானங்களை வென்றெடுப்பதன் ஊடாகவே சுமுகமான ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்த முடியும். - இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

இது தொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2015 ஆம் ஆண்டு ஜனவரியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபின்னர் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நல்லெண்ண சமிக்ஞை சிலவற்றைஅரசுகாட்டியிருந்தாலும், தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்காக அரசு செய்ய வேண்டிய மேலும் பல விடயங்கள் உள்ளன. அந்தப் பிரச்சினைகளில் முதன்மையானதாக அரசியல் கைதிகளின் பிரச்சினை உள்ளது.

அரசியல் கைதிகள் தொடர்பில் மிகவிரைவில் தீர்வுத் திட்டம் ஒன்றை வழங்குவதாக உறுதி பூண்ட அரசு,இதுவரை அதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்காமை வருத்தமளிக்கிறது. நாட்டில் தமிழர்களை ஒடுக்குவதற்காகத்திட்டமிட்டுக்கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாகக் கைது செய்யப்பட்ட தமிழர்கள் பலர் காணாமற்போயுள்ள நிலையில் ஏனையோர் சிறைக்கூடங்களில் வாடுகின்றனர்.

அரசியல் கைதிகள் சிறைகளில் 20 வருடங்களுக்கு மேலாகச் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். அவர்களில் பலர்மீது வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் சிறைக் கூடங்களில் அவர்களைத்

> "அரசியல் கைதிகள் தொடர்பில் மிகவிரைவில் தீர்வுத் திட்டம் ஒன்றை வழங்குவதாக உறுதிபூண்ட அரசு, இதுவரை அதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்காமை வருத்தமளிக்கிறது. நாட்டில் தமிழர்களை ஒடுக்குவதற்காகத் திட்டமிட்டுக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஊடாகக் கைது செய்யப்பட்ட தமிழர்கள் பலர் காணாமற் போயுள்ள நிலையில் ஏனையோர் சிறைக்கூடங்களில் வாடுகின்றனர்."

தடுத்து வைத்திருப்பது ஒரு ஜனநாயக நாடு என்று தன்னை அடையாளப்படுத்தும் இலங்கைக்குப் பொருத்தமானதா? என்ற சந்தேகம் எழுகிறது.

அரசியல் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நிலைமையானது மிக மோசமானதாகவும்,கவலைக்கிடமாகவும் உள்ளது. அர சியல் கைதிகள் பலர் தம் வாழ் நாளில் பெரும் பகுதியைச் சிறைகளிலேயே கழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அவர்களது குடும்பங்களும் குடும்பத் தலைவர்களின் உதவியின்றி,வாழ்வாதாரத்தை இழந்த நிலையில்,அயலவர்களிடம் கையேந்துகின்ற கையறு நிலைக்குத்தள்ளப்படுகின்றமையைப் பார்க்கும்போது மனவேதனை அடையாதவர்கள் எவரும் இருக்க முடியாது. எனவே இந்த விடயத்தில் கூடுதல் கரிசனை காட்டப்பட வேண்டும்.

எனவே,யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் என்ற ரீதியில் நாம் வேண்டுவது, அரசியல் கைதிகள் விடயத்தில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசியல் தலைவர்கள் அனைவரும் கூட்டாக இணைந்த நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பக்கூடிய தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதோடு குறைந்த பட்சம் அவர்களுக்கான பிணையையாவது வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அத்தோடு அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் இனமத பேதமின்றி பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கைதிகள் ஒற்றுமையாகச் செயற்பட்டு அவர்களின் நல்வாழ்வுக்கு ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்- என்றுள்ளது.

(ற-4)

## சிவராத்திரியை முன்னிட்டு சமயப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 2
மகா சிவராத்திரியை முன்னிட்டு வட மாகாண ரீதியிலான இந்து சமயப் அறிவுப் போட்டிகளை அரியாலை சக்தி கலாசார அபிவிருத்தி மன்றம் நடத்தவுள்ளது.

மகா சிவராத்திரியை முன்னிட்டு இந்து ஆலயங்களைத் தரிசிப்பதற்கான தலயாத்திரை பரிசிலைப் பெற்றுக்கொள்வதற்காக இந்தப்போட்டி நடத்தப்படுகிறது.

போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் சக்தி கலாசார அபிவிருத்தி மன்றம்,நொத்தாரிஸ் வீதி.அரியாலை யாழ்ப்பாணம்,என்ற முகவரியில் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெறமுடியும்.(ற-ஜ-7)

## வள்ளுவர் குருபூசை

யாழ்ப்பாணம், மார்ச் 2
கல்வியங்காடு வீரபத்திரர் ஆலய ஞானபாஸ்கரரோதய அற நெறிப்பாடசாலையில் எதிர் வரும் 6 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருவள்ளுவர் குரு பூசை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் பூநகரிக் கோட்ட ஓய்வுநிலை பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார்.

அறநெறிப்பாடசாலை மாணவர்களின் குழுப்பாடல், திருக்குறள் மனனப் போட்டி, திருவள்ளுவர் பற்றிய பேச்சுப் போட்டிகளும் நடைபெறவுள்ளன என்று தலைவர் இ. இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி)

# உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள கைதிகள் விடுதலைக்கு உதவுக

## உறவுகள் உருக்கமாக வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச் 2
மகசின்சிறைச்சாலையில்உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் உதவ வேண்டும் என்று உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மகசின் சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 14 பேர் தங்களது விடுதலையை வலியுறுத்திக்கடந்த ஒரு வாரமாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

அவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில்மகசின் சிறைச்சாலையிலுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகள் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை ஒருநாள் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

தொடர்உணவுதவிர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 14 தமிழ் அரசியல் கைதிகளின் உடல் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றபோதும்,அவர்களது கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த நிலையில், செய்வதறியாது கண்ணீரோடு அலையும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகளாகிய நாம், உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடும் எமது உறவுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் கோருகின்றோம் - என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ற-ஜ-5-சி)

# யாழ்ப்பாண புறாக்கள் மன்னாரில் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2
யாழ்.குருநகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த வருடம் 60 சோடி புறாக்கள் திருடப்பட்டிருந்த நிலையில், அவற் றில் 9 சோடி புறாக்கள் மன் னார் பள்ளிமுனைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து மீட்டுள்ளனர் என்று யாழ்ப்பாண குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏற்கனவே இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மன்னார் மற்றும் குருநகர் பகுதியைச் சேர்ந்த இருவர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலமாக இந்தத் திருட்டு மற்றும் தகவல்கள் கிடைத்துள்ளன. அதனடிப்படையில் மன்னாருக்குச் சென்ற பொலிஸார் குறித்த புறாக்களை மீட்டுள்ளனர்.

இது தொடர்பில்தொடர்ச்சியான விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று குற்றத் தடுப்பு பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-ஜ-4,107)

# தூய்மை பேணாதோர் மீது இனிமேல் சட்ட நடவடிக்கை

## கரவெட்டி பிரதேச சபைச்செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 2
பிரதேசத்தின் தூய்மையைப் பேணாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென கரவெட்டி பிரதேசசபை செயலாளர் திருமதி க.ஜெகநாதன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வீடுகளில் காணப்படும் உக்கும் கழிவுகளை சேதனப் பசளையாக மாற்றுவதற்கும் உக்காத கழிவுப்பொருள்களான பிளாஸ்ரிக், இரும்பு, கண்ணாடி, பொலித்தீன் என்பவற்றை தனித்தனியாக பைகளில் இட்டும்.பிரதேச சபை வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும்.

உரிய பராமரிப்பின்றி வீட்டுக் காணிகள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் முன் வீதிகளில் பற்றைகள் புற்கள் கழிவுகள் காணப்படின் 3 நாள்களுக்குள் துப்புரவு செய்யத் தவறின் குற்றப் பணமாக ஆயிரம் ரூபா விதிக்கப்படும். அத்தோடு தத்தமது சூழலில் உள்ள பாத்தீனியச் செடிகளை அழிக்க வேண்டும் - என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ற-ஜ-422)

## அனுமதியின்றி மணல் ஏற்றிச் சென்றவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச். 2
சட்டவிரோதமான முறையில் லாண்ட் மாஸ்ரரில் மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் அதன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதோடு, லாண்ட் மாஸ்ரரும் பறிமுதல் செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மிருசுவில்மேற்குப்பகுதியில் வீதி ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், குறித்த லாண்ட் மாஸ்ரரை மறித்து சோதனையிட்டனர். அதன் போது அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்ந்து சென்றமை கண்டுபிடிக்கப் பட்டது. (ற-ஜ-4,107)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முள்ளியவளையில் உள்ள களஞ்சியத்தில் நெல் களஞ்சியப்படுத்த அனுமதியுங்கள்

## மாவட்ட கமக்கார அமைப்புக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 2

ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தக்கூடிய வசதியுள்ள முள்ளியவளை நெல் சந்தைப் படுத்தும் சபைக்குரிய நெற்களஞ்சிய சாலை,முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்தின் தேவைக்காகப்பயன்படுத்தப்படுகின்றது. அதை மீட்டு விவசாயிகளுடைய நெல் கொள்வனவுக்கு உதவ வேண் டும்.– இவ்வாறு மாவட்ட கமக்கார அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது குறித்துக் கேட்டபோது, விவசாயிகளின் வயிற்றில் அடித்து மாவட்டச்செயலகத்தின் தேவைக்காக களஞ்சியசாலைகளைப் பயன்படுத்த வேண்டிய தேவை இல்லை. ஒருபோதும் அப்படிச் சிந்திக்கவில்லை என்று தெரிவித்தார் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன்.


கோப்புப் படம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபையால் விவசாயிகளுடைய கால போக நெல் உரிய விலையில் கொள்வனவு செய்யப்பட்டது. ஆனால் பல ஏக்கர்களில் நெற் செய்கை மேற்கொண்ட விவசாயிகளிடம் இருந்து 2ஆயிரம் கிலோநெல்மட்டுமேகொள்வனவு செய்யப்பட்டது. நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்கு களஞ்சிய வசதிகள் இல்லை எனத் தெரிவித்து விவசாயிகளுடைய பல்லாயிரம் கிலோ நெல், சபையால் கொள்வனவு செய்யப் படவில்லை.

நெல் சந்தைப்படுத்தும் சபையினரால் கொள்வனவு செய்யப்பட்ட 2 ஆயிரம் கிலோ நெல்லைத் தவிர அறுவடை செய்த தமது மிகுதி நெல்லைச் சந்தைப் படுத்த முடியாத அவல நிலையில் உள்ளோம் என்று விவசாயிகள் தெரிவித்தனர். மிகுதி நெல்லை மீண்டும் தனியாருக்கே வழங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும், அதனால் தாம் பெரும் நட்டத்தை எதிர் கொள்ள வேண்டி ஏற்படும் என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

அதேவேளை நெற் களஞ்சிய சாலை ஒன்று 2010 ஆம் ஆண்டு மீள் குடியமர்விலிருந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் பொறுப்பில் உள்ளது. மீள் குடியமர்வு இடம்பெற்ற கால கட்டத்தில் மீள்குடியமர்ந்தவர்களுக்கு உலர் உணவுகளை வழங்குவதற்காக உலக உணவுத் திட்டத்தினரால் உலர் உணவுப் பொருள்களின் களஞ்சியமாக இது பயன்படுத்தப்பட்டு வந்தது.

தற்போது அவர்களின் நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து முல்லைத் தீவு மாவட்டச் செயலகத்தினர் தமது தேவைக்கான களஞ்சிய சாலையாக அதனைப் பயன் படுத்தி வருகின்றனர்.

இந்தப் பெரிய கட்டடத் தொகுதியின் சிறு அளவையே இவர்கள் தமது களஞ்சியத் தேவைக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே மாவட்டச் செயலகத்தினர் தமது களஞ்சியத் தேவைக்காக வேறு இடத்தைப் பயன்படுத்திக் கொண்டு குறித்த களஞ்சிய சாலையை விடுவிக்க வேண்டும். விடுவித்தால் அதில் ஆயிரம் மெற்றிக்தொன்நெல்லைக்கொள் வனவு செய்து களஞ்சியப்படுத்தலாம் என கமக்கார அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இது தொடர்பில் முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

குறித்த களஞ்சி சாலை, உலக உணவுத் திட்டத்தினரால் மாணவர்களுக்கு வழங்கப்படும்உணவுகளைக்களஞ் சியப்படுத்துவதற்காகவே பாவிக்கப்படுகின்றது.

உணவைப் பாதுகாப்பதற்கு சிறந்த களஞ்சிய சாலையே தேவை என்ற காரணத்தாலேயே இந்தக் களஞ்சிய சாலை அதற்குப் பயன்படுத்தப் படுகின்றது. இதைவிவசாயிகளிடத்திலே ஒப்படைத்தால் உலக உணவுத் திட்டத்தினரால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுகளைப் பாதுகாப்பது கடினம்.

அத்தோடு இடர்களின் போது வழங்கப்படும் உலருணவுகளையும் குறித்த களஞ்சிய சாலையிலேயே பாதுகாக்கின் றோம். இந்தக்களஞ்சியசாலையை தற்போது நெல் களஞ்சியப்படுத்துவதற்காக ஒப்படைத்தால் உலக உணவுத் திட்டத்தில் வரும் உணவுப்பொருள்களைப் பாதுகாக்க முடியாது.

அதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட்ட பலர் பாதிக்கப் படுவார்கள். விவசாயிகளின் வயிற்றில் அடித்து மாவட்டச்செயலகத்தின் தேவைக்காக களஞ்சியசாலைகளைப் பயன்படுத்த வேண்டிய தேவை இல்லை. ஒருபோதும் நான் அப்படிச்சிந்திக்கவில்லை. விவசாயிகளுக்குத் தேவையானதை எங்கிருந்தாவது பெற்றுக்கொடுத்தே வருகின்றேன். – என்றார்.

(ற–ஐ–21,102)

> **“முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளிடம் இருந்து நெல் சந்தைப்படுத்தும் சபையால் 2 ஆயிரம் மெற்றிக்தொன் நெல்லே கொள்வனவு செய்யப்பட்டது. விவசாயிகளிடம் இன்னமும் பெரும் தொகையான நெல் உள்ளபோதும், அவற்றைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தும் வசதி இன்மையால் நெல் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்யவில்லை. அதனால் நெற் செய்கை மேற் கொண்ட விவசாயிகள் பெரும் நட்டத்தின் மத்தியில் அவற்றைத் தனியாருக்கு விற்க வேண்டிய நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளனர்.”**

# கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதி அடுத்த வருடம் பிரதேச சபையிடம்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

திருகோணமலை, மார்ச் 2

தொல்பொருள் திணைக்களத்தின் பராமரிப்பில் இருந்து வரும் கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியைக் கடந்த காலங்களைப் போன்று, உப்புவெளி பிரதேச சபையிடம் மீளவும் கையளிப்பதற்கு திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம்இடம்பெற்றது. இதன்போதுகிழக்குமாகாணசபையின் உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன், கன்னியா வெந்நீர் ஊற்றுப்பராமரிப்புத் தொடர்பான விடயத்தை முன்வைத்தார்.

கடந்த காலங்களில் கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியைப் பராமரித்து அதன் வருமானங்களை உப்புவெளிப் பிரதேச சபையே பெற்று வந்தது. 2009 ஆம் ஆண்டு போர் வெற்றியின் பின்னர், இந்தப் பராமரிப்பு மற்றும் வருமானங்கள் பெறும் நடவடிக்கைகள் யாவும் தொல் பொருள் திணைக்களத்துக்கு மாற்றப்பட்டன. இதனை மீளவும் உப்புவெளிப் பிரதேச சபையிடமே கையளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

இதன் போது பதிலளித்த திருகோணமலை மாவட்ட அரச அதிபர் என்.ஏ.புஸ்பகுமார, 2016 ஆம் ஆண்டுக்கணக்குகள் தொடர்பான விவரங்கள் தொல்பொருள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனவே இடையில் அதனைக் குழப்ப முடியாது. அடுத்த ஆண்டு தொடக்கம், உப்புவெளிப் பிரதேச சபையிடம் பராமரிப்பைக் கையளிக்க முடியும் என்று தெரிவித்தார்.

(ற–ஐ–5–40)



180 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள வவுனியா பொது வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா நேற்றுக் காலை வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வடமாகாண சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 180 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது. அடிக்கல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர்கான எம்.பி.நடராஜ் , ம.தியாகராசா, ஜெயதிலக ஆகியோர் நட்டனர். இதனைவிட, 32 லட்சம் ரூபா செலவில் ஆஸ்திரேலிய வைத்தியர்களின் அமைப்பால், வவுனியா பொது வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட இயந்திரத் தொகுதியும் இதன்போது கையளிக்கப்பட்டது. (ற–ஐ–5)

# கரைதுறைப்பற்றுக்கு விரைவில் பிரதேச செயலர் நியமனம்

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்றின் பிரதேச செயலராக தற்போது துணுக்காய் பிரதேச செயலராகப்பணிபுரியும் குணபாலனை நியமிக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றின் பிரதேச செயலராகப் பணிபுரிந்த முன்னாள் செயலர், வவுனியாமாவட்ட மேலதிக செயலாளராக பணி மாற்றம்செய்யப்பட்டுள்ளதை அடுத்து கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பணியிடம் வெற்றிடமாகக் காணப்பட்டது.

மாவட்டத்தின் [illegible] பிரதேசசெயலர் பிரிவு நீண்டகாலம் செயலர் இன்றி மக்களின் பணி பாதிக்கப் படக் கூடாது என்பதற்காக உடன் ஆராய்ந்து தற்போது அந்த வெற்றிடத்துக்கு துணுக்காய் பிரதேச செயலராகப் பணி புரியும் குணபாலனை நியமிக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதி விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கிடைத்ததும் இந்த இடமாற்றம் வழங்கப்படும் என மாவட்டச்செயலாளர்தெரிவித்தார். (ற–ஐ–10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை. மாவட்டத்துக்கு ஆயிரம் வீட்டுத் திட்டம்

## மாவட்ட அரச அதிபர் தகவல்

முல்லைத்தீவு,மார்ச் 2
மீள்குடியேற்ற அமைச்சால் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஆயிரம் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

போரால் அதிகமாக பாதிக்கப் பட்ட மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றபோதிலும், போர் முடிந்து 7 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் மாவட்டத்தின் அபிவிருத்தி மந்த கதியிலேயே உள்ளது. மாவட்டத்தில் பலர் இன்னமும் தங்களது சொந்த இடங்களில் மீள்குடியமர முடியாத நிலையிலும் உள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை மீள் குடியமர்ந்த மக்களுக்குத் தேவையான வீட்டுத்திட்டங்கள் பூர்த்தியாக்கப்படவில்லை. தற்போது 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மாவட்டத்துக்குத் தேவை என்று மாவட்டச் செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

> வீட்டுத் திட்டங்களை எவருக்கு வழங்குவது என்பதை மக்களுடைய நிலைமைகளை அடிப் படையாக வைத்து உறுதிப்படுத்திய பின்னர் உடனடியாக குறித்த வீடுகள் நிர்மாணிக்கப்படும்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்களுக்குமிடையிலான மாவட்டத்தின் வீட்டுதிட்டத் தேவைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடை பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்டத்தின் வீட்டுத்திட்ட தேவைகள் மற்றும் மக்களுடைய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக கேட்ட போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

இதுகுறித்து அவர் கூறிய தாவது-

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான வீட்டுத்திட்டத் தேவை அதிகமாகக் காணப்படுகின்றது. குறித்த வீட்டுத் திட்டங்கள் மாவட்டத்துக்கு வருகின்ற போது அதை எவ் வாறு கையாள்வது, இதுவரை வீடுகளற்று இருக்கும் மக்களுக்கு எவ்வாறு பகிர்ந்தளிப் பது போன்ற பல விடயங்கள் குறித்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன. தற்போது உடனடியாக நடைமுறைப்படுத் தும் வகையில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மீள்குடியேற்ற அமைச்சால் ஆயிரம் வீட்டுத் திட்டம் கிடைத்துள்ளது.

இந்த வீட்டுத் திட்டங்களை உரிய முறையில் எவருக்கு வழங்குவது என்பதை மக்களுடைய நிலைமைகளை அடிப்படையாக வைத்து உறுதிப்படுத்திய பின்னர் உடனடியாக மாவட்டத்தில் குறித்த வீடுகள் நிர்மாணிக்கப்படும்.- என்றார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற குறித்த சந்திப்பில் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி, சிவமோகன், கே.மஸ்தான் மற்றும் மாகாண சபை உறுப்பினர் களான அன்ரனி ஜெகநாதன், து. ரவிகரன். கமலேஸ்வரன், சிவனேசன் ஆகியோருடன் மாவட்டத்தின் வீட்டுத் திட்ட உத்தி யோகத்தர்கள், சகல பிரதேச செயலாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற-ஜ-21,101)

### மர்ம உறுப்பைக் காட்டி சிறுமிகளைத் துரத்திய இளைஞர் கைது

முல்லைத்தீவு,மார்ச் 2
முள்ளியவளை கணுக்கேணி மேற்கில் வீதியொன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் வீதியால் பிரத்தியேக வகுப்புக் களுக்குச் சென்றுகொண்டிருந்த சிறுமிகளை இளைஞர் ஒருவர்தனதுமர்மஉறுப்பை காட்டியவாறு துரத்திச் சென்றுள்ளார்.

அந்த நேரம் அந்த வீதி வழியாக பயணித்த அவ்வூர் இளைஞர்கள் சிலர் அவரது செயற்பாட்டை நேரடியாக அவதானித்தநிலையில்குறித்த இளைஞரைப் பிடித்து கைகளை பின்பக்கமாக கட்டிவைத்து "உரிய - பிரத்தியேக கவனிப்புக்கள்" வழங்கிய பின்னர் முள்ளியவளைப் பொலிஸாருக்கு தொலைபேசி ஊடாக அறிவித்துள்ள னர். அங்கு வந்த பொலிஸார் குறித்த இளைஞரைக் கைது செய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றுள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞன் 22 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-5-102)

# 'இன்ன சிற்றி பிறெஸ்' செய்தியாளரை செய்தி சேகரிப்பதற்கு அனுமதிக்குக

## யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 2
தமிழ் மக்களுக்காகவும் மற்றும் காணாமல் போனவர்களுக்காகவும், ஐ.நா. அதிகாரிகளிடம் கேள்விகளை எழுப்பி வந்த, 'இன்ன சிற்றி பிறெஸ்' ஊடகவியலாளர் மத்தீவ் லீயை, மீண்டும் ஐ.நா. தலைமை அலுவலகத்தில் செய்தி சேகரிப்புக்கு அனுமதிக்க வேண்டும்என்றுவலியுறுத்தியாழ்ப்பாணத்தில்நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.



நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐ.நா. தலைமை அலுவலகத்தில், 'இன்ன சிற்றி பிறெஸ்'செய்தியாளருக்கான அறை வழங்கப்பட்டிருந்ததுடன், அங்கு செய்தி சேகரிப்பதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.

இலங்கை விவகாரம் குறித்து, குறிப்பாக இறுதிப் போருடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் ஐ.நா. அதிகாரிகளிடம் மத்தீவ் லீ கேள்வி எழுப்பி வந்தார். இந்த நிலையில் கடந்த வாரம் அவர், ஐ.நா. தலைமை அலுவலகத்துக்குள் நுழைவதற்கான அடையாள அட்டையும் மீளப் பெறப்பட்டு அவருக்கு வழங்கப்பட்டிருந்த அறையிலிருந்தும் அவர் வெளியேற்றப்பட்டிருந்தார். இந்தநிலையிலேயே யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கோயில் முன்பாக நேற்றுக் காலை இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. நல்லூர் கோயிலிலிருந்து அருகிலுள்ள ஐ.நா. முகவர் அலு வலகத்துக்கு, கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பேரணியாகச்சென்றனர்.

அங்கு தமது மனுவைக் கொடுக்க முற்பட்டனர். இதன்போது அங்கிருந்த அதிகாரிகள், இது ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் அல்ல என்றும், கொழும்பிலேயே அந்த அலுவலகம் அமைந்துள்ளது. அங்கே அனுப்புமாறும் தெரிவித்தனர்.

இதற்கமைய போராட்டக்காரர்கள் தொலைநகல் மூலம் தமது கோரிக்கை மனுவை அனுப்பி வைத்தனர். 'இன்ன சிற்றி பிறெஸ்' செய்தியாளரை மீளவும், ஐ.நா. தலைமை அலுவலகத்தினுள் செய்தி சேகரிக்க அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை முன்வைத்திருந்தனர். (ற-ஜ-5-106)

# அறிவுறுத்தலை உதாசீனப்படுத்தும் முல்லை. தனியார் கல்வி நிலையங்கள்

## ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்ந்தும் வகுப்பு

முல்லைத்தீவு, மார்ச் 2
ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிறுவனங்களை மூடுமாறு, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரால் கடந்த ஆண்டு கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டிருந்தபோதிலும் இன்னமும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அறநெறிப் பாடசாலைகள், ஞாயிறு பாடசாலை நடவடிக்கைகளை தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகள் குழப்புகின்றன. அதனால்ஞாயிற்றுக்கிழமை தனியார் கல்வி நிறுவனங்களை மூடுமாறும், இல்லாவிடின் மதியம் 12 மணிக்குப் பின்னர் நடத்துமாறும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரால் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 23 தனியார் கல்வி நிலையங்களுக்கும் கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டிருந் தது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் 2015 ஆண்டு இறுதிப் பகுதியில் நடைபெற்ற மாவட்ட மட்ட திணைக்களத் தலைவர்களுடனான சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலும் மேற்படி விடயம் முன்வைக்கப்பட்டிருந்தது.

மாலை 6 மணிக்குப் பின்னர் எந்தவொரு தனியார் கல்வி நிலையமும் இயங்கக் கூடாது என்று முடிவெடுக்கப்பட்டிருந்தது. இந்த நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றத் தவறும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் இதுவரையில், அவை நடைமுறைக்கு வரவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர். இதனை நடை முறைப்படுத்தாமைக்கு எதிராக தனியார் கல்வி நிறுவனங்கள் மீது எந்தச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் சுட் டிக்காட்டியுள்ளனர். (ற-ஜ-5-433)

# மறியலில் உள்ளவரின் நண்பர்கள் என நாடகமாடி பணம் கறந்தவர்கள் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 2
விளக்க மறியலில் உள்ளவரின் நண்பர்கள் எனக் கூறி வீட்டுக்குச் சென்று பொலிஸாருக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்து 10 ஆயிரம் ரூபா பணம் மற்றும் மதுபானப்போத்தல்களை வாங்கிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நீர்வேலிப் பகுதியில் நடந்துள்ளது. குறித்த இருவரையும் அச்சுவேலி இரகசிய பொலிஸார் கையும் மெய்யுமாக பிடித்துள்ளனர். அதே இடத்தைச்சேர்ந்த இருவரே கைது செய் யப்பட்டுள்ளனர் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் நீர்வேலிப் பகுதியை சேர்ந்த ஒருவரை அச்சுவேலி போக்குவரத்துப் பொலிஸார் கடந்த 2 ஆம் திகதி கைது செய்திருந்தனர்.

கைதானசாரதி மறுநாள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். 16 ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

இந்த நிலையில், சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் குறித்த நபரின் வீட்டுக்குச் சென்ற தற்போது கைது செய் யப்பட்டுள்ள இருவரும், தாம் மறியலில் உள்ளவரின் நண்பர்கள் என அறிமுகப்படுத்தியுள்ளனர்.

அவரைப் பிணையில் எடுப்பதற்கு 5 ஆயிரம் ரூபா பணம் தருமாறு கோரி வாங்கிச் சென்றனர். மறுநாள் மீண்டும் அந்நபரின் வீட்டுக்குச் சென்ற அவர்கள் பணம் போதாமல் இருப்பதாகக்கூறிமீண்டும்5ஆயிரம்ரூபா பணமும், சாராயப் போத்தல் ஒன்றையும் வாங்கியிருந்தனர்.

இந்த விடயம் அச்சுவேலிப் பொலிஸாருக்குத் தெரியவரவே சந்தேக நபர்களை இரகசியப் பொலிஸார் கைது செய்திருந்தனர். இவர்கள் இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ள பொலிஸார் விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ற-ஜ-4,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டோ விபத்துகளால் மட்டும் கடந்த ஆண்டில் 207 பேர் சாவு

## நான்குக்கு அதிகமானோரை ஏற்றினால் இனிக் கடும் சட்ட நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 2
ஓட்டோ விபத்துக்களால் மட்டும் கடந்த ஆண்டு 207 பேர் உயிரிழந்துள்ளனர். இதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், ஓட்டோக்களில் ஒரே நேரத்தில் நான்கு பேருக்கு அதிகமானோரை ஏற்றிச் செல்லும் சாரதிகளுக்கு எதிராக மிகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பண்டாரகமவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஓட்டோ விபத்தொன்றில் 3 சிறுவர்கள் சாவடைந்துள்ளனர். அத்துடன் 4 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஓட்டோக்களில் அதிக பயணிகளை ஏற்றிச் செல்லும் சந்தர்ப்பங்களிலேயே, அது கட்டுப்பாட்டை இழக்கின்றது என்று வீதிப் பாதுகாப்பு மற்றும் வாகனப் போக்குவரத்துத் தொடர்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அமரசிறி சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

> “கடந்த வருடத்தில் ஓட்டோ விபத்துக்களில் உயிரிழந்தவர்களில் 23 பேர் ஐந்து வயதுக்குக் குறைவானவர்கள். நேற்று முன்தினம் இடம் பெற்ற ஓட்டோ விபத்தொன்றிலும் 3 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.”



கடந்த வருடத்தில் ஓட்டோ விபத்துக்களில் 207 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களுள் 23 பேர் ஐந்து வயதுக்குக் குறைவானவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான விபத்துக்களைக் குறைப்பதற்காகவே, ஒரே நேரத்தில் நான்கு பேருக்கும் அதிகமான எண்ணிக்கையிலானோரை ஏற்றிச் செல்லும் சாரதிகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ற-ஐ-5)

## வாகன விபத்தில் ஆசிரியை சாவு

கொழும்பு, மார்ச் 2
பதுளைஉடுவரபாடசாலைஆசிரியை ஒருவர் வாகன விபத்தொன்றில் சிக்குண்டு அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை பண்டாரவளை பிரதான வீதியில் தெம்மோதரை உடுவர தமிழ் வித்தியாலயத்துக்கு முன்பு இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

பாடசாலை முடிந்து பஸ்ஸில் ஏற முற்பட்டபோது பஸ்ஸுக்குப் பின்னால் வந்த லொறியொன்று, பஸ் மீது மோதியதால் அவர் தவறிக் கீழே விழுந்து பஸ்ஸுக்கும், லொறிக்கும் இடையில் நசுங்குண்டு உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது. இந்த விபத்தில் மேலும் இரு ஆசிரியைகள் காயமடைந்த நிலையில் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஐ)

## எயிட்ஸ் எனும் வதந்தியால் வெறிச்சோடிய பாடசாலை

கொழும்பு, மார்ச் 2
பாடசாலையில் கல்வி கற்கும் ஆறு வயது மாணவனுக்கு எயிட்ஸ் நோய் உள்ளது என்று வதந்தி பரவியதைத் தொடர்ந்து அந்தப் பாடசாலை சில நிமிடங்களில் வெறிச்சோடிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குருநாகலையில் உள்ள பாடசாலை யொன்றிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. குறித்த மாணவனுக்கு எயிட்ஸ்நோய் இல்லை என்று மருத்துவப் பரிசோதனையின் முடிவில் மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

> “என்னால் தானா ஏனைய மாணவர்கள் இங்கிருந்து செல்கின்றனர் ? என்னால் தானா பொலிஸார் வந்துள்ளனர் ? என்று மாணவன் என்னிடம் கேட்டபோது மிகவும் வேதனை அடைந்து விட்டேன்”என்று அவனது வகுப்பாசிரியர் தெரிவித்தார்.

ஆனாலும், பாடசாலையில் கல்வி கற்கும் ஏனைய மாணவர்களின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் குறிப்பிட்ட பாடசாலையிலிருந்து அழைத்துச் சென்றுள்ளனர்.

“எனது கணவர் எயிட்ஸால் பாதிக்கப் பட்டுள்ளார் என்று பிழையான தகவல் பரவியதன் காரணமாக பல பாடசாலைகள் மகனுக்கு அனுமதியளிக்க மறுத்துவிட் டன” என்று பாதிக்கப்பட்ட மாணவனின் தாயார் தெரிவித்துள்ளார்.

“எனது மகனை வேறு பாடசாலையில் சேர்ப்பதற்கான நடவடிக்கையை எடுத்த போதிலும், எயிட்ஸ் அச்சம் காரணமாக அவர்கள் அதற்கு இடமளிக்கவில்லை” என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பெற்றோருக்கு இது குறித்து தெளிவூட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாக பாடசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாணவனுக்கு நோய்ப் பாதிப்பில்லை என்ற சான்றிதழை மாணவனின் தாயாரும், மாணவனும் வைத்திருந்த போதிலும் ஏனைய மாணவர்களின் பெற்றோர் அந்த மாணவனை அங்கிருந்து வெளியேற்றுமாறு பாடசாலை நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர்.

‘‘என்னால்தானா ஏனைய மாணவர்கள் இங்கிருந்து செல்கின்றனர் ? என்னால்தானா பொலிஸார் வந்துள்ளனர் ? என்று மாணவன் என்னிடம் கேட்டபோது மிகவும் வேதனை அடைந்துவிட்டேன்”என்று அவனது வகுப்பாசிரியர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் அந்த மாணவனுடன் இயல்பாகவே பழகினர் என்று தெரிவித்த அந்த ஆசிரியர், ஆனால் மீண்டும் வரும்போது அவர்கள் அவ்வாறு பழகுவார்களா? என்று சந்தேகம் எழுப்பியுள்ளார். (ற-ஐ-5-சி)

## அடிப்படை உரிமை மீறல் மனு யோசிதவின் சார்பில் தாக்கல்

கொழும்பு, மார்ச் 2
நிதி மோசடிக் குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோசித ராஜபக்ச சார்பில், உயர் நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்து தடுத்து வைத்திருத்தல் மற்றும் பிணை வழங்காமை ஆகியவற்றுக்கு எதிராகவே இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

யோசித ராஜபக்ச மற்றும் அவருடன் கைது செய்யப்பட்ட நால்வரும் இணைந்து இந்த அடிப்படை உரிமைமீறல்வழக்கைநேற்றுத் தாக்கல் செய்துள்ளனர்.

அதேவேளை, சி.எஸ்.என். தொலைக் காட்சி நிதி மோசடி தொடர்பிலான விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக, கடற்படையிலிருந்து யோசித ராஜபக்சவை இடைநிறுத்துவதாக கடற்படை அறிவித்திருந்தது.

அத்துடன் யோசிதவுக்கு பிணை வழங்கக் கோரி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் திங்கட் கிழமை இடம்பெற்ற போது, அந்தக் கோரிக்கை நிராகரிக்கப் பட்டிருந்தது. (ற-ஐ-5)



## தூதுவர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுப் பயிற்சி

கொழும்பு, மார்ச் 2
அனைத்து வெளிநாடுகளுக்கான இலங்கைத் தூதுவர்கள் மற்றும் உதவித் தூதுவர்களை உடனடியாக கொழும்புக்கு வரவழைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர், அனைத்துத்தூதுவர்கள்மற்றும் உதவித் தூதுவர்களை அரசு கொழும்புக்கு வரவழைப்பது இதுவே முதலாவது சந்தர்ப்பமாகும்.

இதற்கு முன்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் தூதுவர்கள் தனித்தனியாக அழைக்கப்பட்டு பதவிமாற்றங்கள், இடமாற்றங்கள் பணி இடைநிறுத்தங்கள், அறிவுரை வழங்கல்கள் போன்றவை இடம் பெற்றிருந்தன.

தூதரக அலுவலகங்களில் முக்கிய பதவிகளை வகிக்கும் பெருமளவிலானோர் அரசியல் செல்வாக்கால் நியமனங்களைப் பெற்றவர்கள் என்பதோடு, அவர்களுள் பெருமளவிலானோருக்கு தூதரக சேவை சம்பந்தமான அனுபவமோ அல்லது அறிவாற்றலோ இல்லையென்பது அரசுக்குத் தெரிய வந்துள்ளது.

இலங்கை தொடர்பில் உலக சமூகத்துள் நல்லதொரு பிரதிபலிப்பைப் பெற்றுக் கொள்வது தொடர்பான தூதரக அலுவலகங்களின் செயற்பாடு பெரிதும் காத்திரமானது என்பதால் தூதுவர்களின் சேவையை முறைப்படியானதாக மற்றும் பலம் பொருந்தியதாக செயற்படுத்திச் செல்வதே பிரதான மான குறிக்கோள் என்று அரசின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

ஒரு சில தூதரகங்களில் அரச தலைவர் மற்றும் தூதுக் குழுவினரின் பயணம் குறித்து திட்டமிட்டுச் செயலாற்றும் அளவு புரிந்துணர்வு இல்லாதிருப்பதும் தெரிய வந்துள்ளது.

இவற்றைக் கவனத்தில் கொண்டே அனைத்துத் தூதுவர்கள் மற்றும் உதவித் தூதுவர்களைக் கொழும்புக்கு வரவழைத்து விசேட பயிற்சியொன்றை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## இலங்கை இராணுவத்தினர் ஐ.நா.அமைதிப் படையில்

கொழும்பு, மார்ச் 2
இலங்கை இராணுவத்தினர் 290 பேர், ஐ.நா.வின் அமைதிப் படையுடன் இணைந்துள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இடைக் காலப் படையினருடனேயே இவர்கள் இணைந்து கொண்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவர்களில், 150 வீரர்களும், 140 ஏனைய தரங்களை சேர்ந்த அதிகாரிகளும் அடங்கியுள்ளனர். இந்தப் படைப் பிரிவினர் கடந்த 16 ஆம் திகதியன்று நாட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்தைப் பெறுவதற்கே இனவாதம் உருவாக்கப்பட்டது

## அநுரகுமார திஸநாயக்க எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 2
இந்த நாடு குருதியால் நனைந்தது. கண்ணீரால் கழுவப்பட்டது. வரலாற்றில் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சிங்கள இனவாதம், தமிழ் இனவாதம், முஸ்லிம் இனவாதம் என்பன உருவாக்கப்பட்டன. இனிமேலும் அவ்வாறான நிலைமை உருவாகக் கூடாது. - இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் இளைஞர் அமைப்பின் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிங்களக் குருதி தமிழ்க் குருதி, முஸ்லிம் குருதி என்று சொல்கிறார்கள். எம்மிடம் இருப்பது மனிதக் குருதி ஒன்று மட்டுமே. ஒருவரை ஒருவர் கோபத்துடனும், குரோதத்துடனும் பார்க்கும் சமூகம் எமக்குத் தேவையில்லை. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பேகர், மலே ஆகிய சகல இன மக்களும் ஒன்றுமையாக மனிதத்துவத்துடன் வாழும் ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இந்த நாட்டில் இன வாதத்துக்கு எதிராக ஒரு போராட்டம் உள்ளது. எமது நாடு 30 வருட போருக்கு முகம் கொடுத்தது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை இது வரை கூறமுடியாதுள்ளது. அழிந்த சொத்துக்கள் எவ்வளவு என்றும் தெரியாது.

> **ஆட்சியாளர்கள் இந்த இனவாத போரில் உயிரை விடவில்லை. அவர்கள் இனவாதத்தைத் தூண்டியவர்கள் மட்டுமே. பிரச்சினையை ஏற்படுத்துபவர்கள் மாத்திரமே. அவர்கள் ஆட்சியை மாத்திரமே எதிர்பார்க்கின்றனர்.**

இந்த நாடு குருதியால் நனைந்தது. கண்ணீரினால் கழுவப்பட்டது. வரலாற்றில் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சிங்கள இனவாதம், தமிழ் இனவாதம், முஸ்லிம் இனவாதம் என்று உருவாக்கப்பட்டன.

வடக்கினதும், தெற்கினதும் அதிகாரத்தைப் பெறுவதற்காக இன வாதத்தைத் தூண்டிவிட்டனர். போருக்கு இழுத்துச் சென்றனர். இந்தப் போரினால் இறந்தவர்கள் சாதாரண தாய், தந்தையின் பிள்ளைகள். வடக்கில் மாத்திரம் போரினால் விதவையானவர்கள் 40 ஆயிரம் பேர் உள்ளனர். தாய், தந்தை இருவரையும் இழந்த பிள்ளைகள் உள்ளனர்.

இந்தப் போர் மனித நேயத்தையும், ஒற்றுமையையும், பொருள் சேதத்தையும் ஏற்படுத்தியது. இவை அனைத்தும் பொது மக்களுடையவை.

ஆட்சியாளர்கள் இந்த இனவாதப் போரில் உயிரை விடவில்லை. அவர்கள் இனவாதத்தைத் தூண்டியவர்கள் மட்டுமே. பிரச்சினையை ஏற்படுத்துபவர்கள் மாத்திரமே. அவர்கள் ஆட்சியை மாத்திரமே எதிர்பார்க்கின்றனர்.

எனவே, இந்த நாட்டில் இதன் பின்னர் ஒரு போர் ஏற்பட இடமளிக்கக்கூடாது - என்றார்.

(ற-ஜ-5)

# இலங்கையில் 47 லட்சம் பேர் இணையப் பயன்பாட்டாளர்

கொழும்பு, மார்ச் 2
இலங்கையில் 47 லட்சம் பேர் இணையப் பயன்பாட்டாளர்களாக உள்ளனர் என்றும்- அவர்களில் 28 லட்சம் பேர் சமூக வலைத் தளங்களைப் பயன்படுத்துகின்றனர் என்றும் மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பீட பீடாதிபதி கலாநிதி லோசந்தக்க ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையின் சனத்தொகை கடந்த ஆண்டு 20.36 மில்லியனாக இருந்தது. இவர்களில் 4.79 மில்லியன் பேர் இணையத்தளங்களைப் பயன்படுத்துகின்றனர். அவ்வாறு இணையத்தளங்களைப் பயன்படுத்துபவர்களில் சமூக வலைத் தளங்களை 2.8 மில்லியன் பேர் பயன்படுத்துகின்றனர்.

சமூகவலைத் தளங்களிலும், முகநூலையே அதிகம் பேர் பயன்படுத்துகின்றனர். 92.63 சதவீதமானவர்கள் முகநூலைப் பயன்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ற-ஜ-5)

# வடக்கு ஊடகவியலாளர் குடும்பங்களை சந்திக்கவுள்ளார் ஊடக அமைச்சர்

நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில்
வடக்குப் பயணம் அமையும் எனவும் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2
வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் கடத்தப்பட்டு காணாமற்போன ஊடகவியலாளர்கள் - உயிரிழந்த ஊடகவியலாளர்களின் குடும்பங்களை நேரில் சென்று சந்திக்கவுள்ளேன் என்று ஊடகத் துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

டிஜிற்றல் தொழில்நுட்பம் தொடர்பாக நாடாளுமன்ற ஊடகவியலாளர்களுக்கு அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடத்தப்பட்ட விசேட கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஊடகவியலாளர்களின் நலன்புரி விடயங்கள் சம்பந்தமாக கூடுதல் கவனம் செலுத்துவதே எனது நோக்கமாகும். அந்த வகையில் ஊடகவியலாளர்களுக்கான வீட்டுத் திட்டம் தற்போது ஆரம்பமாகியுள்ளது. ஆரம்பகட்டப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. அத்துடன் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும் வீடுகளை வழங்குவது பற்றி கவனம் செலுத்தியுள்ளோம். இதற்காக மாவட்ட மட்டத்தில் வீடுகள் அமைக்கப்படும்.

எதிர்வரும் 26, 27, 28 ஆகிய திகதிகளில் நான் வடக்குக்குச் செல்லவுள்ளேன். பிரதி அமைச்சர் உள்ளிட்ட அரச குழுவினரும் வருவார்கள். வடக்கு ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளை ஆராய்வதே எமது பயணத்தின் நோக்கமாகும்.

இரண்டு ரயில்கள் மூலம் பயணம் ஆரம்பமாகும். ஒவ்வொரு ரயில் நிலையத்தைச் சென்றடையும்போது அந்தப் பகுதிக்குரிய ஊடகவியலாளர்கள் வரவேற்பளிப்பார்கள். இதை ஒரு நல்லிணக்கத்துக்கான பயணமாகவும் பார்க்கவுள்ளோம் - என்றார். (ற-ஜ-5-சி)

### அமெ. இராஜாங்கத் திணைக்கள அதிகாரி இலங்கைக்கு பயணம்

கொழும்பு,மார்ச் 2
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் இலங்கைக்கு வந்துள்ளார். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் முகாமைத்துவத்துக்குப் பொறுப்பான அடிநிலைச் செயலரான பற்றிக்கென்னடி என்ற அதிகாரியே இலங்கைக்கு வந்துள்ளார்.

கொழும்பில் புதிதாக அமைக்கப்படும் அமெரிக்க தூதரக வளாகத்தைப் பார்வையிடுவதே இவரது நோக்கம் என்றும் தெரிய வந்துள்ளது.

அதேவேளை, கொழும்பு வந்துள்ள பற்றிக்கென்னடி அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்புடன் இணைந்து, நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்தின் செயற்பாடுகளைப் பார்வையிட்டார். கொழும்புத் துறைமுகத்தின் சுங்கப் பிரிவை நவீனமயப்படுத்தவும், கொள்கலன்களை ஆய்வு செய்யவும் அமெரிக்கா பயிற்சிகளையும், நவீன கருவிகளையும் வழங்கியுள்ளது. (ற-ஜ-5)

# அரச நிறுவனங்களின் விசாரணை அறிக்கைகளை வெளியிட முடிவு

## கோப் குழுவின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2
பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற குழு (கோப்) முக்கியமான அரச நிறுவனங்கள் குறித்து தனித்தனியான விசாரணை அறிக்கைகளை வெளியிடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

இந்த அறிக்கைகளை எதிர்வரும் மே மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று கோப் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சாரசபை, சிறிலங்கன் எயார் லைன்ஸ், ரக்னா லங்கா நிறுவனம் மற்றும் மத்திய வங்கி ஆகிய நிறுவனங்கள் குறித்து தனித் தனியான அறிக்கைகள் வெளியிடப்படும். இந்த நிறுவனங்கள் தொடர்பான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பில் தனித்தனியான அறிக்கைகளை தயாரிப்பது மேலும் வினைத்திறன் மிக்கதாக அமையும்.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் நாட்டு மக்களில் பலமான தாக்கத்தைச் செலுத்தும் நிறுவனங்கள் குறித்து விசேட கவனம் செலுத்த எதிர்பார்த்துள்ளோம்.

இவ்வாறான நிறுவனங்கள் தொடர்பில் தனித்தனியான விசாரணை அறிக்கைகளைத் தயாரிப்பது கோப் வரலாற்றில் முன் எப்போதும் இடம்பெற்றிருக்கவில்லை.

கோப் குழு இதுவரை 15 பொது நிறுவனங்களின் முன்னாள் மற்றும் தற்போதைய அதிகாரிகளை அழைத்து விசாரணைகளை நடத்தியுள்ளது.

இவற்றில் சில நிறுவனங்கள் தொடர்பான பரிந்துரைகள் உடனடியான நடைமுறைப்படுத்தலுக்காக சட்டமா அதிபர் திணைக்களம், அமைச்சரவை மற்றும் பிரதமரின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது. தமது அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது குறித்து பல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ரக்னா லங்கா மற்றும் அவன்ட் கார்ட் நிறுவனங்களுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் சட்டபூர்வமான தன்மை தொடர்பில் சந்தேகம் உள்ளது. இதனை சட்டமா அதிபருக்கு அறிவித்துள்ளோம்.

விசாரணைகள் முடிவடைந்த பின்னர் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா? என்பதை கண்காணிப்பதற்கு குழுவொன்றை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எமது பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு காலக்கெடு ஒன்றையும் வழங்கியுள்ளோம் - என்றார்.

(ற-ஜ-5)

மாபெரும் ஏல விற்பனை
பெற்றோல் மற்றும் டீசல்
வாகனங்களுக்கு
மார்ச் 03ஆம் திகதி
புகையிரத நிலைய வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா
அஜித் - 0773 - 136404
நெலும் - 011 - 5923880
பார்வைக்கு - மார்ச்
01ஆம், 2ஆம் திகதிகளில்
(10.17.20)
LOLC MICRO CREDIT
LOLC FINANCE
SCHOKMAN & SAMERAWICKREME
One Country. One Auctioneer. Celebrating 124 Years of Service Excellence.
Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk
City Office & Showroom:
290, Havelock Road, Colombo 5.
Tel: 011 2502680, 2585408,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com
Web: www.sandslanka.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஐ.நா.மனித உரிமை ஆணையரின் மௌனத்தின் மர்மம் என்ன...?

மௌனம் சம்மதத்துக்கு ஒப்பானது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் முப்பத்தோராவது அமர்வு, நேற்று முன்தினம் நடைபெற்ற வேளை, அதன் ஆணையாளர் சையித் அல் ஹூசேன், கனன்று எரியும் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் விசாரணை குறித்து எதுவுமே கூறாமல், மௌனம் காத்துள்ளார்!

உலகின் பல்வேறு நாடுகளின் மனித உரிமைப் பிரச்சினைகள் குறித்துத் தமது தொடக்க உரையில் சுட்டிக்காட்டிய அவர், இலங்கையின் நிலை குறித்து நான்கு சொற்களைத் தானும் உச்சரிக்கவில்லை!!

இத்தனைக்கும், கடந்த மாதம் பெப்ரவரி இரண்டாம் வாரத்தில் இலங்கைக்கு (உத்தியோக பூர்வமாக) வருகை தந்திருந்தவேளை, இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து அனைத்துலக நாடுகளின் பங்களிப்புடன் விசாரணை நடத்த இலங்கை ஜனாதிபதியும் பிரதமரும் தமக்கு உத்தரவாதம் வழங்கி யதாக மனித உரிமைகள் ஆணையாளர் கூறிச்சென்றார்.

அவ்வளவுதான். அதற்கு மேல், அவர் காத்திரமான, கனதியான வகையில் திட்டவட்டமாக எதனையும் வெளிப்படுத்தவில்லை!

எனினும், இலங்கையில் போரின் இறுதிக் கட்டங்களின்போது பாரதூரமான மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்ததாகக் கூறப்படும் விவகாரத்தில், விசாரணைகளை மேற்கொள்வதில்--

அனைத்துலகப் பங்களிப்புடன் கூடிய வகை சார்ந்த பொறிமுறையையே ஐ.நா.மனித உரிமைகள் சபை விரும்புகிறது என்றும், ஆரம்பத்தில் இருந்து, ஐ.நா.மனித உரிமைகள் சபையின் நிலைப்பாடு அதுவே என்றும், மிகத் தெளிவாக, அழுத்தம் திருத்தமாகக் கூறிச் சென்றார். அது, தொட்டுக்காட்டிக் குறிப்பிடத்தக்க ஒன்று.

ஆனால், ஐ.நா.மனித உரிமைகள் சபையின் முப்பத்தோராவது அமர்வில், ஆரம்ப உரையில், இலங்கை விடயம் குறித்து அவர் வாய் திறக்கவில்லை. அவரின் இந்தப் போக்கு ஈழத் தமிழ்மக்கள் அனைவர் மத்தியிலும், மிகப்பெரிய பரிமாணத்தில் ஏமாற்றத்தை, தலைமேல் கல் போட்டமை போன்ற உணர்வை, உற்பவித்து உள்ளது!

முதன் முறையாக உத்தியோக ரீதியில், கடந்த மாத மத்தியில் இலங்கைக்கு வருகை தந்திருந்த வேளை, போரினால் பாதிப்புற்றவர்கள் என்ற முத்திரைகளுடன் கடந்த 26 வருடங்களாக நலன் புரி நிலையங்களில் அல்லாடும் தமிழ் மக்களுக்கு,--

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் வடக்குக்கான பயணம் அவர்களின் நரக வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று நம்பி இருந்த தமிழ் மக்களுக்கு--

உள்ளக விசாரணைப் பொறிமுறை பக்கச் சார்பற்றதாகவும், சுயாதீனமானதாகவும் அமையும் பட்சத்தில், ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அது ஏற்புடையதாக இருக்கும் என்று இலங்கையில் வைத்து, அனைத்துலக பிரசித்தி பெற்ற ரொய்டர் செய்திச் சேவைக்குக் கருத்துத் தெரிவித்திருந்தார் என்பது, உதயன் வாசகர்களுக்குத் தெரிந்த ஒன்றே!

இப்போது, அரை மாதம் கழிந்த பின்னர், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில்,--

தமது ஆரம்ப உரையில், இலங்கை விவகாரம் குறித்துக் கருத்து எதுவுமே தெரிவிக்காமல் அவர் தட்டிக் கழித்தது ஏன் என்பது, பெரும் மர்மமாகவே உயர்ந்து நிற்கிறது!

**இதனையும் எமது மக்களின் தலைவிதி என்று வகைப்படுத்துவதா? எந்த வகையிலும், வடிவிலும் அது ஏற்புடைத்த ஒன்றே...!**

# புதிய கட்சி ஆரம்பிக்கும் முயற்சி இப்போதைக்கு கிடப்பில்!

## கூட்டு எதிர்க்கட்சித் தலைவராக சபையில் தினேஷ் செயற்பட அனுமதி

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து ரெங்கன்

நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் உண்மையான தலைவராக இனிமேல் மகாஜன எக்சத் பெரமுனவின் தலைவர் தினேஷ் குணவர்த்தனவே செயற்படப் போகிறார். சபாநாயகர் கரு ஜயசூரியவுடன் செய்துகொள்ளப்பட்டுள்ள ஓர் உடன்பாட்டின்படி நாடாளுமன்றத்தில் தாங்கள் பிரதான எதிர்க்கட்சியாக இருப்பதற்குத் தொடர்ந்து வற்புறுத்தப் போவதில்லையென்று குணவர்த்தன கூறியிருக்கிறார். சபாநாயகர் தாங்கள் முன்வைத்த பெரும்பாலான கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் நாடாளுமன்றத்தில் கூட்டு எதிர்க் கட்சியின் தலைவராக மகிந்த ராஜபக்ச வருவதற்கான கதவு முற்றாக மூடப்பட்டுவிட்டது. பிரதான எதிர்க் கட்சியாக செயற்பட இந்தக் குழுவினர் முன்வைத்திருந்த கோரிக்கை யானது, கூட்டுஎதிர்க் கட்சியின் தலைவராக ராஜபக்சவை கொண்டு வருவதற்கான முயற்சி என்றே அரசுத் தலைவர்கள் இதுவரை சந்தேகித்து வந்துள்ளார்கள்.

இப்போது எட்டப்பட்டுள்ள உடன்பாட்டை, கூட்டுஎதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்கும் சிறிசேன தரப்பு சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் உறவுகள் சீரமைவதற்கான அறிகுறியாகக் கருதிவிட முடியாது. சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த சேனநாயக்க, எந்த ஓர் உறுப்பினரும் வேறு ஒரு குழு உருவாக்கப் படுவதற்கு அல்லது கட்சி நலன்களுக்கு எதிராகச் செயற்படுவ தற்கு எத்தனிக்கக் கூடாது என்று கட்சியின் மத்தியகுழு தீர்மானித்துள்ளதாக கட்சி உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார். இருந்தாலும் அமைச்சர்கள் ஜோன் செனவிரட்ன, அனுரா பிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த மற்றும் பைசர் முஸ்தபா போன்ற சுதந்திரக் கட்சியினரை தினேஷ் குணவர்தன தலைமையிலான குழுவினர் சந்தித்து வருவது தெரியவந்துள்ளது. இவர்கள் அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பான விவாதங்களை நடத்தியிருக்கிறார்கள். இவ்வாறுதான் பிரதமரால் முன்மொழியப்பட்ட அரசமைப்புத் தீர்மானத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டதாகத் தெரிகின்றது.

இவ்வாறு திருத்தப்பட்டுள்ள தீர்மானம் அமைச்சரவையில் அடுத்த வாரம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது. அதற்கு முன்னர் சுதந்திரக்கட்சியின் மத்தியகுழு அதுபற்றி ஆராய்ந்து முடிவெடுக்கும். **அதன்பின் மார்ச் 9ஆம் திகதி அது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் என்று தெரியவருகிறது.**

கூட்டு எதிர்த்தரப்பினருக்குச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளமையால், புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் அவர்கள் மும்முரமாகப் பங்குகொள்ள ஆயத்தமாகிறார்கள். இது ராஜபக்ச ஆதரவாளர்களுக்கு பலத்த சங்கடங்களை ஏற்படுத்துவதாகத் தெரிகின்றது.

உள்ளூராட்சித் தேர்தல்களின் போது புதிய கட்சியொன்றை ஆரம்பித்துப் போட்டியிடும் ஏற்பாடுகளை ஆரம்பித்திருந்த ராஜபக்ச, இப்போது அந்த ஏற்பாடுகளை கிடப்பில் போட்டு வைத்துள்ளார்.

புதிய கட்சி ஆரம்பத்தில் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று, அந்தக் கட்சியின் தலைவராக யார் இருக்க வேண்டும் என்பதுதான். ராஜபக்ச குடும்ப உறுப்பினர் ஒருவரே தலைவராக இருக்கவேண்டும் என்ற யோசனை ஏனையவர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று தெரிகின்றது. கட்சியின் உண்மையான தலைவராக இருக்க விரும்பும் ராஜபக்ச, தலைமைப் பதவி வேறு வெளியார் எவருக்கும் போய் விடுவதை விரும்பவில்லை. உள்ளூராட்சித் தேர்தல் இப்போதைக்கு நடைபெறாத நிலையில் புதிய கட்சியை ஆரம்பிப்பது ராஜபக்ச குழுவினரின் வளங்கள் விரயமாகக் காரணமாகிவிடும். அத்துடன் ஆதரவாளர்களையும் குறைத்து விடும்.

ராஜபக்சவின் மகன் யோசித கைது செய்யப்பட்டு கடுவெல நீதிவான் நீதிமன்ற வளாகத்துக்குக் கொண்டுவரப்பட்ட கடந்த இரண்டு தடவை களிலும் காணப்பட்ட ஆதரவாளர் கூட்டம் இப்பொழுது குறையத் தொடங்கி விட்டது. இந்த நிலைமைக்குப் பல காரணங்கள் கூறப்பட்ட போதிலும், ராஜபக்ச குடும்பத்தினரும் உதவியாளர்களும் கூட ஒன்றில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்கள் அல்லது கைது செய்யப்படவிருக்கிறார்கள் என்பது முக்கியமான ஒன்று.


ராஜபக்சவின் பாதுகாப்புப் பிரிவில் இராணுவ சார்ஜன்ட் என்ற தரத்தில் பணிபுரிந்தவரான மேஜர் நெவில் வன்னியாராச்சி என்பவர் லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். பல குற்றச்சாட்டுக்கள் இவர்மீது சுமத்தப்பட்டுள்ளன. முன்னாள் ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பாக குற்றச்சாட்டுக்குள்ளானவர்களைக் கைது செய்வதற்கான ஏற்பாடுகளில் குற்றவியல் இரகசிய பொலிசார் ஈடுபட்டிருக்கின்றனர். ரக்பி வீரரின் இறப்பு கொலைபோல் தோற்றமளிக்கின்றது என்றவாறு கொழும்பு மேலதிக நீதிவான் நிஷாந்த பீரிஸ் கடந்த வியாழக்கிழமை அறிவித்து, குற்றவாளிகளைக் கைது செய்யும்படி அறிவுறுத்தியிருந்தார்.

குற்றப்பிரிவு புலனாய்வாளர்களுக்கு மிகச் சிக்கலான ஒரு வழக்காகத் தென்படும் இந்த விடயத்தில், வெளிநாட்டு உதவியுடன் சில முக்கிய தகவல்களை அவர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். ஒரு கட்டத்தில் பிரிட்டன் நிபுணர்கள் இலங்கைக்கு வந்து இதற்காக உதவியுள்ளார்கள்.

இதில் சம்பந்தப்பட்டவர் என்று கருதப்படும் ஒருவர் மற்றும் இளம் அரசியல்வாதி ஒருவர் ஆகியவர்களின் முக்கிய தொலைபேசி உரையாடல்களின் பதிவுகள் கிடைத்திருப்பதாகக் கருதப்படுகின்றது. அவற்றில் குறித்த சம்பவம் பற்றிய கருத்துப் பரிமாறல் இடம்பெற்றிருப்பதாகத் தெரிகின்றது.

ஓர் அரசியல்வாதி, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் ஒரு பிரமுகர், ஒரு காலத்தில் அதிகாரப் பதவியில் இருந்துள்ள பொலிஸ் பிரமுகர், ராஜபக்சவுக்கு நெருக்கமாக இருந்துள்ள இராணுவப் பாதுகாப்புப் பிரமுகர் மற்றும் இளம் அரசியல்வாதி ஒருவர் ஆகியோர் அனேகமாகக் கைது செய்யப்படலாம் என்று கூறப்படுகின்றது.

தற்பொழுது வெளிப்பட்டு வரும் அரசியல் நிலமைகளைப் பார்க்கையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இப்போது மூலைக்குள் ஒதுங்கும் நிலைக்குள்ளாகியிருப்பது தெளிவாகின்றது. கூட்டு எதிர்க்கட்சி மூலம் ஒரு முக்கிய பாத்திரத்தை பொறுப்பேற்று செயற்படுவது, மற்றும் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கும் அவரது யோசனை, மற்றும் பரப்புரைகள் யாவும் இப்போது அப்படியே முடங்கிப் போயுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வைத் தயாரிக்கும் நேரம் கூட்டமைப்புக்கும் வந்துவிட்டது

எம்.ஐ.முபாறக்

பழைய ஆட்சியைப்போல் அல்லாது புதிய அரசின் நகர்வு மிகவும் வித்தியாசமானது. அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்துப் பிரச்சினைகளே இல்லாத ஒரு நாடாக இந்த நாட்டை மாற்ற வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரும்புகிறார் போல் உள்ளது.

இந்த அரசு இதுவரை முடியுமானவரை தமிழர்களின் சில பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துள்ளது; மேலும் தீர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அவ்வாறு செய்யும் என்ற நம்பிக்கையில் தான் சிறுபான்மை இன மக்கள் இந்த அரசுடன் கைகோர்த்து நிற்கின்றனர். இது வரை அந்த நம்பிக்கை வீண்போகவில்லை.

தமிழர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளுள் ஒரு சில பிரச்சினைகள் முக்கியமானவையாகவும், உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியவையாகவும் காணப்படுகின்றன. மீள்குடியேற்றம், காணிகள் விடுவிப்பு, அரசியல்கைதிகளின் விடுதலை, காணாமல் போனோரைக் கண்டுபிடித்தல் மற்றும் அரசியல் தீர்வு போன்றவற்றை உடனடி முக்கியமானவை என்று கொள்ளலாம்.

இவற்றுள் காணிகள் விடுவிப்பு கட்டங்கட்டமாக இடம்பெற்று வருகின்றது. இன்னும் 6 மாதங்களுக்குள் அவை முற்றாக விடுவிக்கப்படும் என்றொரு உறுதிமொழியையும் ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

அடுத்தது, அரசியல் கைதிகளின் விடுதலை. அது சிக்கல் நிறைந்த ஒன்றாகக் காணப்படுகின்றபோதிலும், கடந்த வருடம் கைதிகள் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டங்கள் காரணமாக சில தீர்மானங்களை அரசு அறிவித்தது.

63 கைதிகளைப் பிணையில் விடுதலை செய்தல், சுமார் 80 கைதிகளைப் புனர் வாழ்வுக்கு உட்படுத்துதல் என அந்தத் தீர்மானம் இருந்தது. அந்த 63 கைதிகளுள் சிலர் விடுதலை செய்யப்பட்டும் உள்ளனர். இருந்தும், இவையெல்லாம் சரியாக நடைமுறைக்கு வராததால் மீண்டும் கைதிகள் போராட்டங்களில் குதித்துள்ளனர்.

அடுத்ததாகக் காணாமல்போனோர் விவகாரம் மற்றும் போர்க்குற்றச்சாட்டுக்கள். இவை தொடர்பாக விசாரணை செய்வதற்காக உள்ளகப் பொறிமுறை ஒன்றை உருவாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனுடன் இணைந்ததாக அரசியல் தீர்வு முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன. புதிய அரசமைப்பின் ஊடாக அந்த அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் புதிய அரசமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்ற மக்களின் கருத்துக்களை அரசு இப்போது திரட்டி வருகின்றது. அந்த வகையில், அரசியல் தீர்வு தொடர்பாக பல்வேறு வகையான யோசனைகளை மக்கள் முன்வைத்து வருகின்றனர். வடக்கு – கிழக்கு இணைப்பு என்றும் கிழக்குத் தமிழருக்கு தனியான அரசியல் அலகு என்றும் முஸ்லிம்களுக்குத் தனி அலகு என்றும் இப்போது யோசனைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழர்கள் மீது ஒரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். அரசியல் தீர்வு தாமதமாவதற்கு தமிழர்களே காரணம் என்று அவரது குற்றச்சாட்டு அமைந்துள்ளது. அவர்கள் தீர்வு யோசனைகளை முவைப்பதுமில்லை; நாம் முன்வைக்கும் யோசனைகளை அவர்கள் ஏற்பதுமில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். பிரதமரின் இந்தக் குற்றச்சாட்டு உண்மைதான். ஆனால், தமிழர் தரப்பில் அதற்கான பதிலும் உண்டு.

அரசியல் தீர்வு முயற்சி என்பது இப்போதைய ஆட்சியை விடவும் மகிந்தவின் ஆட்சியில்தான் மிகவும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. தீர்வு யோசனைகளைத் தயாரிப்பதற்காக அப்போது முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரணவின் தலைமையில் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவொன்று அமைக்கப்பட்டது. அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து விவாதித்து தீர்வு யோசனை அறிக்கை ஒன்றைத் தயாரித்து மகிந்தவிடம் வழங்கின.

அந்த அறிக்கையை மகிந்த வாசித்துப் பார்த்தாரோ தெரியாது. அதை அப்படியே குப்பையில் வீசிவிட்டார். அரசியல் தீர்வு தொடர்பில் மீண்டும் முதலில் இருந்து பயணத்தைத் தொடங்கினார். அதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று முன்மொழியப்பட்டது. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதை எதிர்த்தது. இது காலத்தை இழுத்தடிக்கும் – வீணடிக்கும் மகிந்தவின் தந்திரோபாய நகர்வு எனக் கூறி அதில் இருந்து விலகி நின்றது. இதற்கு முன்னதாக அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் பல சுற்றுப் பேச்சுக்களும் இடம்பெற்றன. கூட்டமைப்பு அந்தப் பேச்சில் இருந்து வெளியேறியதால் அதுவும் அப்படியே நின்று போனது.

> பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழர்கள் மீது ஒரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். அரசியல் தீர்வு தாமதமாவதற்கு தமிழர்களே காரணம் என்று அவரது குற்றச்சாட்டு அமைந்துள்ளது.

அரசியல் தீர்வு தொடர்பாக அரசு அதன் யோசனைகளை முன்வைக்க மறுக்கின்றது எனக் குற்றஞ்சாட்டியே கூட்டமைப்பு இந்தப் பேச்சுக்களை முறித்துக் கொண்டது. மேற்படி இந்தப் பேச்சு மீதும் திஸ்ஸ விதாரண அறிக்கை தூக்கி வீசப்பட்டமை தொடர்பிலும் அதிருப்தியடைந்த கூட்டமைப்பு அடுத்த நகர்வான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நிராகரித்து. அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்கு மகிந்த நடவடிக்கை எடுத்துள்ளார் என்று சர்வதேசத்துக்குக் காட்டிக்கொள்ளும் மகிந்தவின் தந்திரோபாய நகர்வுகளாகவே அவை அமைந்திருந்தன. மகிந்தவின் இந்தத் தந்திரோபாயத்தை உணர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்வுத் திட்டம் தொடர்பான மகிந்த அரசின் பொய் யான நகர் வுடன் இணைவதைத் தவிர்த்து சர்வதேசத்தின் பக்கம் கவனத் தைச் செலுத்தியது. இந்த விடயத்தில் இந்தியாவின் உதவி யைக் கூட்டமைப்பு நாடியது. இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் புதிய அரசின் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து இது தொடர்பில் உதவியைக் கோரியது. மோடியும் முழு ஒத்துழைப்பு வழங்கு வதாக உறுதியளித்தார்.

மகிந்தவின் ஆட்சியில் தீர்வை நோக்கிய கூட்டமைப்பின் பயணம் என்பது சர்வதேசத்தை நோக்கியே நகர்த்தப்பட்டது. தாம் விரும்புகின்ற தீர்வுத் திட்டத்தை தாம் முன்வைத்தாலும் அது மகிந்த அரசால் நிராகரிக்கப்படும் என்பதால் கூட்டமைப்பு தீர்வுத் திட்ட யோசைகளை அப்போது வெளியிடாமால் இருந்தது.

ஆனால், இப்போது ஆட்சி மாறிவிட்டது; நிலைமை மாறிவிட்டது; தீர்வை வழங்கக்கூடிய சாதகமான சூழல் –சாதகமான அரசு காணப்படுகின்றன. அதுபோக, உங்கள் தீர்வு யோசனைகளைத் தாருங்கள் என்றும் இந்த அரசு கேட்டு நிற்கின்றது. அரசு அவ்வாறு கேட்டாலும் கேட்காவிட்டாலும் தீர்வு யோசனைகளைக் கூட்டமைப்பு சமர்ப்பித்தே ஆகவேண்டும்.

ஆகவே, தீர்வுக்கான முயற்சிகள் நாலா பக்கமும் முடுக்கிவிடப்பட்டுள்ள நிலையில், தீர்வு யோசனைகளை இப்போது அரசிடம் ஒப்படைப்பது பொருத்தமானதாக இருக்கும்.

## பயன்தருமரங்கள் பிறர் நிலத்தில் கொப்புவிட்டால்......

யாழ்.குடாநாட்டில், தரிசு நிலங்கள், வயல் வெளிகள், தோட்டவெளிகள், பனங்காணிகள் தவிர்த்து குடியிருப்புகள் யாவும் நெருக்கமே. இதனால் வேலிச் சண்டை, கோழிச் சண்டை சகஜம். அன்று வானொலி, தொலைக்காட்சி எல்லோரிடமும் இல்லை. இதனால் ஒலிச்சத்தங்களும் கெடுபிடியே. இன்று அப்படி இல்லை. வேலியும் மாறி மதில் வருகின்றது.

கோழி வளர்ப்பினால் துர்நாற்றம், முட்டை இடம் மாறி இட்டு கொக்கரிக்கும் அவலம். ஆடு, மாடு வளர்ப்பதும் சிக்கல். உரிய மேய்ச்சல் நிலங்கள் தட்டுப்பாடு. பயன்தருமரங்கள் நட்டாலும் பிரச்சினையே.

யாதொருவன் தன்னுடைய வீட்டுக் காணியில் எல்லைப்பாங்காக, மா,பலா, தென்னை நட்டு,தண்ணீர் இறைத்துமிகுந்த பிரயாசையுடன் வைத்து உண்டாக்கியிருக்க, அந்த மரம் கோணலாக, சூரியனை நோக்கி, இயற்கை அரவணைப்பில் வளர்ந்து மரம் முழுவதும் அல்லது சில கொப்புகள் மாத்திரம் அயல் வீட்டின் முற்றத்தில் சாய்ந்து காட்சியளிக்கும். இந்தச் சாய்ந்த மரத்தின் பயன்கள் யாவும் மரமுண்டாக்கினவனுக்கே சொந்தமா? சிந்திக்க வேண்டியது தான்.

சமீபத்தில் முதிர்ச்சியடைந்த மாமரத்தின் பழங்களைப் பறித்திட இளம்வியாபாரியொருவர் வந்தார். அடிமரவீட்டுக்காரியின் அனுமதியுடனே வந்தார் போலும், அயல் வீட்டுச் சாய்ந்த கொப்புகளில் மாம்பழங்கள் யாவும் பறிக்கப்பட்டுக் குவியலாகிவிட்டன. அயல்வீட்டுக்காரர் விலை பேசி பணம் வாங்கும் வேளையில், நான் என்ன சொன்னனான்? நீ என்ன செய்தனி? என அடிமர வீட்டுக்காரி, இளம் வியாபாரியை ஏசி, தர்க்கம் இரு வீட்டாருக்கும் ஏற்பட்டது. சூழவுள்ள அயலவர்களும் கூடிவிட்டனர். எனினும் அயல் வீட்டுக்காரி பெருந்தன்மையாக உரிய பணத்தை அடிமரவீட்டுக்காரியிடம் சேர்ப்பித்தார். வீடு வளவு சிறிது.

எனினும் எதுவித பிரயாசையுமின்றி தாமாகவே வளரும் புளி, இலுப்பை, வேம்பு ஆகியவற்றின் கொப்புகள் அயல் வீடுகளில் தொங்க, யாவும் அயலானுக்கே உரித்து அரச அனுமதியும் அவசியம்.

எனது உனது என்றிருக்கும் அயலாரை நேசிக்க, இடம்பட வீடெடேல், அயலில் நல்ல வண்ணம் வாழலாம்.

வ.கி.ஸ்ரீஸ்கந்தராசா,
ஆந்தியடி, புலோலி.

## அன்பு அனைத்தையும் ஆட்கொள்ளும்

'உன்னை நீ அன்பு செய்வது போல
உன் அயலானையும் அன்பு செய்வாயாக....'

நாம் விசுவாசிக்கும் ஆண்டவராகிய யேசு எம்மை அடிமைப்படுத்துபவர் அல்ல. மாறாக அவர் எம்மை அன்பு செய்பவர். அவரது அன்பு ஆழம் காண முடியாதது. 'அன்புக்காய் மனுவாகி அன்புக்காய் தன்னையே தந்த அவருடைய அன்பே உலகில் சிறந்தது' அவர் ஒவ்வொருவரையும் நேசிக்கிறார்.




அதனால் தான் பாஸ்கா உணவின் நிறைவாக நற்கருணை என்ற திருவருட்சாதனத்தை ஏற்படுத்தி அதனூடாக எம்மோடு இருக்கின்றார். நற்கருணை ஊடாக எமக்குள் வந்து தங்கி, எமது வாழ்வின் போராட்டங்களுக்கு முகம் கொடுக்க எம்மோடு இணைகிறார். அவரைக் கசையால் அடித்து சிலுவையில் அறைந்து ஆடைகளைக் கழற்றி அவமானப்படுத்தியபோது "இவர்கள் அறியாமல் செய்கிறார்கள், இவர்களை மன்னியும்" என்று எமக்காய் மன்றாடினார். இதேபோன்ற அன்பு எவரிடமும் இருக்காது. ஆகவே நாம் இந்தத் தவக்காலத்தில் இயேசுவின் பாடுகள், மரணம் உயிர்பின் மூலம் அவரது அன்பை உணர்ந்து எம்மிடத்திலுள்ள கோபம், பொறாமை, அகந்தை, எரிச்சல், பொய்மை ஆகிய தீய குணங்களை விட்டு விலகி அவரைப்போல் ஒவ்வொருவரையும் அன்பு செய்து வாழ முயற்சிப்போம். மேலும் நாம் எப்போதுமே அவரை விட்டு விலகிப் போகாதிருக்க அவரிடம் பிரார்த்திப்போம்.

ஸ்.அனிஸ்ரன்
திருவுளச்சபை சிறிய குருமடம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது பெயர்ச்சி பலன்கள்



## மேடம்

*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் குறித்து (08.01.2016-25.07.2017) மேட ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றி நேற்றைய உதயனின் 16ஆம் பக்கத்தில் வெளியான விவரங்களின் தொடர்ச்சி)*

**கேதுவின் பலன்கள்:**
இதுவரை உங்களின் ராசிக்கு 12 ஆம் வீட்டில் அமர்ந்து கொண்டு திடீர் பயணங்களையும், வீண் அலைச்சல்களையும், தூக்கமின்மையையும், அநாவசியச் செலவினங்களையும் தந்த கேது பகவான், இப்போது இலாப வீடான 11 ஆம் வீட்டில் வந்து அமர்கிறார். தள்ளிப் போன, தடைப்பட்ட காரியங்களெல்லாம் இனி முடிவடையும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். ஆன்மிகவாதிகள், சாதுக்களின் நட்பால் தெளிவடைவீர்கள். எதிர்பார்த்த வகையில் பணவரவு உண்டு. பொது விழாக்கள், சுப நிகழ்வுகளில்; முதல் மரியாதை கிடைக்கும்.
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். குழந்தைப் பாக்கியம் உண்டாகும். விலை உயர்ந்த இரத்தினங்கள், ஆபரணங்கள் வாங்குவீர்கள். பாதியில் நின்ற வீடு கட்டும் பணி முழுமையடையும். சிலர் சொந்தத் தொழில் தொடங்குவீர்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். கோவில் கும்பாபிசேகத்தை முன்னின்று நடத்துவீர்கள். புதுப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். வீண் விவாதங்கள், சண்டையிலிருந்து ஒதுங்குவீர்கள். கோபம் குறையும். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களை கட்டும்.

**கேதுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
உங்கள் யோகாதிபதியான குருவின் பூரட்டாதி நட்சத்திரத்தில் 08.01.2016 முதல் 12.07.2016 வரை கேதுபகவான் செல்வதால் தொட்ட காரியம் துலங்கும். வீட்டில் மங்கள இசை முழங்கும். பெரிய பதவிகள் தேடி வரும். வெளிவட்டாரத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். அயல்நாடு சென்று வருவீர்கள். பிதுர்வழி சொத்துக் கைக்கு வரும். தந்தையாரின் உடல் நிலை சீராகும். வேலைக்கு விண்ணப்பித்து காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். வெளிநாட்டிலிருப்பவர்களால் ஆதாயம் உண்டு.
ராகுவின் நட்சத்திரமான சதயத்துக்கு 13.07.2016 முதல் 20.03.2017 வரை கேதுபகவான் செல்வதால் வீண் கவலை, முன்கோபம், எதிலும் பிடிப்பற்ற போக்கு, பணப்பற்றாக்குறை, ஈகோப் பிரச்சினைகள் வந்துச் செல்லும். எவருக்காகவும் சாட்சிக் கையொப்பமிட வேண்டாம். எவரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வீண் பழிச் சொல்லுக்கு ஆளாவீர்கள். அநாவசியமாக மற்றவர்கள் விடயத்தில் தலையிட்டுச் சிக்க வேண்டாம். கூடாப் பழக்கமுள்ளவர்களின் நட்பைத் தவிர்த்துவிடுங்கள். அவசர முடிவுகள் வேண்டாம்.
உங்கள் ராசிநாதனும்-அஷ்டமாதிபதியுமான செவ்வாயின் அவிட்ட நட்சத்திரத்தில் 21.03.2017 முதல் 25.07.2017 வரை கேதுபகவான் செல்வதால் அதிகாரிகளின் அறிமுகம் கிடைக்கும். சகோதரங்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். அழகு, ஆரோக்கியம் கூடும். புதிதாக வீடு, மனை வாங்கும் யோகம் உண்டாகும். எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். எதிர்பாராத பயணங்கள் அதிகரிக்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். வாகனம் வாங்குவீர்கள். சொந்த ஊரில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துச் சேமிக்கத் தொடங்குவீர்கள்.
வியாபாரத்தில் முக்கிய பிரமுகர்களின் அறிமுகத்தால் பெரிய நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். இங்கிதமாகப் பேசி வாடிக்கையாளர்களைக் கவருவீர்கள். புதுக் கிளைகள் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் உள்ள அதிகாரிகள் உங்களைக் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பார்கள். எதிர்பார்த்த சலுகைகளும், சம்பள உயர்வும் தடையின்றிக் கிடைக்கும். இந்த ராகு-கேது மாற்றம் ஆற்றில் ஒருகால் சேற்றில் ஒருகாலாக இருந்த உங்களைத் திடப்படுத்தி, தீர்க்கமான முடிவுகளை எடுக்க வைப்பதாகவும், பணப் புழக்கத்தை அதிகப்படுத்துவதாகவும் அமையும்.

(தொடரும்)

---

# குழந்தையின் "தத்தக்கா, பித்தக்கா" ஓட்டம் தப்பும் தவறுமான முயற்சி அல்ல

**த.வி.வெங்கடேஸ்வரன்**

*(மேற்குறித்த தலையங்கத்தின் நேற்றைய உதயனின் 16ஆம் பக்கத்தில் பிரசுரமான ஆக்கத்தின் தொடர்ச்சி)*
வயது வந்தவர்கள் ஓடும்போது என்ன நடக்கிறது? பொதுவாக, ஓட்டத்தின் இயக்கத்தின்போது பாதம் தரையைத் தொடும் கணத்தில், குதிக்கால் தசை சுருங்கி 'ஸ்பிரிங்' போல விரிகிறது. இவ்வாறு விரியும்போது, முன்னோக்கி உந்தும் விசை ஏற்பட்டு உடல் முன்னோக்கிப் பாயும் இயக்கம் ஏற்படுகிறது. வயது வந்தவர்களின் கால்கள் நீளமானவை. எனவே, அவர்கள் நீண்ட தாவலாக அடி வைத்து ஓட முடிகிறது. நீண்ட தாவலாக அடி எடுத்துவைக்கும் இடைப்பட்ட காலத்தில், குதிகால் தசைகள் சுருங்கி விரிவதற்குப் போதுமான கால அவகாசம் கிடைக்கின்றது. குழந்தைகளின் கால்களின் நீளம் குறைவாக இருப்பதால், அவர்களால் பெரியவர்களைப் போலக் குதிகால் தசையைச் சுருக்கி விரித்துத் தேவையான உந்தும் ஆற்றலை விரைவில் பெற முடிவதில்லை எனக் கண்டார்.

**தத்தக்கா பித்தக்கா தப்பானதா?**
**ஓட்டத்தின் இயக்கத்தின்போது கால்கள் 'பிஸ்டன்' போல இயங்குகின்றன எனும்** மாதிரியில் ஆராய்ந்தால், நீளம் குறைவான கால்களை உடைய குழந்தைகளுக்குத் தசை விரிந்து உந்துதல் தந்து முன்னோக்கிப் பாய்ச்சல் செய்ய இரண்டு தாவலான அடிகளுக்கு இடையே போதுமான கால அவகாசம் கிடைப்பதில்லை. எனவே தான் ஒப்பீட்டில் பெரியவர்களை விடக் குழந்தைகளின் கால்கள் நீண்ட நேரம் தரையைத் தொட்டபடி இருக்கின்றன. அதன் காரணமாகத்தான் அவர்களின் ஓட்டம் சீராக இல்லாமல் தடைப்பட்டுத் தத்தக்கா பித்தக்கா என்று இருக்கிறது.
'பிஸ்டன்' இயக்கத்தை மாதிரியாகக் கொண்ட இவர்களது புதுமையான கருத்து, குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் ஓட்டங்களின் இயக்கத்தை எளிதில் விளக்கின.
இதன் மூலம் ஒழுங்கு இல்லாததுபோல எமக்குக் காட்சியளிக்கிற குழந்தைகளின் ஓட்டங்களின் இயக்கம், அவர்கள் ஓடுவதற்காக கற்றுக்கொள்ளும் காலத்தில் ஏற்படும் நேர்த்திக்குறைவு அல்ல என்றும், அப்படியொன்றும் பயன்பாடும் நேர்த்தியும் குறைவான செயலும் அல்ல என்றும் கூறுகிறார் ஆசர்வூட்.





**ஓட்டத்தின் கணிதம்**
**குழந்தைகளின் நீளம் குறைந்த கால்களை வைத்து எவ்வளவு கூடுதலாக திறன் வெளிப்படவேண்டும் என்பதற்காக ஓட்டங்களின் இயக்கத்தை எப்படிச் செய்யவேண்டும் என்பதை உடல் தீர்மானிக்கும் செயல்தான் அவர்களின் 'தத்தக்கா பித்தக்கா' ஓட்டம் என்று இவர்களது ஆய்வு நிறுவுகிறது.**
ஓடும்போது குறைவான ஆற்றலைச் செலவழித்து, அதேசமயத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகத்தில் நிலை தடுமாறாமல் ஓடத் தேவையானபடி கால், கைகளை விரித்து தலையை அங்கும் இங்கும் ஆட்டுகிறது குழந்தை. அதுதான் எமக்கு வேடிக்கை ஓவியங்களின் ஓட்டம் போலத் தெரிகிறது என்கிறார் ஆசர்வூட்.
குழந்தைகளின் வித்தியாசமான ஓட்ட நடைபாங்கு உள்ளபடியே குழந்தையின் மூளைக்குள் ஏற்படும் உணர்வில்லா அனிச்சைக் கணிப்பின் விளைவு.
குழந்தையின் உடலமைப்பு தரக்கூடிய இயந்திரத் திறனுக்கும் (Mechanical power) ஓட்டத்தின் இயக்கச் செயலுக்கும் (Work) இடையே ஒவ்வொரு கணத்திலும் அனிச்சையாக நடைபெறும் சமன்பாட்டின் விளைவே குழந்தையின் வித்தியாசமான ஓட்டத்தின் பாங்கு.
செயற்கை மனிதர் எனப்படும் இயந்திர மனிதர் போன்ற கருவிகளைச் செய்வதற்கும் இயக்குவதற்கும் இந்த ஆய்வுகள் மிகவும் பயன்படும் என்று ஆராய்ச்சியாளர்கள் எதிர்பார்ப்போடு உள்ளனர்.

> "ஒப்பீட்டில் பெரியவர்களை விடக் குழந்தைகளின் கால்கள் நீண்ட நேரம் தரையைத் தொட்டபடி இருக்கின்றன. அதன் காரணமாகத்தான் அவர்களின் ஓட்டம் சீராக இல்லாமல் தடைப்பட்டுத் 'தத்தக்கா பித்தக்கா' என்று இருக்கிறது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப் போக்குவரத்துக்கு திரும்புவோம்

மனோகரன்



வளர்ந்த நாடு என்பது எத்தனை ஏழைகள் கார் வைத்திருக்கிறார்கள் என்பதைப் பொறுத்ததல்ல. எத்தனை பணக்காரர்கள் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்ததே. போருக்குப் பின்னரான வடக்கில் தனி வாகனங்களின் பயன்பாடு சடுதியாக அதிகரித்து வருகின்றது. பொதுப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தி அதன் பயன்பாட்டை அதிகரிக்கவில்லையாயின் கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வதற்கு ஒப்பாகிவிடும்.

மொத்த பெற்றோலியப் பயன்பாட்டில் போக்குவரத்துக்காக மட்டும் 60 சதவீதம் செலவிடுகிறது மனித இனம். இதில் சொந்தக் கார், இரு சக்கர வாகனங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்படுவது 40 சதவீதம். உலகிலேயே அதிகம் நுகரும் நாடு என்றாலும், பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் தினமும் 41.6 மில்லியன் லீற்றர் பெற்றோல் மிச்சப்படுவதாகச் சொல்கிறது அமெரிக்கா. ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தனிப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த கார்களுக்குக் கூடுதல் வரி உண்டு. கடுமையான கட்டுப்பாடுகளும் உண்டு.

பொதுப் போக்குவரத்துக்கு நாம் மாறுவதன் மூலம், ஆண்டுதோறும் 3.7 கோடி மெற்றிக் தொன் கரியமில வாயு (காபனீர் ஒக்சைட்) உமிழ்வைக் கட்டுப்படுத்தலாம். மேலும், பஸ்ஸுக்கோ, ரயிலுக்கோ செல்பவர்களுக்கு சிறிது தூரமேனும் நடக்கும் நிர்ப்பந்தம் இயல்பாகவே ஏற்படுகிறது. நடக்கிறார்கள். பொதுச் சமூகத்துடன் உரையாடுகிறார்கள். தனிப்பட்ட வாகனங்கள் ஒரு வகையில் நம்மைத் தனித் தீவாக்கி விடுகின்றன.

இரு சக்கர வாகனங்களைப் பயன்படுத்துவதில் பல வசதிகள் உண்டுஎன்றாலும், அதிக எண்ணிக்கையில் விபத்துகள் நிகழ்வதற்கும் இவைதான் காரணம். சாலை விபத்துகளில் ஏற்படும் உயிரிழப்புக்களில் 25 சதவீதத்துக்கும் மேல் இரு சக்கர வாகனங்களால் நிகழ்பவைதான். காரைவிட பஸ், ரயில் போன்ற வாகனங்கள் பாதுகாப்பானவை என்று வெக்ஸென் நிறுவன ஆய்வு தெரிவிக்கிறது. காருடன் ஒப்பிட்டால், விபத்தில் இறக்கும் வாய்ப்பு ரயில் பயணத்தில் 9 மடங்கு குறைவு என்று அது குறிப்பிடுகிறது. பொதுப் போக்குவரத்து மட்டும் இல்லையென்றால், தினம் சாலைப் பயணத்தில் ஏற்படும் தாமதம் மேலும், 27 சதவீதம் அதிகரிக்கும் என்று சுட்டிக்காட்டியிருக்கிறது அமெரிக்க பொதுப் போக்குவரத்துச் சங்கம்.

போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த ஒற்றை இலக்க, இரட்டை இலக்க தனி வாகனங்களைப் பயன்படுத்தும் முறையை 15 நாள்களுக்கு நடைமுறைப்படுத்தியது இந்தியத் தலைநகரான புதுடில்லி அரசு. குறிப்பிட்ட இந்த 15 நாள்களில் காற்றில் பி.எம். 2.5 என்று அழைக்கப்படும் துகள்கள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்ததாக ஆற்றல் மற்றும் வளங்கள் நிறுவனம் (TERI) தெரிவித்திருக்கிறது. பொதுப் போக்குவரத்து அதிகரித்தால் சூழலில் என்ன மாற்றம் நடக்கும் என்பதற்கான மிக அண்மைய உதாரணங்களில் ஒன்று இது.

வரு முன் காப்பதே சிறந்தது. வடக்கு மாகாண சபை உட்பட அனைவரும் இது தொடர்பில் சிந்தித்து நடவடிக்கையில் இப்போதே இறங்கிவிடவேண்டும்.

# வடக்கிலும் ரிஷ்ய சிருங்கரின் கால் படாதோ!

ஜி.எம்.பாலகிருஷ்ணன்

அங்க தேசத்து அரசர் ரோமபாதரும் தசரத மகாராஜாவும் நண்பர்கள். ஒரு முறை ரோமபாதர் தசரத ராஜாவைச் சந்திக்க வந்திருந்தார். தசரத ராஜாவுக்கு மூன்று மனைவிமார். கௌசல்யா, சுமித்திரா, கைகேயி. இது எவரும் அறிந்ததே. ஆனால் பலரும் அறியாதது, தசரதருக்கும் கௌசல்யாவுக்கும் ஒரு பெண் குழந்தை இருந்தது என்பதும் அவள் பெயர் சாந்தா என்பதும். அவள் ராமர் லக்ஷ் மணர்களுக்கும் மூத்தவள் என்பதும்.

அங்க தேச ராஜா ரோம பாதருக்கும் பிள்ளைச் செல்வம் இல்லை. அவர் தசரதரிடம் அவரது பெண்ணைத் தத்து கொடுக்க வேண்டிக் கேட்டுக் கொண்டார். தசரதரும் தமக்கு மூன்று மனைவிமார் இருப்பதாலும், இன்னும் குழந்தைகளைப் பெற வாய்ப்பு இருந்ததாலும் மிகுந்த யோசனைக்குப்பின், தன் மகள் சாந்தாவை தத்துக் கொடுக்க சம்மதித்தார். அங்க அரசர் மிக்க மகிழ்ச்சியுடன் சாந்தாவைத் தத்து எடுத்துக் கொண்டார். அங்க தேச அரச குமாரியாக சாந்தா வளர்ந்து வந்தாள்.

ஒரு முறை அங்கதேசம் மழையின்மையால் மிகவும் வறண்டு போய் இருந்தது. அரசரும் என்ன செய்வது என்று தெரியாமல் கவலையுடன் இருந்தார்.

அப் போது அவரிடம் முனி குமாரன் ரிஷ்ய சிருங்கரை வரவழைத்தால் மழை பெய்யும் என்று ஆலோசனை கூறப்பட்டது. யார் இந்த ரிஷ்ய சிருங்கர்?

அங்க தேசத்து வனாந்திரத்தில் காஷ்யப முனிவரின் மகன் விபாந்தகருக்குப் பிறந்தவர்தான் இந்த ரிஷ்ய சிருங்கர். மான் கொம்பைத் தலையில் தாங்கியதால் அப்பெயர் பெற்றார். சிருங்க என்றால் மான் கொம்பு என்னும் பொருள் உண்டாம். விபாந்தகருக்கும் ஒரு மானுக்கும் பிறந்தவர். முனிவரின் ஆசிரமத்தில் வேற்றுலக மக்களின் கண்படாமல் வளர்ந்து வந்தவர். தவவலிமை மிக்கவர்.



இவரை அங்க தேசத்துக்கு வரவழைத்தால் மழைபெய்து வறட்சி நீங்கும் என்று கூறப்பட்டது. ஆனால் அவரை எப்படி வரவழைப்பது?

நேரில் சென்று கூப்பிட்டால் விபாந்தக முனிவரின் கோபத்துக்கு ஆளாகி சாபம் கிடைக்கப் பெறலாம். வேற்று மனிதரின் வாடையே தெரியாத ரிஷ்ய சிருங்கரை ஏதாவது யுக்தி செய்துதான் வரவழைக்க வேண்டும். அங்க தேசத்து அழகு மிகு பெண்கள் சிலரை அழைத்து எப்படியாவது ரிஷ்ய சிருங்கரை மயக்கி அங்க தேசத்துக்கு கூட்டி வர பணித்தார். ஆனால் இது விபாந்தக முனிவருக்குத் தெரியக் கூடாது என்றும், தெரிந்தால் சாபத்துக்கு ஆளாகக்கூடும் என்றும் அந்தப் பெண்கள் எச்சரிக்கப் பட்டனர்.

அவர்களும் ஒரு அழகிய கப்பலைத் தோப்புபோல் அலங்கரித்து ஆசிரமம் ஒன்றமைத்து இவர்களும் முனிவர்கள் போல் வேடமணிந்து கானகம் சென்றனர். விபாந்தக முனிவர் இல்லாத நேரத்தில் ரிஷ்ய சிருங்கரை சந்தித்து நட்பைப் பெற்றனர். சிறிது நேரம் கழித்து திரும்பி விட்டனர். ரிஷ்ய சிருங்கருக்கு அது புது அனுபவம். மறுநாள் வந்தபோது அவரை நாட்டியமாடி மயக்கி அவர் மனதில் ஆவலை உண்டு பண்ணினர். மறுபடியும் அவர் திரும்பும்போது அவர்களுடன் வந்தால் இன்னும் அழகிய மக்களைச் சந்திக்கலாம் என்று கூறி ஆசையை வளர்த்தனர். விபாந்தக முனிவருக்குத் தெரியாமல் அடுத்தமுறை ரிஷ்ய சிருங்கரை அங்க தேசத்துக்குக் கூட்டி வந்தனர். அங்கதேசத்தில் இவரது கால் பட்டதும் மழை பெய்தது. ரோமபாதர் நன்றி மிகுதியால் அவருக்கு சாந்தாவை மணமுடித்து ரிஷ்ய சிருங்கரை அரச பீடத்தில் அமர்த்தினார்.

விபாந்தக முனிவர் திரும்பி வந்து பார்த்தபோது ரிஷ்ய சிருங்கரைக் காணாமற் கோபமடைந்து அங்க தேசத்துக்கு வந்தார். வந்தவரை எல்லா மரியாதைகளுடனும் ரோமபாதர் வரவேற்றார். முனிவரின் கோபம் சற்றே தணிய அவரை மேலும் மரியாதைகளுடன் அரச மண்டபத்துக்குக் கூட்டி வந்தார். அங்கு ரிஷ்ய சிருங்கர் அரச குமாரனாகவும் அரச குமாரி சாந்தாவின் கணவனாகவும் இருந்தது கண்டு கோபத்தை அறவே ஒழித்து அவர்களை ஆசீர்வாதம் செய்தார்.

வடக்கில் இப்போது கொளுத்தி வரும் வெயிலைப் பார்க்கும்போது, எவராவது போய் ரிஷ்ய சிருங்கரை அழைத்து வந்தால் நன்றாயிருக்கும்போல படுகிறது. எவர் செய்வார்கள்?

**வடக்கில் இப்போது கொளுத்தி வரும் வெயிலைப் பார்க்கும்போது, எவராவது போய் ரிஷ்ய சிருங்கரை அழைத்து வந்தால் நன்றாயிருக்கும் போல் படுகிறது. எவர் செய்வார்கள்?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கியில் அகதிகள் நெருக்கடி பிறக்கும் குழந்தைகளும் அதிகரிப்பு

அங்காரா, மார்ச்.2
சிரியாவில் போர் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்று வரை துருக்கியில் 150 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிரியக் குழந்தைகள் பிறந்துள்ளன எனத் துருக்கித் துணைப் பிரதமர் லுட்பி எல்வான் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜெனிவாவில் ஐ.நா.வின் மனித உரிமை ஆணைக்குழுவின் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், சிரியாவில் இடம்பெற்று வரும் 5 வருடப் போரில், மனிதாபிமானப் பேரழிவைத்தடுக்க துருக்கி தன்னால் இயன்றவரை பாடுபடுகிறது. துருக்கியில் பிறக்கும் சிரியக் குழந்தைகளின் எண்ணிக்கையின் அளவு கிட்டத்தட்ட 152 ஆயிரத்தை எட்டியுள்ளது. சிரிய எல்லையில் உள்ள அயல் நாடுகளிலும் பார்க்க அதிக எண்ணிக்கையான அகதிகளைக் கொண்டுள்ளோம். 2.7 மில்லியனுக்கு மேற்பட்ட அகதிகளை துருக்கியில் அனுமதித்துள்ளோம்.

சிரியாவில் இடம்பெற்று வரும் போர் காரணமாக மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் வீடுகளை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அங்காரா பல தடவைகள் சர்வதேச சமூகத்தை விமர்சித்துள்ளது. அகதிகளின் இடப்பெயர்வுக்கு தீர்வுகாணும்படி சர்வதேச சமூகத்தை கோரியது. உலக நாடுகள் அகதிகள் நெருக்கடிக்கான தீர்வில் பங்கு கொள்ள வேண்டும் எனத் துருக்கி துணைப் பிரதமர் மேலும் தெரிவித்தார். (ஐ-ரி4)





# சிறுவர்கள் மீது கத்திக்குத்து

பீஜிங்,மார்ச் 2
சீனாவில் ஆரம்பப்பிரிவு பாடசாலைச் சிறுவர்கள் 10 பேர் மர்ம நபரால் கத்திக் குத்துக்கு இலக்காகியுள்ளனர். நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

6 சிறுவர்களும், 4 சிறுமிகளும் தாக்குதலுக்கு ஆளானார்கள். ஹைகு நகரில் உள்ள ஆரம்ப பாடசாலைச் சிறுவர்களை பாடசாலை வளாகத்துக்கு வெளியே கூட்டிச்சென்று சிறுவர்களை சரமாரியாக இந்த நபர் தாக்கியுள்ளார். தாக்குதலுக்கு இலக்கானவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது என மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தாக்குதல் நடத்திய நபர், அவரது மகள் வீட்டுவேலை செய்யவில்லை என்பதற்காக பாடசாலைக்கு அனுமதிக்கப்படவில்லைஎன்பதனால் மனமுடைந்து இவ்வாறு செயற்பட்டதாக தெரிய வந்துள்ளது.

மேலும் தொலைக்காட்சித் தொடரில் வரும் காட்சிகளை அடிப்படையாக வைத்து இந்தத் தாக்குதலை அவர் நடத்தியுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் சீனாவில் குற்றச் செயல்கள் குறைவாகும். ஆனால் தற்போது சில வருடங்களாக கத்தி, கோடரி போன்ற ஆயுதங்களால் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. அத்துடன் அவ்வாறான தாக்குதல்கள் சிறுவர்களை இலக்கு வைத்தே நடத்தப்படுகின்றன எனப் பொலிஸார் அறிக்கையில் தெரிவித்துள்ளனர். (ஐ-ரி4)

# வடகொரியா மீது பெ
# ஐ.நா. பாதுகாப்புச் ச

நியூயோர்க்,மார்ச் 2
வடகொரியாவின் மீது மேலும் சில தடைகளை விதிப்பது தொடர்பான தீர்மானத்தின் மீது ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் நேற்று பிற்பகலில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

வடகொரியாவின் அணு பரிசோதனைக்கூடம் அருகே ஜனவரி மாதம் ஆறாம் திகதி திடீர் நிலநடுக் கம் ஏற்பட்டது. கில்ஜு நகரின் வடமேற்கே சுமார் 50 கிலோ மீற்றர் தூரத்தில் புங்கேரி என்ற பகுதியில் அமைந் துள்ள அணுப்பரிசோதனைக்கூடத்தின் அருகேஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.1 ஆக பதிவானது. முன்னதாக இது சாதாரண நிலநடுக்கம் தான் என வடகொரிய மக்கள் நம்பிவந்த நிலையில், வடகொரியா புதிதாக அணுகுண்டை வெடித்துப் பரிசோதித்திருக்கலாம் எனத் தென்கொரிய இராணுவ வட்டாரங்களும் யப்பானும் சந்தேகம் எழுப்பின.

இந்த நிலையில் இந்தச் சந்தேகங்களுக்கு பதிலளிக்கும் விதமாக வட கொரியா ஹைட்ரஜன் வெடிகுண்டை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளோம் என்று தெரிவித்தது. வடகொரியாவின் இந்த அசாத்தியமான துணிச்சல் உலக நாடுகளை நிமிர்ந்து பார்க்கும்படி செய்திருக்கும் நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக ஆலோசனை செய்வதற்காக ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டம் நடைபெற்றது.



மெக்சிக்கோவில் பயணிகள் பஸ்ஸொன்று விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்ததுடன், 29 பேர் காய மடைந்துள்ளனர். 45 மீற்றர் ஆழத்தில் வீழ்ந்து இந்த பஸ் விபத்துக்குள்ளானது. வாகனம் கட்டுப்பாட்டை இழந்ததால் விபத்து ஏற்பட்டது என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-ரி4)

## ஆபத்தை அதிகரிக்கும் சிகா வைரஸ்

சிகா வைரஸ் நரம்பு ரீதியான நோய்களுக்கான ஆபத்தை அதிகரிக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தத் தொற்றின் மூலம் நரம்பு மண்டலம் பாதிக்கப்படுவதோடு, பக்கவாதத்தை ஏற்படுத்தி இறுதியில் உயிரிழக்கச் செய்யும் என விஞ்ஞானிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வில் சிகா வைரஸ் நோய் எதிர்ப்புச் சக்தியைச் சிதைக்கக் கூடியது எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

88 சதவீதமான நோயாளர்கள் சிகா வைரஸ் தொற்றுக்கு 6 நாள்களுக்கு முன்பு நரம்பு சம்பந்தமான நோய்களுக்கு முகம் கொடுத்ததாக தெரிவித்துள்ளனர். மேலும் தரவில், 100 ஆயிரம் பேர் சிகாவினால் தாக்கப்பட்டிருந்தால் 24 பேரில் இந்த வைரஸ் திரிபடைந்து பக்கவாதம் போன்ற மோசமான விளைவை ஏற்படுத்தக் கூடிய சாத்தியங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து, கடந்த ஆண்டு அமெரிக்க நாடுகளான பிரேசில் மற்றும் கொலம்பியாவிலும், ஆப்பிரிக்காவிலும், 13 அமெரிக்க நாடுகளிலும் இதன் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளன.

இந்த நோய் உலகம் முழுவதும் 40 லட்சம் பேரைத் தாக்க வாய்ப்பு இருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. உலக சுகாதார நிலையம் சர்வதேச அவசரநிலையை பிரகடனம் செய்துள்ளது. (ஐ-ரி4)

# ஒரே
# 14 பே

## படம்பிடிக்க

புதுடில்லி,மார்ச் 2
மகாராஷ்டிர மாநிலம்
சேர்ந்த 7 குழந்தைக
இளை ஞர், பின்னர்
அதிர்ச்சியை ஏற்படு
தாணே நகரின் கசர்
குடும்பத்தினருடன்
தொடர்பான படிப்பை
உடன் பிறந்தவர்கள்
கடந்த சனிக்கிழமை
குளிர்பானத்தில் மய
துள்ளார்.பின்னர் க
3 மணியளவில் வீ
சென்று தொழு கை
பத்தினர் ஒவ் வொரு
துக் கொலை செய்
கொலை செய்து கெ
இந்த நிலையில் உ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# டோக்கியோ மரதனோட்டம் 36 ஆயிரம் பேர் பங்கேற்பு

டோக்கியோ,மார்ச் 2
யப்பானில் டோக்கியோ மரதன் எனும் ஓட்டப்போட்டி நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த மரதன் ஓட்டம் 2020 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக்குக்கு முன்னேற்பாடாக அமைந்துள்ளது. இந்த ஓட்ட நிகழ்வில் 36 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்ட வீரர்கள் பங்குபற்றினர்.

இதனால் பாதுகாப்பு ஏற்பாடு மிகவும் பலமாக அமைந்திருந்தது. நகரம் முழுவதும் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டிருந்ததுடன் விசேட பாதுகாப்புப் படையினர் 90 பேர் பாதுகாப்புப் பணிக்கும் அமர்த்தப்பட்டிருந்தனர். இதனைவிட வேறு பாதுகாப்பு அதிகாரிகள், ரோந்து வாகனங்கள் என்பன நகரைப் பலமாகக் கண்காணித்தன. இந்த ஓட்டப்பந்தயத்தில் 36 ஆயிரத்து 647 பேர் கலந்து கொண்டனர். பந்தயத்துக்கான தூரம் 10 கிலோ மீற்றராகும். 96 சதவீதமானோர் ஓட்டத் தூரத்தைக் கடந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி4)

# பொருளாதாரத் தடை
# பையில் வாக்கெடுப்பு

ஐ.நா. பாதுகாப்புச்சபையில்உறுப்புநாடுகளான15நாடு களின் பிரதிநிதிகள் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

அந்த முடிவுகளின் அடிப்படையில் வடகொரியா மீது மேலும் சில தடைகளை விதிக்கும் தீர்மானத் தின் மீது வாக்கெடுப்பு நடைபெற்றது. வடகொரி யாவுக்கு ஆயுதங்கள் ஏற்றுமதியாவதைத் தடுக்கும் வகையில் கப்பல்களை வழிமறித்து பரிசோதிப்பது உள்ளிட்ட பல்வேறு கடுமையான நடவடிக்கைகள் இந்தத் தீர்மான மூலம் நிறைவேற்றப்பட்டன.

இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வடகொரியா வின் நட்பு நாடான சீனாவும், ரஷ்யாவும் வாக்க ளித் துள்ளன. இந்த இரு நாடுகளும் வட கொரியாவுடன் அதிக வர்த்தக ரீதியான தொடர்பைக் கொண்டிருந் தவை ஆகும். நிலக்கரி, இரும்பு, ஏனைய இயற்கை வளங்கள் அதிரடியாக தடைசெய்யப்பட்டுள்ளன.

அந்தப் பாதை வழியாகச் செல்லும் கப்பல்கள் சோதனையிடப்படும். அங்கத்துவ நாடுகள் வட கொரியாவுடன் எந்த வர்த்தகத்தையும் கொண்டிருக் கக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர் பில் கருத்துத் தெரிவித்த வடகொரிய உளவுத் துறைத் தலைவர் கிம் யோங் சோல், அவர்களின் தடை உத்தரவுக்காக எம்மால் சாக முடியாது என ஊடகம் ஒன்றுக்குப் பதிலளித்துள்ளார். (ஐ-ரி4)



# மெக்கடோனியன் எல்லையில் அகதிகள் அட்டகாசம்

மெக்கடோனியா,மார்ச் 2
கிரேக்கத்துக்கு அருகான கிராமமான மெக்கடோனியன் எல்லைத் தடுப்பு வேலியைத் தகர்த்துக் கொண்டு அகதி கள் உள்நுழைந்துள்ளனர். அவர்கள் உள் நுழைவதை ஊடகங்களும் படம்பிடித்துள்ளன.

முன்னதாக எல்லையில் இருந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். தம்மை அங் கீகரிக்கும்படிகோஷங்களைஎழுப்பினர். அந்த இடத்துக்கு விரைந்த பொலிசார் மீது கற்களையும் வீசினர்.

இறுதியில் நூற்றுக்கணக்கான அகதி கள் இணைந்து எல்லையைத் தகர்த் தனர். உடனே பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு, கிறினைட்டுகளை எறிந் தனர். ஆனால்எவருக்கும்எந்தக்காயங் களும் ஏற்படவில்லை என தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் எத்தனை பேர் எல்லையைக் கடந்தார்கள் என்பது தொடர்பில் எண்ணிக்கை வெளியிடப் படவில்லை. கிட்டத்தட்ட 500 பேர் நாட்டுக்குள் நுழைந்திருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பல்கன் அரசின் அனுமதியு டன் அந் தப் பகுதியினூடாக ஐரோப்பா செல் வதற்கு ஆயிரக்கணக்கான அகதிகள் மக்கடோனியா பகுதியில் வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்து 13 கிலோ மீற்றர் தொலைவில் ஐயொமெனி எல்லையில் 6 ஆயிரத்து 500 அகதிகள் காத்திருக்கின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சுமார் 8 நாள்கள் கைருப்பில் உள்ள உணவுப் பொருள்களுடன் நாட்டின் எல்லையில் அந்த அகதிகள் காத்திருக்கின்றனர். இதனால் நேற்று முன்தினத்தில் இரு ந்து எல்லை மூடப்பட்டுள்ளது. இந்த நிலை கிரேக்கத்தைப் பாதித்துள்ளது. 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அக திகள் புகலிடம் இன்றி எல்லைகளில் தவி த்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)

# ர குடும்பத்தைச் சேர்ந்த
# பேர் கழுத்தறுத்துக் கொலை

## க்கச் சென்ற தொலைக்காட்சி ஒளிப்பதிவாளரும் சாவு

ச் 2
ாநிலம், தாணேவில் தனது குடும்பத்தைச் ந்தைகள் உட்பட 14 பேரை கொலை செய்த ன்னர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ற்படுத்தியுள்ளது.

கசர்வதாவ்லி பகுதியைச் சேர்ந்தவர் தனது நடன் வசித்து வந்தார். அவர் வர்த்தகம் ப்பைப் படித்தவர் ஆவார். தனது பெற்றோர், வர்கள், மனைவி ஆகியோரை அழைத்து மை இரவு விருந்து அளித்தார். அதன் போது ல் மயக்க மருந்தையும் கலந்து கொடுத் னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ில் வீட்டுக்கு அருகில் உள்ள மசூதிக்குச் கையை முடித்து விட்டு வந்து, தனது குடும் வொருவரின் கழுத்தையும் கத்தியால் அறுத் செய்தார். பின்னர் அவரும் தூக்கிட்டுத் தற் து கொண்டார்.

ில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அவரது சகோதரி ஒருவர் ஜன்னல் அருகே வந்து காப் பாற்றுமாறு கூச்சலிட்டுள்ளார். அதைத்தொடர்ந்து அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் விரைந்து வந்து காயத்துடன் இருந்த அவரை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

பின்னர் தகவல் கிடைத்ததன் பேரில் பொலிஸார் சம்பவ இடத் துக்குச் சென்று சடலங்களைக் கைப்பற்றி உடற்கூற்றுப் பரி சோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சொத்துத் தகராறு காரணமாக தனது குடும்பத்தினரை அவர் கொலை செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படு கிறது. இதுதொடர்பாக தீவிர விசாரணை நடைபெற்று வரு வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இந்தக் கொலை தொடர்பாக மருத்துவம னைக்கு செய்தி சேகரிப்பதற்காக சென்ற தனியார் தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் ஒருவர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். அந்த ஒளிப்பதிவாளருக்கு ஏற்கெனவே இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருந் தது. இந்த நிலையில் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு அவர் உயிரிழந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.(ஐ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# திருமறைக் கலாமன்றத்தின் "மெய்யியல் துளிகள்"

மதுரன்

"மெய்யியல் துளிகள்" நிகழ்ச்சியின் சிறப்பு அம்சமாக "பொலிவும் தெளிவும்" எனும் ஆடல் அளிக்கை அமைந்திருந்தது. திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் நடன ஆசிரியை திருமதி அகல்யா ராஜபாரதியின் நெறியாள்கையில் மாணவ மாணவியர் வழங்கிய இந்த நிகழ்ச்சி ஒரு வரலாற்றுப் பதிவாகக் கணிக்கப்பட வேண்டும்.

"சைவசித்தாந்தம் பல பரிமாணங்களைக் கொண்டுள்ளது. அது ஒரு வாழும் சமயம், உயிர்த் துடிப்புள்ள தத்துவம், மிக உயர்ந்த இறையியல், புடமிடப்பட்ட உலகப் பார்வை, விசையார்ந்த வாழ்க்கை நெறி, தமிழர் பண்பாட்டுக் கருவூலத்தின் முக்கிய பிரிவு" என்ற வரிகளுடன் நீ.மரியசேவியர் அடிகளாரின் சைவ சித்தாந்தம் பற்றிய கட்டுரைகள் என்னும் ஆங்கிலத் தொகுப்பு நூலின் முகவுரை தொடங்குகின்றது.

இந்த நூலின் வெளியீட்டு விழா, அண்மையில் திருமறைக் கலாமன்றத்தில் 'மெய்யியல் துளிகள்' நிகழ்வில் நடைபெற்றது. யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள கலையகத்தில், மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது.

இந்த விழாவுக்கு யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை ஓய்வு நிலை சிரேஷ்ட விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம் தலைமை வகித்தார். யாழ்.திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் ந.விஜயசுந்தரம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள, யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் திருமதி ஏ.என். கிருஷ்ணவேணி நூல் அறிமுக உரையை நிகழ்த்தினார்.

நூல் வெளியீட்டுடன் உமாபதி சிவாச்சாரியாரின் 'வினாவெண்பா' எனும் நூலின் இசையுரை அடங்கியதான திருமறைக் கலாமன்ற இறுவட்டு வெளியீட்டை யாழ்.பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் நிகழ்த்தினார்.

"மெய்யியல் துளிகள்" நிகழ்ச்சியின் சிறப்பு அம்சமாக "பொலிவும் தெளிவும்" எனும் ஆடல் அளிக்கை அமைந்திருந்தது. திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் நடன ஆசிரியை திருமதி அகல்யா ராஜபாரதியின் நெறியாள்கையில் மாணவ மாணவியர் வழங்கிய இந்த நிகழ்ச்சி ஒரு வரலாற்றுப் பதிவாகக் கணிக்கப்பட வேண்டும்.

சைவ சித்தாந்த ஆச்சாரியார்களை மையமாகக் கொண்ட நாட்டிய நாடகம் எம்மத்தியில் இதற்கு முன்னர் அரங்கேற்றப்பட்டதோ தெரியவில்லை.

ஆயினும் திருமறைக் கலாமன்றத்தின் 'பொழிவும் தெளிவும்' சைவ சித்தாந்த மெய்யியலுக்கு முதன்முறையாக அரங்க வடிவத்தைக் கொடுத்திருக்கின்றது என்று எண்ணத் தோன்றுகின்றது.

மெய்கண்ட தேவரின் அற்புதப் பிறப்பையும், பரஞ்சோதி முனிவரிடம் அவர் பெற்ற தீட்சையையும், அவரது குடும்பக் குலகுருவாகிய சகலாகம பண்டிதர் அவரை முதல் தடவையாகச் சந்தித்ததையும், குலகுருவே சீடனாக மாறி மெய்கண்டரின் சிவஞானபோதத்துக்கு (பொழிவும்) வழிநூலாக சிவஞான சித்தியாரை வரைந்ததையும்(தெளிவும்) அழகுத் தமிழிலும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பண்களுடனும் தெளிவாக எடுத்துரைத்த ஒரு கலைப்படைப்பு அது.

நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவுக்கு இனிமையும் மெருகும் உயிரூட்டமும் அளிக்கும் வகையில் திருமதி அரவிந்தன் சுகன்யா இசை அமைத்திருந்தார். அந்த நிகழ்ச்சிக்குக் குரல் கொடுத்திருந்த இளம் பாடகர்கள் ஐவரும் (ஜெகனி, கலைச்செல்வி, சந்திரிக்கா, ஜெயகாந்தன், அமிர்தலோஜனன்) பாராட்டுக்குரியவர்கள். வயலின், ஓர்கன், முகர்சிங், மிருதங்கம், தபேலா, ஒக்ரபாட் போன்ற இசைக் கருவிகள் பொதுவாக நிகழ்ச்சிக்கு சுவை சேர்க்கத் தவறவில்லை.


மற்றும் ஒலி, ஒளி, மேடை அமைப்பு, முக ஒப்பனை, ஆடை அலங்காரம், சீரான முகாமைத்துவம் முதலிய அனைத்துமே திருமறைக் கலாமன்றக் கலைஞரின் கூட்டுமுயற்சித் தயாரிப்பினது சிறப்பை விளக்கியதுடன், உயர்தர கலைப்படைப்புக்கு சான்றாகவும் அமைந்திருந்தன.

நிகழ்வின் நிறைவாக என்ற ஒலி எழும்ப மண்டபம் நிறைய நறுமணப்புகை தவழ்ந்தது.

கோயில் ஒன்றுக்குள் இறை வழிபாட்டில் கலந்து கொள்ளும் சூழலில் நிற்கும் உணர்வை இது பார்வையாளருக்குத்தந்தது என்பது குறிப்பிடப்பட வேண்டியதொன்று.

நிறைவாக, 40 நிமிட வரையறைக்குள், ஆடல் இலக்கணத்துடன் நாடகப் பண்புகளைக் கலந்து, குறிப்பாக, வளர்ந்து வரும் தலைமுறையினரும் கேட்டு, பார்த்து, சுவைக்கும் விருந்தாக, அழகியலும் அறிவியலும் அருளியலும், வாழ்வியலும் இழையோடும் அரங்க நிகழ்வொன்றை அளித்த திருமறைக் கலாமன்றத்துக்குப் பாராட்டுக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கை மீதும் மனிதன் மீதும் இருக்கும் பிடிப்பே என்னை எழுத வைக்கிறது

## கவிஞர் சத்தியபாலனுடன் ஒரு சந்திப்பு

சி.ப.வேந்தன்

*கவனத்துக்குத் தப்பிய கால்விரல்*
*இறைகளுக்குள் உலர்ந்து போயிருந்தது*
*இரத்தம்*
*(கூத்து கவிதையிலிருந்து)*

**வாழ்க்கையின் மீதும் மனிதர்கள் மீதும் எனக்குள்ள நேசமும், வாழ்தலில் எனக்குள்ள பேரார்வமும்தான் என்னை எழுதவைக்கின்றன என்கிறார் கவிஞர் சத்திபாலன்.**

**கடந்த நாற்பது வருடங்களுக்கும் மேலாக இலக்கியத்தோடு பயணித்துக்கொண்டிருக்கும் அவரை ஒரு மழையோடுகூடிய மாலைப்பொழுதில் சந்தித்தேன். அவருடைய இலக்கியப் பயணம் பற்றிப் பலதையும் மழைச்சாரல் இதத்தோடு பகிர்ந்து கொண்டார்.**

***இலக்கிய உலகுக்குள் எப்படி நுழைந்தீர்கள்?***

எனக்குச் சின்னனிலை இருந்தே வாசிப்பிலை நிறைய ஈடுபாடு இருந்தது. விளையாட்டுக்களிலை மினக் கெடுறதில்லை. அப்பா என்ரை வாசிப்புப் பழக்கத்தை நல்லா ஊக்குவிச்சவர். நான் அஞ்சாம் ஆண்டு படிக்கேக்க விவேகானந்தருடைய புத்தகம் ஒண்டை வாசிக்கச் சொல்லித் தந்தவர். அதுதான் நான் வாசிச்ச முதலாவது புத்தகம். அதிலை இருந்து வாசிப்பிலை எனக்கு ஆர்வம் கூடிற்றுது. அதோட சின்ன வயசிலை நான் எழுதிறதை அடையாளம் கண்டு, கொஞ்சப் பேப்பர் ஒண்டாக்கிக் கட்டி அதை ஒரு சஞ்சிகை மாதிரிச் செய்து, அதுக்கு சிற்றலைகள் எண்டு பேர் வைச்சு நல்லைப் பாலன் எண்ட பேரிலை எழுதுங்க எண்டு அப்பா என்னட்டைத் தந்தவர். (மலர்ந்து சிரிக்கிறார்) ஒன்பதாம் ஆண்டில் எனக்குப் படிப்பிச்ச தமிழாசிரியர் திருமதி சண்முகராஜாதான், நான் பள்ளிக்கூடத்திலை எழுதின கட்டுரைகள், கையெழுத்துப் பிரதிகள், ஆக்கங்களைப் பாத்திட்டு, என்னை இன்னுமின்னும் எழுதச்சொல்லி ஊக்குவிச்சவர். நண்பர் திருச்செல்வம் ஜெயகாந்தனை அறிமுகப்படுத்தினார். அவருடைய எழுத்துக்கள் என்னை நிறையப் பாதிச்சது.

இந்தக் காலகட்டத்திலை எழுத்தாளர் சட்டநாதருடைய தொடர்பும் எனக்கு கிடைச்சது. ஈழத் தமிழ் எழுத்துக்களிலை முதலிலை அவருடைய எழுத்துக்களைத்தான் படிச்சனான். அதிலை இருந்து எனக்கு உள்ளூர் எழுத்தாளர்கள் மீதும் பெரும் மரியாதையும் விருப்பமும் வந்தது. அவர் எனக்கு நல்ல எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தினார். அ.ஜேசுராசாவும் என்னைப் பாதிச்ச ஒரு படைப்பாளி. அதுமட்டுமல்லாமல் என்ரை எழுத்துக்களை ஊக்குவிச்சதோட அவற்றுக்கான களங்களையும் எனக்கு ஏற்படுத்தித் தந்தவர். நான் எழுதிக் கொண்டிருக்கிற காலத்திலை அவருடைய 'திசை' சஞ்சிகை வெளிவந்துகொண்டிருந்தது. அதிலைதான் என்ர முதலாவது 'உள்' எண்ட சிறுகதை வெளிவந்தது. அதேபோல செம்பியன் செல்வனுடைய 'அமிர்த கங்கை' யிலை என்ரை 'நிறமிழக்கும் கனவுகள்' கதை வெளிவந்தது. தொடர்ந்து வானொலியிலை ஒளி மஞ்சரி என்ற நிகழ்ச்சிலை என்ரை கதைகள் வாசிக்கப்பட்டன. அப்பிடியே பரவலாய் எழுத ஆரம்பிச்சன். எண்பதுகளுக்குப் பிறகு கவிதையிலை எனக்கு நாட்டம் வர, கூடுதலாய் கவிதைகள் எழுத ஆரம்பிச்சன். அதைக் கட்டாயம் ஒரு தொகுப்பாய் வெளியிட வேணும் எண்டார் யேசுராசா. நண்பர்களும் வலியுறுத்திச்சினம். பிரபாகரன் என்ற நண்பருடைய 'அம்பலம்' என்ற அமைப்பாலை 'இப்பிடியாயிற்று நூற்றியோராவது தடவையும்' எண்ட கவிதைத் தொகுப்பு வெளியானது. அட்டைவடிவமைப்பைச் செய்யிறன் எண்டு தானே பொறுப்பெடுத்து பா. அகிலன் மிக அழகாகச் செய்து தந்தார். இந்தத் தொகுப்புக்கு ஒரு பின்னுரையையும் அவர் தந்தவர். அது என்ரை தொகுப்பிலை ஒரு முக்கிய அம்சம். அதைவிட உதயன்–சஞ்சீவி, நமது ஈழநாடு, வீரகேசரி, அம் பலம், கவிதை, நடுகை, தவிர, கலை முகம், தெரிதல், மூன்றாவது மனிதன், வெளிச்சம், ஆகவே போன்ற பத்திரிகை மற்றும் சஞ்சிகைகளிலை என்ரை படைப்புகள் வெளிவந்திருக்கு.

***ஒரு நல்ல கவிதை எப்படியிருக்க வேண்டும் என்பீர்கள்?***

கவிதை என்பது சில பேர் கூறுவது போன்று, இலகுவில் புரியாமல் ஒரு இருண்மைக்குள் படைக்கப்படுவதல்ல. கவிதை என்பது ஓரளவு இறுக்கமாக இருக்கவேண்டும். எல்லாவற்றையும் வெளியாகக்கூறாமல் பூடகத்தன்மையுடனும் இருக்க வேண்டும். அதின்ரை உள்ளீடாக சொல்லாத செய்தி இருக்கவேண்டும். சொல்வதற்கு மேலாக இன்னொன்று இருக்க வேண்டும். அதுதான் நல்ல கவிதையாகிறது. உதாரணமாக, கவிஞர் சித்தாந்தனுடைய கவிதை ஒண்டிலை பிள்ளைகள் இல்லாத வீட்டில் தனித்திருக்கின்ற பொம்மைகள்போல பொம்மைகள் இல்லாத வீட்டில் தனித்திருக்கின்றன குழந்தைகள் என்று வரும். மிக அழகான அற்புதமான ஒரு கவிதை அது.

***உங்களுடைய படைப்புக்களின் பொறி எதுவாக இருக்கிறது?***

வாழ்க்கை பற்றியும், மனிதன் பற்றியும், இன்னும் நிறையச்சொல்லவேண்டியது இருக்கு. உண்மையிலையே வாழ்க்கையையும் மனிதனையும் நேசிக்காத ஒருவனால் படைப்பாளியாக இருக்க முடியாது. போர்க்காலப் பகுதியில் என்ரை வீட்டுக்கருகிலை ஒருவர் சுடப்பட்டு இறந்தார். அந்த சடலத்தை எடுத்துக் கொண்டு போனதுக்குப் பிறகும் நீண்ட நாளாய் அந்தக் குருதிக்கறை அந்த வீதியிலை கிடந்தது. அது என்னை நிறையப் பாதிச்சுது. [illegible] பேரால [illegible] சொல்லுறது கொடுமை. அதின்ரை வெளிப்பாடுதான் 'கூத்து' எண்ட கவிதை.

நான் ஆசிரியன் எண்டதாலை மாணவருக்குள்ளாலை நிறையப் படிச்சனான். என்ரை படைப்பிலை ஜீவநதியிலை வந்த ஒரு கதை, என்னுடைய மாணவன் ஒருவருடைய உண்மைக்கதை. வாழ்க்கையின் மீதும் மனிதராலையும் பற்று இருக்கிற வரைக்கும் நான் படைச்சுக்கொண்டிருப்பன். அதிலை இருந்தே என்ரை படைப்புகள் தோன்றுகின்றன.

***உங்களுடைய பார்வையில் இன்றைய இளந் தலைமுறையும் அவர்களின் இலக்கிய வரவும் எப்படியிருக்கிறது?***

மிகமிக நெருக்கடியான காலகட்டங்களிலையும் நிறைய நல்ல படைப்புகள் வெளிவந்த இடம் இது. இப்ப குறைஞ்சு போச்சு. விடுதலைக் காலத்திலை விடுதலைவேண்டியும், அது சார்ந்தும் அந்தப் பின்னணியிலை படைக்கப்பட்ட படைப்புக்களிலை தர்மமும் நேர்மையும் இருந்தது. நல்ல படைப்பாளர்கள் இருந்தார்கள். அடிவாங்கினதைக் கேட்டிட்டு எழுதுறதிலையும், அடிவாங்கினவன் அதை எழுதுதிறதிலையும் வித்தியாசம் இருக்கு. வலியை உணர்ந்தவனுடைய எழுத்துக்களிலை காத்திரம் இருக்கும். உண்மை இருக்கும். எனக்குக் கவலையாய் இருக்கு. கடைசிப் போரிலை வன்னியிலை இருக்காத பலபேர் அந்த வலிகளையும்கதைகளையும்படைப்பாக்குகிறார்கள். அதிலை என்ன இருக்கப்போகிறது? வலியை அனுபவிச்சவர்கள் அதைப் படைக்க வேணும்.

படைப்பாளர்களுக்கு தான் சமூகத்துக்கு நல்ல விசயம் செய்கிறன் எண்ட மனப்பாங்கு வரவேணும். எழுதுவதும் வாசிப்பதும் பொழுதுபோக்கு எண்ட கருத்து இல்லாமற்போகவேணும். எனக்குள்ள தோன்றுகிற நல்ல கருத்தைச் சமூகத்துக்குச் சொல்ல வேணும் எண்ட உணர்வு படைப்பாளனுக்கு உள்ளூர வரவேணும். அதைக் கடமையாய் உணர வேணும். வள்ளுவரை எடுத்தால் அவருக்கு சமூகத்துக்கு நல்லவைகளைச் சொல்லவேணும் எண்ட உந்துதல் இருந்தது. அதாலதான் நல்ல படைப்பு உருவாகினது. இன்றைய தலைமுறையினர் தமது படைப்புக்கள் புதுமையாய் இருக்கவேணும் என்பதிலை மட்டும் குறியாய் இருக்கினம். அதனால பின் நவீனத் துறைசார்ந்த படைப்புக்கள் வருது. அதில நல்லவைகளும் வருது ஏற்றுக்கொள்ள முடியாதவைகளும் வருது.

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# தமிழை வளர்த்த தாமோதரம்பிள்ளை

கே.எஸ்.சிவஞானராஜா

"நிலவளமும், நீர்வளமும், கலைவளமும் கதிரழகும், குலவளமும், குடியழகும் தலவழகும், தமிழழகும், கொழுவழகும், குலையழகும், குடிலழகும், குணவழகும், மலையழகாய் நெடி துயர்ந்த மன்னுபதி சிறுப்பிட்டி". இத்தகு சிறப்பு வாய்ந்த சிறுப்பிட்டி ஊரிலே, மாப்பாண முதலி பரம்பரையைச் சேர்ந்த வைரவநாதபிள்ளை என்பவருக்கும், நீர் அழகு, நில வழகு, சீர்அழகு சிறப்பழகு, தேர் அழகு, திணையழகு, நேர் அழகு, நிலையழகு, பேர் அழகு, பொறையழகு, பார் அழகு, படிப்பழகு, ஏர்அழகு, எருதழகு, ஏழாலையூர் பெண்ணழகு. இத்தகு எழில் மலிந்த ஏழாலை பெற்றெடுத்த மயில்வாகனம் தம்பதிகளின் மகள் பெருந்தேவியாருக்கும் தவப் புதல்வனாகப் பிறந்தவரே தாமோதரம்பிள்ளையாவார்.



**சுருக்கம்**

சிறுப்பிட்டி வைரவ நாதபிள்ளை- ஏழாலை பெருந்தேவியர் தம்பதியினருக்கு 1832.09.12 இல் அவதரித்தவரே தாமோதரம்பிள்ளையாவார். ஏழு ஆண் பிள்ளைகளில் இவரே முதலாமவராவார்.

**கல்வி**

தந்தையிடமும், பண்டிதர் நீலயினார், வரதராச பண்டிதர், நெவின்ஸ்கறல், விசுவநாதபிள்ளை, வித்துவான் கதிரவேற்பிள்ளை, சுன்னாகம் முத்துக் குமாரக்கவிராயர் இன்னும் பலருடனும் கல்வியைப் பகிர்ந்து, கல்விச் சமூகமொன்றின் ஆணிவேராகவும், நியமகுருவாகவும், அறிவுக்களஞ்சியமாகவும், வற்றாத தமிழருவியாகவும் கல்வியில் மிளிர்ந்தார்.

தமிழ்மொழியிலே தக்க பாண்டித்தியம் பெற்று, மகாபாரதம், இராமாயணம், யாப்பருங்கலக் காரிகை, நன்னூல், தொல்காப்பியம், திருக்குறள், நாலடியார், சைவநூல்கள், சிறுவர் தமிழ் ஆதியாம் தொன்மைத் தமிழ் நூல்களிலும் நிபுணத்துவம் ஆகி, அவற்றை உரைக்கும் பாங்கில் வித்தகராகவும், திகழ்ந்தபடியால், "வித்தியா பண்டிதர்" எனச் சென்னையிலே பட்டம் பெற்றார்.

மேலும், கவி பாடுவதில் மிகமிகச் சமர்த்தராகவும், சிறப்புக்கவி, துதிகவி, சீட்டுக்கவி, உரையிடையிட்ட செய்யுள் சைவ மகத்துவம், கட்டளைக்கலித்துறை என்னும் நூல்களுமாக, பரசமய கண்டனமும், உத்தமசீர், உத்தம மோனை மற்றும் வீரசோழியம், திருத்தணிகைப் புராணம், இறையனாரகப் பொருள், கலித்தொகை, அகநானூறு ஆகிய பிரபந்தங்களிலே ஆழ்ந்த புலமையைக் கொண்டதன் பிரகாரமும், பண்டைய இலக்கண இலக்கிய நூல்களின் தாற்பரியத்தை அனுபவித்த மேதாவியாகி விளங்கியதன் நிமித்தமும், அதனதன் எதிர்கால தமிழன்னையின் மாங்கல்ய வாழ்வு கருதி, தமிழ் மக்களிடையே ஒரு மாபெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

**பணிகள்**

1854 இல் குமரகுருபரர் இயற்றிய நீதி நெறி விளக்கத்தை, மானிப்பாய் அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் அச்சடித்து பதிப்பித்து வெளியிட்டார். இதுவே இவரது கன்னிப் பதிப்பாகும்.

திருக்குறளின் சாரமாக அமைந்த இந்த நூல், நூற்றியிரண்டு இனிமையான வெண்பாக்களால் ஆனதாகும். அத்தோடு, நாவலருக்கும் பதிப்புத்துறையில் இயன்ற உதவியை தேடிச் சென்று வழங்கினார்.

1868 ஆம் ஆண்டு தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையத்தைப் பதிப்பித்தபோது, ஆறுமுக நாவலரும் ஏடுகளைப் பதிப்பித்து உதவி செய்தார். தொல்காப்பியத்தை முதன் முதலாகப் பதிப்பித்தவர் தாமோதரம்பிள்ளையேயாவார்.

1881 ஆம் ஆண்டு, வீரசோழியம் என்ற நூலை பெருந்தேவனாரின் உரையோடு, சென்னை வித்தியா வர்த்தனி அச்சுக் கூடத்தில் பதிப்பித்து வெளியிட்டார். 1895 ஆம் ஆண்டிலும் மீண்டும் பதிக்கப்பட்டபோது இந்தியா விழிப்படைந்தது.

1833 இல் கச்சியப்பர் இயற்றிய திருத்தணிகைப் புராணம், 3,161 செய்யுள்களை முழுமையாகக் கொண்டு, தெளிவான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டதாக இந்நூல் சிறந்த பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. 1883 இல், இறையனாரகப் பொருள் என்னும் நூலை, நக்கீர உரையுடன் பதிப்பித்து, அகப்பொருள் இலக்கண நூலாக வெளியிட்டார்.

1885 ஆம் ஆண்டு, தொல்காப்பியம் பொருளதிகாரத்தைப் பதிப்பித்து, நச்சினார்க்கினியர் எழுதிய உரையை மகிமை பெறச் செய்தார். 1987 ஆம் ஆண்டு, கலித்தொகை நூலை புதுக்கோட்டை மகாராஜாவின் மந்திரியான சேஷைய சாத்திரிகளின் உதவியோடு பதிப்பித்து வெளியிட்டார்.

1989 ஆம் ஆண்டு, இலக்கண விளக்கத்தை குட்டித் தொல்காப்பியமாக வெளியிட்டு மாணவர்களின் இலக்கணக் காயங்களை ஆறச் செய்தார். ஆறுமுக நாவலரும், தாமோதரம்பிள்ளையும் எழுத்துப் பிழைகள் வராமல் தமிழ் நூல்களை வெளியிட்டமை பெரும் சாதனையாகும்.

1876 இல் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஏழாலையிலே ஸ்தாபித்தார். அங்கு தற்போது கல்விப்பயிர் தழைத்தோங்குகிறது. இவரது சாதனையாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தால் முதன் முதலாக நடத்தப்பட்ட கலைமாணிப் பட்டப் பரீட்சையில் (பி.ஏ) முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்று, தாய்நாட்டுக்கும், சிறுப்பிட்டி, ஏழாலைக்கும் பெருமை தேடித்தந்தார். ஆங்கலேயர்களான பேர்ணல், சேர் உவால்றர் எலியெற், லஷ்சிங்டன், ஜோர்ஜ் றெனோல்ட் முதலானோர் இவரிடம் தமிழை ஆர்வமாய்க் கற்றார்கள்.

**கௌரவம்**

தாமோதரம்பிள்ளையவர்கள், தமிழ் மொழிக்கு ஆற்றிய நூற் பதிப்புப் பணிக்காகவும், சென்னை சர்வ கலாசாலையில் பிரதான பரீட்சகராக விளங்கிய காரணத்தினாலும் 1895 ஆம் ஆண்டு இந்திய அரசால், இராவ் பகதூர், என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். ஆங்கிலேயர், பிரபுக்கள், மடாதிபதிகள், புலவர்கள் மத்தியில் இது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**இறைபதம்**

உலகிலே தமிழ் அன்னைக்கு நூல்களினால் மகுடம் சூட்டியவர்களில், இவரைப் போன்று வேறு எவரையும் குறிப்பிடும் அளவுக்கு எவருமிலர் என்றே கூறலாம். உடல், பொருள், ஆவி அனைத்தையும் தமிழுக்காக அர்ப்பணித்தமையால், உடல் தளர்வுற்றது. 1901.01.01 வைகுந்த ஏகாதசியன்று சிவப்பேறு அடைந்தார். இவருக்காக இந்தியாவும் கண்ணீர் சொரிந்தது.







மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் தேசிய கலை இலக்கியப் பேரவையினால் வெளியிடப்பட்ட ஆசிரியை திருமதி ஸ்ரீலேகா பேரின்பகுமாரின் நாடக எழுத்துருக்களடங்கிய "கிணற்றங்கரை", சிறுவர் கதையான "மயில் இறகு" ஆகிய இரண்டு நூல்களின் அறிமுக நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பண்டத்தரிப்பு, காலையடியில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராசா மகேந்திரன் குடும்ப உள்ளரங்கில் நடைபெற்றது. நூல்களுக்கான மதிப்பீட்டுரைகளை க. சிவகரன், சு. நிகேஸ் ஆகியோர் ஆற்றினர். நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவாத அரங்குடன்

# சிலப்பதிகார விழா












ச.லலீசன்

தென்மராட்சி இலக்கிய அணியினரால் முன்னெடுக்கப்பட்ட சிலப்பதிகார விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி, சங்கத்தானையில் உள்ள தமிழ்க்கோட்ட அரங்கில் நடைபெற்றது. ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்ற பொருளில் முன்னாள் பேராயர் அதிவண எஸ்.ஜெபநேசன் எழிலுரையாற்றினார். சிலப்பதிகாரத்துக்கு உள்ள பல்வேறு சிறப்புக்களையும் எடுத்தியம்புவதாகப் பேராயர் தனது உரையை அமைத்தார்.

கவிஞர் த. நாகேஸ்வரன் தலைமையில் 'சிலப்பதிகாரத்தில் சிந்தைக்கு விருந்தளிப் பதில் விஞ்சி நிற்பது எது?' என்ற பொருளில் விவாத அரங்கு இடம்பெற்றது. இதில் 'கண்ணகியின் கற்புச் சீர்மையே' என வவுனியா நீதிமன்ற உத்தியோகத்தர் என்.கே. கஜரூபனும், 'மாதவியின் ஒழுக்கச் செம்மையே' என்ற பொருளில் சாவகச்சேரி டிறி பேக் கல்லூரித் தமிழாசிரியர் ச.மார்க்கண்டுவும், 'பாண்டியனின் 'நீதித்தூய்மையே' என்ற பொருளில் தென்மராட்சி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வே. உதய குமாரும், 'காவுந்தி அடிகளின் துறவு மேன்மையே' என கோப்பாய் ஆசிரிய கலாசாலைப் பிரதிமுதல்வர் ச.லலீசனும் கருத்துரைகளை வழங்கினர்.

மிகவும் சுவாரசியமாக இடம்பெற்ற விவாத அரங்கில், நடுவர் கண்ணகியின் பக்கமே தீர்ப்பை வழங்கினார். காவுந்தி சிறந்த துறவி எனினும், தனியே அருகக் கடவுள் வழிபாட்டையே ஊக்குவித்தார். ஆனால் இளங்கோவும் துறவியாக இருந்த போதி லும் பல கடவுளர்களை வணங்கி சமயப் பொறை காண்கிறார்.

கோவலன் நீதி வழங்குவதற்காகத் தன்நிலையில் தற்கொலை செய்தான் எனினும் தான் மேற்கொண்ட பாதகங்களுக்குப் பரிகாரமோ நிவாரணமோ வழங்கவில்லை. மாதவி ஒருவனுடன் மாத்திரம் வாழ்ந்தாள் எனினும் உயரிய பெண்ணுக்குரிய குணமுடையவளாக விளங்கவில்லை. கோவலனிடம் இருந்து பொருள் ஈட்டு வதிலேயே அவள் குறியாக இருந்தாள். கண்ணகியின் காற்சிலம்பைத் தவிர அத்தனை யையும் சுருட்டினாள். கோவலனது குடும்பத்தையும் பிரித்தாள்.

கண்ணகி மதுரையை எரித்தாள் என்ற குற்றச்சாட்டுக்கு உட்பட்டவள். ஆயினும் தீயவர்களை மாத்திரமே எரித்தாள். பாண்டியன் சபையேறி வழக்காடியமைக்கு ஊடாகப் பெண்மைக்குத் துணிவைத் தருகிறாள் எனவே சிந்தைக்கு விருந்தளிப்பதில் விஞ்சி நிற்பது கண்ணகியின் கற்புச் சீர்மையே. என நடுவர் முடிவை அறிவித்தார்.

நிகழ்வில் தொழிலதிபரும், தாதிய உத்தியோகத்தருமாகிய த.ஜெயந்தன் தம்பதியர் மங்கல விளக்கேற்றினர். சு.ஶ்ரீவரன் கடவுள் வாழ்த்து பாடினார். பெரும் எண்ணிக் கையான இலக்கிய ஆர்வலர்கள் கலந்து இந்த நிகழ்வைச் சிறப்பித்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எத்தகைய அரசியல் தலைவர்களை நாம் ஆதரிக்கவேண்டும்?

## சிறந்த நடிகர் லியானர்டோ டிகாப்ரியோ ஒஸ்கார் விருதைப் பெற்ற பின்னர் கருத்து



ஹொலிவுட்டின் மிக உயரிய மதிப்பாகக் கருதப்படும் ஒஸ்கார் விருதுகளில் சிறந்த நடிகருக்கான பிரிவில் முதல் முறையாக விருதைத் தட்டிச் சென்றிருக்கிறார் லியானர்டோ டிகாப்ரியோ.

'தி ரெவனன்ட்' படத்துக்காகச் சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருதைப் பெற்ற லியாணர்டோ டிகாப்ரியோ தனது ஏற்புரையில் கூறியதாவது:

"நன்றி... அக்கடமிக்கு நன்றி. உங்கள் அனைவருக்கும் நன்றி. என்னுடன் இந்த விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கும் எனது வாழ்த்துகள். நம்பமுடியாத நடிப்புத் திறனை அவர்கள் காட்டியிருந்தார்கள். அற்புதமான நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்களின் அயராத முயற்சிக்கு கிடைத்த பயனே "தி ரெவனன்ட்". முதலில் எனது சகோதரனைப் போல இருக்கும் டாம் ஹார்டியை குறிப்பிட விரும்புகிறேன்.

டாம்... திரையில் உனது அசாத்தியமான ஆளுமையை மிஞ்சுவது, திரைக்கு அப்பால் நீ பாராட்டும் நட்பே. இன்னாரித்து, இந்த இரண்டு வருடங்களில் நீங்கள் சினிமா வரலாற்றில் உங்களுக்கென தனி இடைத்தை பிடித்து விட்டீர்கள். நீங்கள் அபாரமான திறமைசாலி. அற்புதமான சினிமா அனுபவத்தைத் தந்த உங்களுக்கும், படத்தின் ஒளிப்பதிவாளர் லுபெஸ்கிக்கும் நன்றி. ஃபாக்ஸ் நிறுவனத்துக்கும், ரீஜென்சி நிறுவனத்துக்கும் நன்றி. எனது மொத்த அணிக்கும் நன்றி.

இந்தத் துறையில் எனது ஆரம்ப கால வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்த கேடன் ஜோன்ஸுக்கு நன்றி, சினிமா என்ற கலையைப் பற்றி எனக்கு நிறையக் கற்றுத் தந்த ஸ்கார்ஸஸிக்கு நன்றி, இந்தத் துறையில் நான் நிலைத்திருக்க உதவிய ரிக் யோர்னுக்கு நன்றி, எனது பெற்றோருக்கு நன்றி, அவர்கள் இல்லையெனில் எதுவுமே சாத்தியப்பட்டிருக்காது. எனது நண்பர்கள் அனைவருக்கும் நன்றி.

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இயற்கை உலகுடனான மனிதர்களின் உறவே ரெவனன்ட் திரைப்படம். அதிக வெப்பமயமான ஆண்டாக 2015இல் பதிவான இந்த உலகத்தில், (ரெவனன்ட்) படப் பிடிப்புக்காக, பனியைத் தேடி, உலகின் தெற்கு மூலைக்குச் சென்றோம். காலநிலை மாற்றம் என்பது உண்மை. அது இப்போது நடந்து கொண்டிருக்கிறது. மனித இனமே தற்போது எதிர்கொண்டிருக்கும் உடனடி அச்சுறுத்தல் அது. எந்த நடவடிக்கையையும் தள்ளிப் போடாமல் நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து அதற்காக உழைக்க வேண்டும்.

உலகில் பெரும் மாசுபாட்டை ஏற்படுத்துபவர்களுக்காகவும், பெரு நிறுவனங்களுக்காகவும் பேசும் தலைவர்களை ஆதரிக்காமல் மனித இனத்துக்காக, உலகின் பூர்வகுடிகளுக்காக (indigenous people), காலநிலை மாற்றத்தால் நேரடியாக பாதிக்கப்படும் கோடிக்கணக்கான பின்தங்கிய மக்களுக்காக, எமது குழந்தைகளின் குழந்தைகளுக்காக, அரசியலாலும் பேராசையாலும் நசுக்கப்படும் குரல்களுக்காக பேசும் தலைவர்களை நாம் ஆதரிக்க வேண்டும்.

இந்த அற்புதமான விருதுக்கு உங்கள் அனைவருக்கும் நன்றி. நாம் எமக்குக் கிடைத்த இந்த உலகை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என அலட்சியமாக எடுத்துக்கொள்ள வேண்டாம்; நான் இன்றைய (விருது பெற்ற) இரவை அலட்சியமாக எடுத்துக் கொள்ளவில்லை. மிக்க நன்றி." இவ்வாறு லியானர்டோ டி காப்ரியோ பேசினார்.






ஹொலிவுட் திரையுலகின் மிக உயரிய மதிப்பாகக் கருதப்படும் ஒஸ்கார் விருதுகள் வழங்கும் விழா கோலாகலமாக நடைபெற்று முடிந்துள்ளது. 88ஆவது ஒஸ்கார் திருவிழாவில் வெற்றிப் படைப்புகள். வெற்றியாளர்களின் பட்டியல் இதோ...

**சிறந்த அசல் திரைக்கதை-** ஸ்பாட்லைட்

**சிறந்த தழுவல் திரைக்கதை-** தி பிக் - ஷார்ட்

**சிறந்த உறுதுணை நடிகை-** அலிசியா விகந்தர் (தி டேனிஷ் கேர்ள்- திரைப்படத்துக்காக விருது வழங்கப்பட்டுள்ளது)

**சிறந்த ஆடை வடிவமைப்பு-** ஜென்னி பீவன் (மேட் மேக்ஸ்: ஃபியூரி ரோடு)

**சிறந்த தயாரிப்பு வடிமைப்பு** - (மேட் மேக்ஸ்: ஃபியூரி ரோடு)

**சிறந்த ஒப்பனை மற்றும் சிகை அலங்காரம்-** (மேட் மேக்ஸ்: ஃபியூரி ரோடு)

**சிறந்த ஒளிப்பதிவு-** இமானுவேல் லுபெஸ்கி - தி ரெவனன்ட் ( இவர் ஏற்கெனவே பேர்ட்மேன், கிராவிட்டி படங்களுக்காக ஆஸ்கர் பெற்றவர்)

**சிறந்த எடிட்டிங்-** மார்கெரட் சிக்ஸல் (மேட் மேக்ஸ்: ஃபியூரி ரோடு)

**சிறந்த ஒலித்தொகுப்பு** - மார்க் மாங்கினி மற்றும் டேவிட் வைட் (படம்: மேட் மேக்ஸ்: ஃபியூரி ரோடு)

**சிறந்த ஒலிக் கலவை-** கிறிஸ் ஜெங்கின்ஸ், கிரெக் ருடோல்ஃப், பென் ஆஸ்மோ - (படம்: மேட் மேக்ஸ்: ஃபியூரி ரோடு)

**சிறந்த கிராபிக்ஸ்/விஷுவல் எஃபெக்ட்ஸ்** - ஆண்ட்ரு வைட்ஹர்ஸ்ட், பால் நாரிஸ், மார்க் ஆர்டிங்க்டன், சாரா பென்னட் - எக்ஸ் மாகினா

**சிறந்த அனிமேஷன் குறும்படம்** - பியர் ஸ்டோரி

**சிறந்த அனிமேஷன் திரைப்படம்** - இன்ஸைட் அவுட்

**சிறந்த உறுதுணை நடிகர்: மார்க் ரைலான்ஸ்** - படம்: பிரிட்ஜ் ஆஃப் ஸ்பைஸ்

**சிறந்த குறும்படம் (ஆவணப் பட பிரிவு)** - எ கேர்ள் இன் தி ரிவர்: தி ப்ரைஸ் ஆஃப் ஃபர்கிவ்னஸ்

**சிறந்த ஆவணப்படம்** - ஏமி (படத்தின் இயக்குநர்: ஆசிப் கபாடியா)

**சிறந்த லைவ் ஆக்சன் குறும்படம்** - ஸ்டட்டரர்

**சிறந்த அயல்நாட்டு மொழி திரைப்படம்** - சன் ஆஃப் சால் (ஹங்கேரி)

**சிறந்த இசை** - எனியோ மோரிகானே - படம்: தி ஹேட்ஃபுல் எய்ட்

**சிறந்த பாடல்** - ரைட்டிங்க்ஸ் ஆன் தி வால் - படம்: ஸ்பெக்டர்

**சிறந்த இயக்குநர்-** அலயாந்த்ரோ கொன்ஸாலே இன்னாரித்து - தி ரெவனெண்ட் சென்ற வருடமும் இன்னாரித்து சிறந்த இயக்குநருக்கான ஆஸ்கரை வென்றிருந்தார்.

**சிறந்த நடிகை** - ப்ரீ லார்சன் - ரூம்- (யூலிலிது)

**சிறந்த நடிகருக்கான விருது:** லியாணர்டோ டி காப்ரியோ (தி ரெவனன்ட்)

**சிறந்த திரைப்படம்:** ஸ்பாட்லைட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சற்குரு தரிசனமே சகல பாக்கிய சுகம்

கே.எஸ்.சிவஞானராஜா



ஒவ்வொரு வருடமும் தைமாதம் பிறந்துவிட்டால் சற்குரு தியாக ராஜ உற்சவமே ஞாபகம் வரும். "எந்தரோ மஹானு பாவுலு" என்பது திவ்ய நாமம். ஆம்! இந்தப் புவியில் எத்தனையோ மகான் கள் இருக்கிறார்கள். அத்தனை மகான்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனங்கள். அந்தரிகி வந்தனத்துடன், தெலுங்கு (சமஸ்கிருத) மொழியில் உருக்கி வார்க்கப் பட்ட பஞ்சரத்தினமாகிய ஐந்தும், இந்தப் பிரபஞ்சம் உய்யும் பொருட்டு, ஸ்ரீஇராமச் சந்திர மூர்த்தியை வியப்பதாக, மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் அவர்களால் மனம் உருகிப் பாடப்பட்டதாகும். மாணிக்கவாசகரின் திருவாசகம் போல தியாகராஜரின் கீர்த்தனைகள் அனைத்தும் ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்தம் சுரப்பவையாகும். இவருடைய காலம் கர்நாடக சங்கீத வரலாற்றில் ஒரு பொற்காலமாகும்.

(1767 - 1847) 80 வருடங்கள் பூமியில் மகிமையோடு மாட்சி பெற்ற இவர், இருபத்தொரு வருடங்கள் சிறிஇராம நாமத்தை 96 கோடிதரம் உச்சரித்து சீதா ராமா இலட்சுமண தரிசனத்தை நேரடியாகப் பார்த்து அனுபவித்தவர். அவ்வாறான தரிசனத்தைக் கண்ட சுவாமிகளின் பஞ்சரத்தின கீர்த்தனைகள், ஒவ்வொரு வருடமும் தைமாதம் பகுள பஞ்சமியை ஒட்டி ஆராதனை செய்யப்பட்டு வருகிறது.

**யாழ்ப்பாணம்**

இலங்கையில் சிறப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் இது வெகு சிறப்பாகக் கொண் டாடப்பட்டு வருகிறது. குறிப்பாக வட இலங்கைச் சங்கீத சபையானது, ஆண்டுதோறும். தைமாதத்தில்வெகு சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டும் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வடஇலங்கைச் சங்கீத சபை, தற்பரானந்தன் அரங்கில், 2016.02.13 சனிக்கிழமையன்று தியாகராஜ சுவாமிகளின் பஞ்சரத்தின ஆராதனை ஆன்மிக பக்திமணம்கமழ தேன் சொட்ட அரங்கேறியது.

**பேறு**

தலைசிறந்த மூத்த இசைக்கலைஞர்கள் உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட இசைக் கலைஞர்கள் இந்த ஆராதனையில் பங்கு பற்றிச் சிறப்பித்தமை வணாங்குதற்குரியது. திருமதி ஞானகுமாரி சிவனேசனின் "கம்பீரமான சாரீரமும், சங்கீத வாலாயமும், அனுபவ முதிர்ச்சியும், ஆராதனை வளமும், பாடாந்தரமும்" மேடையையும், மண்டபத்தையும், ரசிகப் பெருமக்களையும் தக்க இடத்தில் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளுக்கு சபாஷ் போட வைத்ததெனலாம்.

வாய்ப்பாட்டுக் கலைஞர்கள், வயலின் கலைஞர்கள், மிருதங்கக் கலைஞர்கள், வீணைக் கலைஞர்கள், கடம் வாத்தியக் கலைஞர்கள், தாளக் கலைஞர்கள், ஒலிப்பதிவுக் கலைஞர்கள், நெறியாள்கைக் கலைஞர்கள் என அரங்கு களை கட்டியது. தம்புரா வாத்தியத்தை யான் கொண்டு போகாதது எனது தவறு என்பதை உணர்ந்தேன். ஏனென்றால் தம்புரா வாத்தியத்தின் சுவையை நன்குணர்ந்தே தியாகப் பிரம்மம் திராட்சை ரகக் கீர்த்தனைகளைப் பெருவாரியாக இயற்றியருளியுள்ளார். 2017இல் தம்புராவின் தேவையை அரங்கு உணர்த்தியது. யாழ்.இந்தியத் துணைத் தூதரக அனுசரணையோடு, சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் ஆராதனை, அவரது தரிசனத்தையும், சௌபாக்கிய சுகத்தையும் அள்ளித் தந்தது. துணைத்தூதர் ஏ.நடராஜனும் அவரது சகாக் களும் மிகுந்த ஆர்வத்தோடும், பொலிந்த இரசனையோடும், கலந்து சிறப்பித்தமை மண்டபத்துக்கு வலுவூட்டியது.

மூத்த இசைக் கலைஞர் சங்கீத பூசணம் சு.கணபதிப்பிள்ளை ஆராதனையின் சுருதிலயமாக விளங்கியமை சபையை மௌனமாக்கியது. மற்றும் சங்கீத பூசணம் மாது சிரோன்மணி வேலாயுதர் கலந்து கொண்டமை அரங்கின் கனத்தைப் பெறுமதியாக்கிற்று. யாழ். மாவட்டத்தில் மட்டும் 1000 கலைஞர்கள் இருப்பதாகப் பெருமைப்படுகின்ற போதிலும் இங்கு வந்தவர்களைச் சுலபமாக எண்ணிவிடலாம். சங்கீத சபையால் உழைப்பவர்கள்கூட இதற்குத் தரிசனமாகாதது கவலை தருவதாகும்.

**நாதஸ்வரம்**

வருடந்தோறும் ஆரம்ப நிகழ்வு மங்கல வாத்திய சகிதம் ஆரம்பிப்பது சம்பிரதாயமாகும். நல்லூர் ரஜீந்திரன் குழுவினர் அதனைக் கச்சிதமாகச் சிறப்பித்து வருவது வரவேற்கத்தக்கதாகும். மங்கல வாத்தியங்கள் மண்ணையும், மண்டபத்தையும் சுதாகரிக்க வல்லவை. சுகமும்அதிலேநிரம்பியுள்ளது.இத்தகுபேற்றை அன்றைய ஆரம்பம் வாரித் தந்தது.

**சிறப்பு**

பாடசாலை மாணவர்கள் இந்த உற்சவ தரிசனத்தில் குழுவாகப் பங்குபற்றியமை வழமையை விடப் 'பரோபகாரமாக' அமைந்திருந்தமை வரவேற்கத்தக்கது. பெறுமதியாகிற்று.

ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் ஐம்பது மாணவர்கள், தியாகராஜர் கீர்த்தனைகளை ஒத்திகையோடு அரங்கேறியமைக்காக தனிதனியாகச் சம்பந்தப்பட்ட பாடசாலைக்கும், இசை ஆசிரியர்களுக்கும் நன்றிகளை அள்ளிக் கொடுக்கலாம். மற்றும் சுவாமிகளின் இசைச் சித்திரம் அருமை. இளைஞர்கள் பலருக்குச் சந்தர்ப்பம் அளித்தமை பாராட்டுக்குரியது. சங்கீத சபை அதற்காகக் காத்தேயிருக்கிறது.

**பின்னணி**

லய வாத்தியங்களின் 'முழக்கம்' சபையோரைத் தலையாட்ட வைத்தது. இசை மழையா, இசை வெள்ளமா, இசைப் போட்டியா, மிருதங்கச் சமரா? என்றவாறு சபையோர் திக்குமுக்காடினர். அப்படி இல்லை! பஞ்சரத்தினத்துக்கு மிருதங்கக் கலைஞர்கள் ஏற்கனவே பல தடவைகள் பயிற்சியோடு வாசித்து வாசித்து, ஸ்வரத்துக்கு எப்படி வாசிக்க வேண்டும், சாகித்தியத்துக்கு எப்படி வாசிக்க வேண்டும் என்று புலமை பெற்றிருப்பதனால் மிக மிக லாவண்யமாக வாசித்து பல பாராட்டுக்களை அபகரித்துக்கொண்டனர். வீணை வாசித்த குமுதா அம்மா கூடவே பாடியும் மேடைப் பதியை அலங்கரித்துக் கொண்டமை மிகநன்று. எத்தனை வித்துவ சிரோன்மணிகள் இருந்தும், சாத்திரப்படிக்கு ஒன்றாவது மெருகூட்டிற்று. அவ்வளவும் போதும். வீணையினுடைய முக்கியத்துவத்தை யார் மறந்தாலும் யாழ்ப்பாணம் மறத்தலாகாது.

**பிரதம விருந்தினர் உரை**

யாழ். இந்தியத் துணைத் தூதர் ஏ.நடராஜன் அவர்களும் கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களுக்கு இந் தியா தனது முழுமையான ஆதரவையும், உதவிகளையும் தொடர்ந்து வழங்கும் என்பதை வலியுறுத்தி, வடஇலங்கைச் சங்கீத சபை நடத்திய பஞ்சரத்தின ஆராதனை மெய்சிலிர்க்க வைத்து விட்டது என்று புகழாரம் செய்தார்.


இசை, ஆரோக்கியத்தையும், நீடித்த ஆயுளையும், இனங்களுக்கிடையே சகவாழ்வையும் நாடுகளுக்கிடையே நல்லுறவையும் ஏற்படுத்துவதில் முதன்மை பெறுகிறது. இந்தியக் கலை ஞர்களும், இலங்கைக் கலைஞர்களும் சேர்ந்து இனி வருங்காலத்தில் ஓர் ஆராதனை இடம்பெறுமாயின் அது சங்கீத சபைக்கு மேலுமொரு வாழ்வளிக்கும் என்பதில் சற்றேனும் ஐயமிருக்காது.

**விண்ணப்பம்**

சங்கீத சபையை ஒரு சாம்ராஜ்ஜியமாக மிளிர வைப்பதற்கு பெற்றோர்கள், பிரமுகர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் கள், வடமாகாணசபை, இசை ஆசிரி யர்கள் நிதியுதவி செய்ய முன்வர வேண்டுமென ஒரு விண்ணப்பம் பணிவோடு முன்வைக்கப்படுகிறது. சௌபாக்கிய சுகம். இரங்குவீர்களாக.

# அனுபவங்களின் வலி அழுகைகள் நிரந்தரமில்லை

## அலெக்ஸ் பரந்தாமனின் சிறுகதைத் தொகுப்பு மீது ஒரு பார்வை




நெடுந்தீவு மகேஷ்

அமைதி வேண்டிப் போராடிய காலங்களெல்லாம் அழுதகாலங்களான நிலையில், அனுபவங்களின் வலிகளைப் பதிவு செய்யும் ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் வரிசையில் சிறுகதை எழுத்தாளரான அலெக்ஸ் பரந்தாமன் அவர்களைப் பார்க்கலாம். அழுகைகள் நிரந்தரமில்லை என்ற பெயரில் ஜீவநதியின் 38ஆவது வெளியீடாகப் பரந்தாமன் அவர்களின் சிறுகதைத் தொகுதி வெளி வந்துள்ளது. இதில் அடங்கியுள்ள சிறுகதைகள் யாவுமே போரின் கோரத்தையும், அதனால் ஒரு மக்கள் கூட்டம் அடைந்த காயங்களின் வலிகளையும் எமக்குக் காண்பித்து வருத்துகின்றன.

நேரில் கண்டவைகளை மாத்திரமல்ல, அடைந்து துயருற்ற அனுபவங்களையும் கதைகளினூடாக நிசமாகக் காண வகை செய்திருக்கும் எழுத்தாளரின் மொழி எம்மைக் கதைப்புலத்திற்குள் ஈர்த்துச் செல்வதைக் காணலாம்.

கதைகளின் தொகுப்பினுள்ளே விரிந்துள்ள பத்துக் கதைகளும் துயரத்தின் உச்சத்திற்கே எம்மை அழைத்துச் செல்லுகின்றன. "நீண்ட நாள்களாகப் பொய்த்துப் போயிருந்த வானம், இன்று பொலுபொலுவென கண்ணீர் கொட்டி அழுவது போன்று இருந்தது". எனத் தொடங்கும் அழுகைகள் நிரந்தரமில்லை என்ற கதையில் "வெளித்த வானத்தை நோக்கி அவரின் விழிகள் விரிகின்றன" எனக் கூறும்போது, மாறும் காலத்தை நமக்கு உணர்த்தும் வகை தெரிகிறது அந்தக் கதையில். குருவிகள் குதூகலித்தபடி சிறடித்துப் பறக்கின்றன எனக்காட்டும்போதே அழுகைகள் என்றும் நிரந்தரமில்லை என்பதை வலியுறுத்துகிறார். இந்த அழுகைகள் நிரந்தரமில்லை என்ற கதையின் உள்ளடக்கத்தைச் சூழ்ந்த வேதனைகள் நிரந்தரமில்லை என்பதனையே அது உணர்த்துகிறது. இவ்வாறே கதைகளை வாசிப்பவனின் மனதில் கட்டி எழுப்பப்படும் துயரக் கோலங்களுடன் தமிழ் தரும் உவமைகள் நன்றே உள்ளன. இலக்கியப் பண்பொளிரும் வார்த்தைகளால் வடிவமைக்கப்பட்டுள்ள கதைகளின் தொகுப்பாகவும் இதனைப் பார்க்கலாம். வரலாற்றின் உண்மையை உரைக்கும் காலக் கண்ணாடியின் பதிவாகவும் இதனைக் கொள்ளலாம்.

கதைகள் யாவுமே கற்பனையைக் கலைத்த யதார்த்தங்களாக வெளிப்பட்டுள்ளன. இவற்றுள் அனேகமானவை உண்மைகளே! உண்மைகளைக் கதைகளாகக் கேட்கும்போது நிகழ்வுகளின் காட்சிகள் எமது மனத்தை உறுத்தும் வகையைக் காணுகின்றோம் .

இந்த நூலின் சமர்ப்பணம் 'ஒரு மாலை கவியும் பொழுதில் வலையன் மடத்து வடலிப் பனைகளுக்கு நடுவில் வெடித்துச் சிதறிய எறிகணைகளோடு தங்கள் விழிகளையும் மூடிக்கொண்ட எனது உடன்பிறந்த அக்காமார் இருவருக்கும்' எனக் குறிப்பிட்டு இருப்பினும், எம்மினத்தின் உறவுகள் யாவருக்கும் இந்த நூலின் அர்த்தமுள்ள உள்ளடக்கம் அர்ப்பணமேயாகும்.

புதுக்குடியிருப்பில் வாழ்பவர். வன்னிப் போரின்போது அந்தப் பிரதேசத்திலேயே வாழ்ந்தவர். பத்திரிகைத் துறையில் நீண்டகால அனுபவம் மிக்கவர். கடந்த எண்பதுகளில் எழுதத் தொடங்கி இன்றுவரை எழுதிக் கொண்டே இருப்பவர். காலம் பிந்திய வரவாக அவரது படைப்புக்கள் இப்பொழுது நூலுருப் பெற்றிருப்பினும், அவற்றை எமது மண்ணின் வலி சுமந்த வரலாறாகப் பார்க்கலாம். போர் ஓய்ந்தபின்னும் அனைவராலும் வஞ்சிக்கப்பட்டதாக உணரும் நிலையில், மீண்டும் வாழவேண்டும் என்ற உத்வேகத்தோடு கடந்தவைகளை நினைவுபடுத்துவதுடன் தொடர்ந்தும் எழுதுகிறார். அவரது எழுத்துக்கள் என்றும் வாழும். அழுகைகள் நிரந்தரமில்லை என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து எழுதும் எழுத்தாளர் அலெக்ஸ் பரந்தாமனின் எழுத்துக்களைக் கையேற்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி இராஜினிதேவி சிவலிங்கம்



# பல்லவர் காலத்தின் கலைச் சிறப்பு

தமிழக வரலாற்றில் மிக முதன்மை பெற்ற காலமாக பல்லவர் காலம் சிறப்பிக்கப்படுகின்றது. பல்லவர்கள் ஏறத்தாழ ஏழு நூற்றாண்டுகள் தமிழ் நாட்டில் பேரரசர்களாக ஆண்டு புகழ் பெற்றனர். இவர்களுடைய பண்டைய குலம் என்ன என்பதை அறுதியிட்டுக் கூறமுடியாத போதிலும், பல்லவர் என்ற சொல் ஓர் அரச குடும்பத்தைக் குறிக்கிறதேயொழிய ஒரு மரபை அல்லது மக்கள் பிரிவினைக் குறிக்கவில்லை என்ற கருத்தைப் பொதுவாக அனைவருமே ஏற்றுக்கொள்கின்றனர்.

பல்லவ மன்னர்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள். அவர்களில் முற்காலப் பல்லவர்கள் ஏறத்தாழ கி.பி. 250 முதல் 340 வரை ஆட்சி நடத்தினர். அவர்கள் தங்களுடைய பட்டயங்களை பிராகிருத மொழியில் வெளியிட்டார்கள். இடைக்காலப் பல்லவர்கள் கி.பி. 340 முதல் 575 வரை ஆண்டனர். அவர்கள் செப்பேடுகளை வடமொழியில் வரைந்தனர். பிற்காலப் பல்லவர்களுடைய காலம் கி.பி. 575 முதல் 900 எனக் கூறுகின்றார்கள். இவர்கள் பட்டயங்களையும், கல்வெட்டுக்களையும் பெருமளவில் வெளியிட்டனர். இவை கிரந்த மொழியில் வெளியிடப் பெற்றன.

பல்லவர்காலத்தில் நன்கு வரையறுக்கப் பெற்ற ஆட்சிமுறை நிலவியது. அரசரே மத்திய அரசுக்குத் தலைவராக விளங்கினார். பல்லவ ஆட்சிமுறையில் தந்தைக்குப் பின் மூத்த மகன் ஆட்சி உரிமையைப் பெறவேண்டும் என்ற கருத்து நிலைபெற்றிருந்தது. பல்லவர்கள் "மகாராசன்", "தரும மகாராசன்", "மகா ராசாதிராசன்" போன்ற பட்டங்களைச் சூட்டிக் கொண்டனர். இவற்றைவிட பல்லவ மன்னர்கள் பெற்றுக்கொண்ட விருதுப் பெயர்கள் அவர்களது சிறப்புக்களை வெளிப்படுத்தும் சான்றுகளாக விளங்குகின்றன.

நீதி வழங்கும் துறைக்கு அரசரே தலைமை வகித்தார். கிராமங்கள், மாவட்டங்கள் ஆகியவற்றில் செயற்பட்டு வந்த மன்றங்கள் அரசின் ஆணைக்கு உட்பட்டிருந்தன. பெரு நகரங்களில் இயங்கி வந்த அறங்கூறும் அவைகளை "அதிகரணங்கள்" என்று அழைத்தனர். சிலவேளைகளில் இந்த நீதிமன்றங்கள் நல்ல முறையில் நீதி வழங்கவில்லை எனவும் கருதப்பட்டது. இவையன்றி அரசனின் நேர் மேற்பார்வையில் "தருமாசனம்" என்ற பெயருடை நீதிமன்றமும் செயற்பட்டு வந்தது. "அதிகரணம்" குற்ற வழக்குகளை விசாரிக்கும் மன்றம் எனவும், தருமாசனம் என்பது பிறவழக்குகளை விசாரிக்கும் மன்றம் எனவும் கூறப்பட்டது.

பல்லவர்கள் போர்கள் பல புரிய வேண்டிய நிலை ஏற்பட்டதன் விளைவாக வலிமை பொருந்திய பெரும்படை ஒன்றை அமைத்திருந்தனர். அந்தப் படை யானை, குதிரை, காலாள் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியிருந்தது. போர் யானைகளைப் பராமரிப்பதில் மிகுந்த அக்கறை காட்டி வந்தனர் என்பதை வைகுந்தப் பெருமாள் கோயிலில் காணப்பெறும் சிற்பங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

பல்லவர் காலத்தில் தோற்றம் பெற்ற பக்தி இயக்கம் பற்றியும், இந்த இயக்கம் தோற்றம் பெற்றதற்கான காரணிகளையும், அதன் விளைவுகளையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. பல்லவர் காலத்துக்கு முந்திய காலப்பகுதியை அறநூல்கள் எழுந்த காலம் என தமிழ் இலக்கிய வரலாறு குறிப்பிடுகிறது. களப்பிலர் ஆட்சிக் காலத்துத் தமிழ் நாட்டில் சமண, பௌத்த மதங்கள் அபரிமிதமான செல்வாக்குப் பெற்றிருந்தமையால் அறநூல்கள் பல தோற்றம் பெற்றன எனலாம். களப்பிலர் ஆட்சியில் நலிவுற்ற தமிழ் மக்களுக்கு அறவழியே உய்திநெறியென சமண, பௌத்தர் வழிகாட்டினர்.

கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர், ஆரம்ப காலப் பல்லவ மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் வைதீக சமயங்களுக்கும் இந்த மன்னர்கள் தமது ஆதரவை நல்கினர். வேதக் கல்வி மரபு பரவியது. புராண இதிகாசக் கதைகளும் பரவின.

கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலேயே சிம்ம விஷ்ணு, குமார விஷ்ணு முதலான பல்லவ அரசர்கள் ஆட்சி செய்தனர். யுவான சுவாங் குறிப்பின்படி கி.பி. 5ஆம் நூற்றாண்டளவில் காஞ்சிபுரத்தில் சைவசமயத்தைச் சேர்ந்த பலர் பௌத்த சமயத்தில் சேர்ந்தனர்.

பக்தி இயக்கம் எழுச்சி பெற்ற காலத்தில் பல்லவ மன்னர்கள் பிராமணக் குடியிருப்புக்களை விரிவுபடுத்தினர். வேதாகம மரபுகள் பரவின. திருக்கோயில்கள் எழுச்சி பெற்றன. கோயில் பூசை மரபுகளும் ஏற்பட்டன. திருக்கோயில் நகரங்களும் உருவாகின. அரண்மனையில் சமயச் சடங்குகள் மேலோங்கின. அரண்மனைச் சடங்குகள் ஆலயச் சடங்குகளாக மாற்றமடைந்தன.

பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணு, வைணவ சமயத்தவன். இவனது மகனே மகேந்திரவர்மன். பல்லவர் காலத்துப் பக்தி நெறியில் பெரும்பங்கு வகித்தவன் சிம்ம விஷ்ணுவே. ஆயினும் மகேந்திர வர்ம மன்னன் காலத்திலேயே இந்துமத மறுமலர்ச்சியும், சமய நிலையில் திருப்பங்களும், புதுமைகளும் ஏற்பட்டன.

பல்லவர்களின் சமயச் சின்னமாகிய நந்திச் சின்னமும், சிவனின் நட்டுவாங்கக் கொடியும், அவர்கள் சைவத்தின் மீது கொண்டிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றன. கூரம், காசாக்குடிப் பட்டயங்களில் நந்திக்குமேல் லிங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

> பல்லவர்கள் கலைகளின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர். இவர்கள் காலத்தில் எழுச்சி பெற்ற ஆலயங்கள் இந்தக் காலக் கலை வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன.

மகேந்திர வர்மன் நூலாசிரியனாகவும், கட்டட நிர்மாணச் சிற்பியாகவும், இசை வல்லுநராகவும், ஓவியனாகவும் விளங்கியமையால், இவனால் பல ஆலயங்களை அமைக்க முடிந்தது. குடுமியாமலைக் கல்வெட்டில் இடம்பெற்றுள்ள சிவதோத்திரம் மகேந்திரவர்மனின் ஆழ்ந்த சிவபக்தியைப் புலப்படுத்துகின்றது. மூன்றாம் சிம்மவர்மன் என அழைக்கப்படும் ஐயடிகள் காடவர்கோன் 24 சிவத்தலங்கள் பற்றி தேத்திர வெண்பா பாடியுள்ளார்.

பல்லவர் காலம், சமயத்துறையில் சிறந்து விளங்கியதுபோல், இலக்கியத்துறையிலும் சிறந்து விளங்கியது. பல்லவர்கள் வடமொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார்கள். மகேந்திரவர்மன் எழுதிய மந்த விலாசப் பிரஹசனம், நாயன்மார்கள் பாடிய பக்திப் பாடல்கள், ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள், சுந்தரரின் திருத்தொண்டர் தொகையும், நந்திக் கலம்பகமும் இந்தக் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களாகும்.

பல்லவர்கள் கலைகளின் வளர்ச்சிக்குப் பெரும்பங்களிப்புச் செய்துள்ளனர். இவர்கள் காலத்தில் எழுச்சி பெற்ற ஆலயங்கள் இந்தக் காலக் கலை வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன. இந்தக் கால மன்னர்களால் அமைக்கப்பட்ட ஆலயங்கள் கட்டடக் கலையின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன. மகேந்திரவர்மனால் அமைக்கப் பெற்ற குடைவரைக் கோயில்கள், நரசிம்மவர்மனால் அமைக்கப் பெற்ற ரத வடிவக் கோயில்கள், மலைதனிக் கோயில்கள், ராஜசிம்மன் கால கற்றளிக் கோயில்கள், நந்திவர்மன் கால சிறியவடிவ கற்றளிக் கோயில்கள். இந்தக் காலக் கட்டடக் கலையின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன. இந்தக் காலத்தில் ஆலயங்களை மையமாகக் கொண்டு சிற்ப ஓவியக் கலைகள் வளர்ச்சி பெற்றன. மாமல்லபுரச் சிற்பங்கள் இந்தக் காலச் சிற்பக் கலை வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

இந்தக் காலத்தில் நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடல்கள் இசையுடன் பாடப்பட்டன. இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. ஆலயங்களினூடாக இசைவளம் பெற்றது. மாமல்லபுரத்தில் நடனச்சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டன. ஆயனச் சிற்பியின் தலைமையில் சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டன. இவற்றுள் நடனக் கலையை வெளிப்படுத்தும் சிற்பங்கள் பெருமளவில் காணப்படுகின்றன. பல்லவ மன்னர்களின் அவையில் ஆஸ்தானப் புலவர்களும் ஆஸ்தான நர்த்தகியும் நியமிக்கப்பட்டனர்.

இசை, நடனம், சமயம், இலக்கியம், ஓவியம், சிற்பம், கட்டடக் கலை ஆகியவற்றில் மக்கள் சிறந்து விளங்குவதற்கு ஏற்ற கல்வி அந்தக் காலத்தில் வளர்ச்சியுற்றிருந்தது. பல்லவர்களின் தலைநகரமாகிய காஞ்சியிலும், சோழங்கபுரம், பாகூா போன்ற ஏனைய இடங்களிலும் கல்லூரிகள் அல்லது கடிகைஸ்தானங்கள் அமைக்கப் பெற்று கல்வி புகட்டப்பட்டதுடன், கோயில்களும் சைவ, வைணவ, பௌத்த, சமண மடங்களும் கல்விக் கூடங்களாக விளங்கின.

பல்லவர் காலமானது தமிழக வரலாற்றில் தமிழர்களுடைய பண்பாடு நன்கு வளர்ச்சியுறத் தொடங்கிய காலம் எனலாம்.

## வாழ்க்கைமீதும் மனிதன் மீதும் இருக்கும் பிடிப்பே என்னை எழுத வைக்கிறது.....

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கையின்ரை நல்லவைகளைப் படைப்புக்களிலை கொண்டுவாறது மிகமிகக்குறைவு.

இப்பத்தைய இளந்தலைமுறை இலக்கியம் பற்றி ஒரு புரிதல் வைத்திருக்கிறார்கள். அதுதான் சரி என்பதிலை குறியாகவும் இருக்கிறார்கள். இது ஆரோக்கியமா என்பது சந்தேகம்தான். அண்மையிலை ஒரு இலக்கிய சஞ்சிகையிலை வந்த படைப்பு என்னை மிகவும் அருவருக்க வைத்தது. குறியீடாகச் சொல்லவேண்டியதை மிகக் கீழ்த்தரமான முறையிலை சொல்லியிருந்தமை மிக வேதனையாக இருந்தது.

உங்களுடைய வேறு படைப்புக்கள் பற்றியும் மொழி மாற்றக் கவிதைகள் பற்றியும் கூறுங்கள்?

சிறுவர் பாடல்தொகுப்பு ஒண்டு செய்தனான். நமது ஈழ நாடிலை எங்கே போகிறோம், உதயனிலை மண்மூடும் சுவடுகள், எங்கிருந்து எங்கே எண்ட பத்தி தொடர்கள் எழுதியிருக்கிறன். Time will write a song for you (காலம் உங்களுக்காக ஒரு பாட்டெழுதும்) எண்ட ஆங்கிலத் தொகுப்பிலை என்ரை கவிதைகள் வந்திருக்கு. மொழி மாற்றம் செய்யவேணுமெண்டு எந்த ஆங்கிலக் கவிதையையும் நான் படிக்கிறதில்லை. நான் படிக்கிறபோது சில கவிதைகள் என்னை மொழி மாற்றம் செய்யத் தூண்டும். நிறைய ஆங்கிலக் கவிதைகள் என்னை ஆக்கிரமிச்சிருக்கு. இப்ப நிலான் தோமஸ் என்பவருடைய கவிதைத்தொகுப்பை மொழிபெயர்ப்புச் செய்து கொண்டிருக்கிறன். என்ரை மூதாதையருடைய வாழ்க் கையை நாவலாக்கிற எண்ணமும் இருக்கு. படைப்பாளி புறத்தாக்கங்களிலை இருந்து விடுபட வேணும். அதுக்கான சூழல்வேணும் சுதந்திரம் வேணும். இந்த வருசத்தோடை வேலையிலை இருந்து ஓய்வுபெறப்போறன். இனி நான் படைப்புக்களிலை சுதந்திரமாய் ஈடுபடலாம் எண்டு நினைக்கிறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சத்துக்கள்

### வெளியாகாமல் இருக்க...

- காய்கறிகளை ஆவியில் வேக வைப்பதே சிறந்தது, வறுப்பதும், பொரிப்பதும் நல்லதல்ல.
- விற்றமின், புரோட்டீன் முதலியவைகள் எப்போதுமே முதலில் ஆவியில் வேக வைத்தால் தான் அப்படியே இருக்கும்.
- கொதிக்க வைத்தால் சிறிது குறையும்.
- வறுத்தாலோ, பொரித்தாலோ நிச்சயம் சத்துக் குறைந்து விடும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | | கிளிநொச்சி | | பருத்தித்துறை | சாவகச்சேரி | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 600 | 650 |
| நண்டு | 300 | 400 | 300 | 400 | 400 | 100 | – |
| கணவாய் | 500 | 600 | 500 | 500 | 650 | 600 | – |
| பாரை | 500 | 600 | 500 | 600 | 500 | 600 | 450 |
| சுறா | 550 | 600 | 600 | 800 | 700 | – | – |
| சீலா | 250 | 450 | 400 | 400 | 500 | 450 | 450 |
| விளை | 650 | 500 | 400 | 500 | 450 | 500 | 450 |
| முரல் | 250 | 400 | 350 | 400 | 350 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 500 | 600 | – |
| கிளாக்கன் | 550 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 400 | – | 300 |
| திரளி | 200 | 300 | 200 | 200 | 350 | 200 | 350 |
| நகரை | 200 | 300 | – | 200 | 300 | – | 350 |
| சூடை | 100 | 150 | 100 | 200 | 140 | 100 | 100 |
| ஒட்டி | 250 | 200 | 150 | 250 | 300 | – | 250 |
| திருக்கை | 200 | 350 | 200 | 350 | 350 | 200 | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 300 | 300 | 300 | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 500 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 350 | 400 | – |

## நாளை

மாசி-20
வியாழக்கிழமை 03.03.2016
திதி: நவமி பி.ப.02.35 வரை
நட்சத்திரம்: மூலம் பி.இ.02.06 வரை
ராகுகாலம்: 01.56-03.26 வரை
சுபநேரம்: 07.56-09.26 வரை



## பருப்புப் பூரி

### தேவையானவை:

கோதுமை மா – 1 சுண்டு
பாசிப் பருப்பு – 1 மேசைக்கரண்டி
கடலைப் பருப்பு – 1 மேசைக்கரண்டி
உப்பு – தேவையான அளவு
மிளகு – கால் தேக்கரண்டி பொடித்தது
சீரகம் – கால் தேக்கரண்டி பொடித்தது

### செய்முறை

- பருப்புக்களை ஊற வைத்து விழுதாக அரைக்கவும்.
- அரைத்த விழுதுடன் மற்றப் பொடிகளைக் கலந்து, சட்டியில் சிறிது எண்ணெய் விட்டு வதக்கவும்.
- கோதுமை மாவைப் பிசைந்து பூரியாக இட்டு, வதக்கி வைத்த விழுதைச் சிறிது எடுத்து வைத்து மூடிவிடவும். எண்ணெயில் பொரிக்கவும்.
- இதே முறையில் உருளைக்கிழங்கை வேக வைத்து, பூரியை இட்டு உள்ளே மூடிவிட்டுப் பொரிக்கலாம்.
- காய்கறிகளையும் அரிந்து வேகவிட்டு உள்பக்கம் வைத்தும் செய்யலாம்.

## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 25 | 60 | 40 | 40 | 20 | 60 | 30 | 30 |
| கத்தரி | 80 | 60 | 80 | 80 | 50 | 60 | 90 | 40 |
| கரட் | 120 | 160 | 150-200 | 160 | 100 | 200 | 130 | 150 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 80 | 80 | 80 | 100 | 80 | 60 | 60 | 100 |
| பாகல் | 80 | 80 | 80 | 100 | 100 | 140 | 80 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 80 | 50 | 60 | 140 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 60 | 60 | 60 | 70 | 70 | 100 | 60 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 50 | 100 | 70 | 100 | 50 | 70 |
| பூசணி | 50 | 60 | 50 | 50 | 60 | 120 | 35 | 60 |
| தக்காளி | 40 | 40 | 30 | 40 | 40 | 30 | 30 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 40 | 50 | 40 | 45 | 40 |
| கீரை | 20 | 30 | 30 | 10 | 20 | 30 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 140 | 110 | 100 | 100 | 200 | 100 | 150 |
| புடோல் | 60 | 60 | 50 | 40 | 40 | 40 | 20 | 60 |
| கோவா | 70 | 60 | 60 | 60 | 40 | 80 | 50 | 50 |
| வெண்டி | 80 | 80 | 60 | 60 | 100 | 80 | 70 | 100 |
| போஞ்சி | 80 | 80 | 60 | 80 | 100 | 160 | 30 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 | 60 | 120 | 160 | 80 | 100 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40-50 | 40-50 | 40 | 30-45 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 65 | 80 | 50-60 | 80 | 60 | 100 |
| தேசிக்காய் | 40 | 60 | 60 | 50 | 40-50 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 15-20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 120 | 120 | 200 | 130 | 100 |
| இராசவள்ளி | 150 | 140 | 150 | 140 | 140 | 150 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 240 | 300 | 400 | 200 | 250 | 300 |
| பனங்கிழங்கு | 05 | 02.50 | 05 | 02 | 05 | – | 02.50 | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## கண்ணாடி குவளைகள்

சிறிய கண்ணாடிக் குவளைகள் அறிமுகமாகியுள்ளன. மூடியுடன், அலங்காரமான வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன. இவற்றை மேசை அலங்காரமாகவும், பரிசுப் பொருளாகவும் வழங்க முடியும். இவற்றின் விலை 450 ரூபா முதல் 600 ரூபா வரையாகும்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | | | | 3 | | | |
| | | | | | | | | |
| | 6 | | | | 2 | | | 9 |
| | | | | | | | 1 | |
| | | | | 1 | | 4 | | 6 |
| 8 | 1 | 3 | 7 | | | 5 | | |
| 4 | 9 | | | 3 | | 6 | | 5 |
| | | 8 | | | 5 | | | |
| | | | | | 6 | 7 | | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 4 | 7 | 3 | 5 | 9 | 8 | 1 |
| 1 | 7 | 5 | 8 | 9 | 4 | 6 | 3 | 2 |
| 3 | 8 | 9 | 1 | 2 | 6 | 5 | 4 | 7 |
| 2 | 5 | 3 | 4 | 7 | 1 | 8 | 9 | 6 |
| 8 | 9 | 7 | 3 | 6 | 2 | 1 | 5 | 4 |
| 4 | 6 | 1 | 9 | 5 | 8 | 2 | 7 | 3 |
| 9 | 4 | 6 | 2 | 8 | 7 | 3 | 1 | 5 |
| 7 | 3 | 2 | 5 | 1 | 9 | 4 | 6 | 8 |
| 5 | 1 | 8 | 6 | 4 | 3 | 7 | 2 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரேகோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# விஜய் சேதுபதியுடன் இணையும் ரித்திகா

விஜய் சேதுபதி தற்போது சீனு ராமசாமி இயக்கி வரும் "தர்மதுரை" படத்தில் நடித்து வருகிறார். இதில் இவருடன் தமன்னா, சிருஷ்டி டாங்கே, ராதிகா சரத்குமார் உள்ளிட்ட பலர் நடித்து வருகிறார்கள். இந்தப்படத்தை ஆர்.கே.சுரேஷ் தயாரித்து வருகிறார். யுவன் இசையமைத்துள்ள இந்தப்படத்தின் இறுதிகட்டப் படப்பிடிப்பு தற்போது மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இந்தப் படத்தைத் தொடர்ந்து "காக்கா முட்டை" மணிகண்டன் இயக்கத்தில் உருவாக இருக்கும் "ஆண்டவன் கட்டளை" படத்தில் நடிக்க இருக்கிறார் விஜய் சேதுபதி. இதில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக பல முன்னணி நடிகைகளிடம் பேச்சு நடத்தப்பட்டது. இறுதியாக தற்போது "இறுதிச் சுற்று" படத்தில் தன்னுடைய யதார்த்தமான நடிப்பின் மூலம் புகழ் பெற்ற ரித்திகா சிங்கை ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள் படக்குழுவினர். இந்தப் படத்தை கோபுரம் பிலிம்ஸ் நிறுவனம் தயாரிப்பதுடன், படப்பிடிப்பு அடுத்த வாரம் தொடங்கவுள்ளது.



**மேடம்:** பொது இடங்களில் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் உண்டாகும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. பெண்களுக்கு சகோதரர்களால் உதவி கிடைக்கும்.

**இடபம்:** நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். குடும்பத் தேவை பெருமளவில் நிறைவேறும். மனைவியின் அன்பில் மனம் நெகிழ்வீர்கள்.

**மிதுனம்:** எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். தாயின் அன்பினால் ஆசி பெறுவீர்கள்.

**கடகம்:** நண்பரின் செயலில் குறை காண வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மூலதனம் தேவைப்படும். மிதமான இலாபம் கிடைக்கும். வாகன போக்குவரத்தில் கவனம் தேவை.

**சிங்கம்:** முக்கியமான செயல் நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் தடை உண்டாகி விலகும். மிதமான இலாபம் கிடைக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**கன்னி:** தியாக உணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு ஏற்பட்டு விலகும். மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**துலாம்:** மற்றவர் குறையைப் பெரிதுபடுத்திப் பேச வேண்டாம். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிக்க முயல்வர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**விருச்சிகம்:** வெகுநாள் விருப்பம் இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:** முன் யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் கூடும். நண்பரால் உதவி கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**மகரம்:** இலட்சிய மனதுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**கும்பம்:** எதிரியும் கூட நட்புப் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். எதிர்பார்த்த சுபச்செய்தி வந்து சேரும். மாணவர்கள் கல்வியில் வளர்ச்சி காண்பர்.

**மீனம்:** நண்பர்களுக்கு உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வருமானம் திருப்தியளிக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை தரும்.

படித்தவுடன் கொலை வெறி வந்தால் நான் பொறுப்பு அல்ல.

படம் போட்டதும் எல்லாரும் தும்முறாங்களே ஏன்?
அதுதான் "மசாலா" படமாச்சே...

அந்தப் பாம்புக்கு என்ன நோயாம்?
வேறென்ன புற்று நோயாம்

மீன் பிடிக்கிறவனை மீனவன்னு சொல்ல முடியும், ஆனா மான் பிடிக்கிறவனை மாணவன் என்று சொல்ல முடியாது.

பாம்பு எத்தனை தடவை படம் எடுத்தாலும் அதாலை ஒரு தடவை கூட ரிலீஸ் பண்ண முடியாது.

மொய் எழுதறவருக்குப் பக்கத்துலேயே ஒருத்தர் நின்னுக்கிட்டிருக்காரே அவர் யார்?
அவர் தான் மொய்க் காப்பாளர்!

காதலர்கள் ஏன் எப்பவும் பொய்யே பேசுறாங்க?
அவங்க "மெய்" மறந்து காதலிக்கிறவங்களாச்சே!




Talks and 1 other follow
அபிசேக் மியாவ்
பலரும் பேஸ்புக் போறாங்க. டுவிட்டர் போறாங்க. வாட்ஸ் அப் போறாங்க. ஆன வேலைக்கு மட்டும் போக மாட்டம் என்றாங்கள்.



எமது பண்டைய காலத்து தையல் இயந்திரம் தெரியாதவர்கள் தெரிந்து கொள்ளுங்கள்

பணத்தை எவருக்காக வேண்டுமானாலும் செலவழித்துக் கொள்ளுங்கள்



நேரத்தை தகுதியானவர்களுக்காக மட்டுமே செலவழியுங்கள்

அட நன்னாரி பயலே !



பல தடவை அம்மா சொல்லிக்காட்டியிருப்பார்கள், பத்து மாதம் சுமந்த கதையை



ஒரு தடவை கூட அப்பா சொல்லிக்காட்டியதில்லை, இரவு பகலாக கஷ்டப்பட்டு வாழ்க்கை முழுவதும் எம்மைச் சுமந்த கதையை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிளவுபடாத

தேவையையும், அபிவிருத்தியையும் நிறைவு செய்தால் எமது இலக்கை அடைந்து விட்டோம் என்று அர்த்தமில்லை. எமது மக்கள் ஆண்டாண்டு காலத்துக்கும் இந்த மண்ணில் சுயநிர்ணய உரிமை யுடன் வாழக்கூடிய ஒரு நிரந்தர தீர்வை நோக்கியே நாம் பயணிக் கின்றோம். பிளவுபடாத நாட்டினுள் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு, வடக்கு - கிழக்கு இணைந்த அலகு, அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட்ட தமிழர் தேசம், இதனை அடையும் வரையில் எமது பயணம் தொடரும்.

மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்கு அரசில் மிக முக்கியமான அமைச்சு ஒன்றை நான் எடுத்து இருக்கலாம். இதற்கு வாய்ப்பும் இருந்தது. ஆனால் எமது பயணம் அது அல்ல. நாம் தனி நாட்டுக் கோரிக்கையைக் கோரியிருந்தோம். பின்னர் ஆயுத வழியில் போராடினோம். இன்று அரசியல் ரீதியாக போராடுகின்றோம். இதில் நாம் வெற்றியடைய சந்தர்ப்பம் உள்ளது.

இன்று மக்கள் தமது பிரச்சினையை வெளிப்படையாகச் சொல்லக் கூடிய ஒரு சூழல் உருவாகியுள்ளது. இது இந்த ஆட்சியில் மக்கள் மனங்களில் ஏற்பட்ட மாற்றம். மக்களுடைய உணர்வுகளையும், குறைபாடுகளையும் ஆதங்கங்களையும் நான் மதிக்கின்றேன்.

நான் எதிர்க்கட்சித் தலைவராகியதற்கு பின்னர் எனது பணிகள் அதிகமாகி விட்டன. எனவே திருகோணமலை மாவட்ட மக்களைச் சந்திப்பது கடினமாகவுள்ளது. எனவே தான் இன்னுமொரு நாடாளுமன்ற உறுப்பினர், மாகாண கல்வி அமைச்சர், இரண்டு மாகாணசபை உறுப்பினர்கள் மாவட்டத்தில் உள்ளார்கள். அவர்களிடம் உங்கள் குறைகளை முறையிடுங்கள். அவர்கள் தீர்ப்பார்கள் - என்றார். (த-வ-5-40)

## மைத்திரி

மைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் கட்சிக்கு நன்மை செய்வார் என்று எதிர்பார்த்தோம்.

ஆனால் ஏமாற்றமளிக்கும் வகையிலேயே அவரின் செயற்பாடுகள் அமைந்துள்ளன என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்:- சிறிலங்கா சுதந்திரக் கட்சியை முற்று முழுதாக அழிக்கவே ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிக்கின்றது. சுதந்திரக் கட்சியைப் பாதுாக்கவோ அல்லது கட்சியின் கொள்கைகளை முன்னெடுக்கவோ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சிக்கவில்லை.

மிகத் தெளிவாகத் திட்டமிட்ட அடிப்படையில் சுதந்திரக் கட்சியை அழிப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி முயற்சிக்கின்றது.ஐக்கிய தேசியக் கட்சி யுடன் இணைந்து போட்டி யிட்ட போதிலும், மைத்திரிபால சிறிசேன கட்சித் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதன் பின்னர் கட்சிக்கு நன்மை செய்வார் என்று எதிர்பார்த்தோம்.

எனினும் அந்த எதிர்பார்ப்புக்கள் அனைத்துமே ஏமாற்றமளிக்கும் வகையில் அமைந்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வதா அல்லது கட்சியின் நலனுக்காக தொடர்ந்து செயற்படுவதா என்பதனை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் தீர்மானிக்க வேண்டுமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ-5)

## கண்டாவளையில்

8 ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் பல்வேறு காணித் துண்டுகளைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோரக்கன் கட்டு வை.எம்.சி.ஏ காணி, வெலிக்கண்டல் சந்தியிலுள்ள காணி, புளியம்பொக்கணைச் சந்தியிலுள்ள காணிகள், பரந்தன், மாணிக்கம் தோட்டம் என பல்வேறு இடங்களில் இந்தக் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன. மொத்தம் 88 ஏக்கர் காணிகளைச் சுவீகரிப்பதற்கான அறிவித்தலே வெளியாகியிருந்தது.

இது தொடர்பில் கண்டாவளை பிரதேச செயலர் ரி.முகுந்தன், நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வந்திருந்தார்.

இதன் போது இணைத் தலைமைகள், குறித்த காணி சுவீகரிப்பை நிறுத்தும் தீர்மானத்தை எடுத்திருந்தனர். அதனை நடைமுறைப்படுத்துமாறு பிரதேச செயலரையும் பணித்திருந்தனர்.

ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைமைகளின் தீர்மானத்துக்கு அமைய, காணி சுவீகரிப்புக்கான அறிவித்தல் விடுத்தல், ஒட்டுதல் நடவடிக்கைகளை பிரதேச செயலகம் இனிமேல் மேற்கொள்ளாது என்று பிரதேச செயலர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டால், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானம் மேற்கோள்காட்டப்படும் என்றும் பிரதேச செயலாளர் கூறினார். (த-வ-5,ரி3)

# மரண அறிவித்தல்

## திருமதி பரமேஸ்வரி முருகையா



தோற்றம்: 13.03.1937
மறைவு : 28.02.2016

36.பூநாறி லேன் கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி முருகையா 28.02.2016 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகசபை - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அன்னராணி மற்றும் காலஞ்சென்றவர்களான கைலாசப்பிள்ளை, ஆனந்தராசா, பாக்கியலட்சுமி ஆகியோரின் சகோதரியும், வரதராஜன், ரஞ்சிதகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலாதேவி, தயாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சதீஸ் - மதி வதனி (பிரான்ஸ்), குணேஸ் - ஸ்ரீகாயத்திரி (மலேசியா), நிரேஸ், ஞானேஸ், விமேஸ், நிதன் (பிரான்ஸ்), நிசாந் (பிரான்ஸ்), நர்மினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பாட்டியும், அஸ்மிதனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2016) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூநாறி லேன்,
கொக்குவில் மேற்கு,கொக்குவில்

தகவல்:
மகன்- வரதராஜன்


**075 071 5155**

# மரண அறிவித்தல்

## சிற்றம்பலம் சண்முகரட்ணம் (சனா)

(முன்னாள் உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம் விவேகானந்தா அச்சகம்)

அன்னை மடியில்
31 . 05 . 1936



ஆண்டவன் அடியில்
01 . 03 . 2016

கொக்குவில் கிழக்கு கல்லூரி வீதியைப் பிறப்பிடமாகவும் கொள்ளுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சண்முகரட்ணம் (சனா) அவர்கள் நேற்று (01.03.2016) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சிற்றம்பலம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகநாதர் தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி தவமணி தேவியின் அன்புக் கணவரும் கிருபானந்தன்( Director - Seagull Property Developers), பிரபாகரன்(UK), வாசுகி, கருணாகரன்(UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சுகந்தினி மற்றும் புனிதவதி, ஜெயந்திரன்(சண்ஜெயா), கமலினி ஆகியோரின் அன்பு மாமனாரும் அஸ்வின்,ஆகாஷ், அசாணி, ஹரிராம், ஆர்த்திகா, லக்ஷிகா, பூஜா, வள்ளிஜா, விதுஷா, அபிஷா, மகிஷா, அனுஷ் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் காலஞ் சென்றவர்களான பாலசுப்பிரமணியம், குலசிங்கம், ஸ்ரீஷ்கந்தராஜா மற்றும் நவரட்ண ராஜா(இந்தியா), பாலலஷ்மி(UK) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர் களான விஜயலஷ்மி, ரத்தினபூபதி, அப்பாத்துரை மற்றும் தனலஷ்மி, இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, கேதாரலிங்கம், மகேஸ்வரி, ஜெகஜோதி ஆகியோரின் மைத்துனரும் ராசலிங்கம்( Maya Trading), ஈஸ்வரன் காலஞ்சென்ற டாக்டர் அருட்பிரகாசம், கதிர்காமநாதன் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் நேற்று (01.03.2016) செவ்வாய்க்கிழமை மாலை முதல் அவரது இல்லமான இல.474/4, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு - 03 இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை(03.03.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணிக்கு பொரளை, கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.


தகவல்:
கிருபானந்தன்

**077 735 4116, 011 257 7409**

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு

(இளைப்பாறிய கணக்காளர் ப.நோ.கூட்டுறவு சங்கம் -சமாசம் முல்லைத்தீவு)



யாழ் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு 28.02.2016 ஞாயிற்றுக் கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு புதல்வனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - நாகம்மா (சுதுமலை வடக்கு) தம்பதிகள் மற்றும் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும் பத்மலோஜினி, சிவபுரத்தரசு (லண்டன்), வசந்தலோஜினி, சண்முகத்தரசு (ஜேர்மனி), மோகனத்தரசு (வெளிநாடு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற செல்வநாயகம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாவேந்தன்.மாலதி (லண்டன்), ஞானலிங்கம், றாகினி (ஜேர்மனி), சாந்தி ஆகியோரின் மாமனாரும் அகிலன் (குடியியல் மேன் முறையீட்டு மேல் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்), மிதிலன்(லண்டன்), பிரணவன் (லண்டன்), சுஜன்(யா/இராமநாதன் கல்லூரி), கஜன், சிரோமி (ஜேர்மனி), யான் (ஜேர்மனி), சர்மிகா, குகதர்மிகா, விஜிதா (சுதேசிய வைத்திய திணைக்களம்) ஆகியோரின் அன்புப் பேரனும் அவிஷாலினி அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2016) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(69729) (14,19,20)

தகவல்:
குடும்பத்தினர்.

**077 910 3318 (அகிலன்)**

## திருமதி மனோன்மணி பொன்னுத்துரை



தோற்றம்: 1928.05.11
மறைவு: 01.03.2016

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி பொன்னுத்துரை நேற்று (01.03.2016) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும்,காலஞ்சென்றவர்களான இராசையா, வன்னியசிங்கம், பூபாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும், சறோஜினிதேவி (நெளுக்குளம்), செல்வராசா (நீர்வேலி), காலஞ்சென்ற துரைராசா (வேப்பங்குளம்) மற்றும் ரவீந்திரராசா (ஜேர்மனி), மகேந்திரராசா (சுவிஸ்),பத்மினிதேவி (கனடா), காலஞ்சென்ற நந்தினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம் (நெளுக்குளம்), இந்திராணி (நீர்வேலி), சுகந்தினி (வேப்பங்குளம்), ரேவதி (ஜேர்மனி), இரட்ணேஸ்வரி (சுவிஸ்), காலஞ்சென்ற நடராசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2016) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி மாசுவன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிலாவரை வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(69737) (11,19,20)

தகவல்:
குடும்பத்தினர்.

**தொடர்பு - 077 390 0190 (போன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் ஸ்தாபக உறுப்பினரும், கழகத்தின் கிரிக்கட் வீரருமான **பாலகுமார், கிரிக்கெட்வீரர் ரஞ்சித்குமார் மற்றும் விஜயகுமார்** ஆகியோரின் அன்புத் தந்தையும், கொக்குவில் இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்துறையுடன் மிகுந்த ஈடுபாடு உடையவருமான

**சுப்பையா நாகலிங்கம்**

அவர்கள் கனடாவில் காலமானதையறிந்து எமது நிலையத்தின் சார்பில் அஞ்சலி செலுத்துகின்றோம்.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும்.**
**(K.C.C.C S.C)**

(C/29587) (10.17)

## கண்ணீர் அஞ்சலி



கே.சி.சி.சி விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கட் வீரர்களான **நற்குனேந்திரன் (யோகன்) நவிந்திரன் (நவின்)** மற்றும் நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினர்களான **நாகேந்திரன் (ராசன்), நகுலேந்திரன்** ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு S. **சிறிராம்** (U.K) அவர்களின் அன்பு மாமியுமாகிய

**திருமதி லோகேந்திரன் நாகேஸ்வரி**

அவர்கள் கனடாவில் காலமான செய்தி கேட்டு துயருற்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும்.**


(C/29588) (10.17)

## கண்ணீர் அஞ்சலி



**திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் ஸ்தாபகத் தலைவர்**
**அமரர் லயன் கலாநிதி**
**கந்தையா குணராசா**
**அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றோம்.**
**வரலாற்று ஏடுகளில் எதையோ தேடினாய் நீயே ஒரு வரலாறு என்று அறியாமல்..!**
**அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.**
**திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம்**
**சர்வதேச லயன்ஸ் கழகம் 306 B1**

## கண்ணீர் அஞ்சலி



தமிழ்மொழி மூலமான புவியியல் கல்விக்கு அளப்பெரும் பங்காற்றியவரும் எமது துறையின் வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றியவருமாகிய

**கலாநிதி**
**க.குணராசா**
**(செங்கையாழியான்)**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**புவியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்.**

(69739)
(11,17,20)

## அந்தியேட்டி சபிண்டீகரண கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

**அன்னை மடியில்**
22 . 01 . 1925



**ஆண்டவன் மடியில்**
30 . 01 . 2016

**அமரர் சிவகாமசுந்தரி சிவஞானம்**

கடந்த ஜனவரி 30.01.2016 சனிக்கிழமை இறைபதமடைந்த எங்கள் அன்புத் தாய் சிவகாம சுந்தரி சிவஞானம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல நல்லைக்கந்தனை வேண்டுகின்றோம்.

எம் அன்புத்தெய்வத்தின் மறைவின் போது உதவிஒத்தாசை வழங்கியோ ருக்கும் மரணச்சடங்கில் நேரில்கலந்தும் வேறுவழிகளில் ஆறுதல்கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*இல. 316, கே.கே.எஸ் வீதி,*
*மருதனார்மடம்.*
**T.P No: 077 2761 960**

**மகன்:**
**சி.ஏகாம்பரநாதன்**

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**மலர்வு**
23 . 12 . 1983



**உதிர்வு**
18 . 01 . 2016

## அமரர். நாகலிங்கம் கவிஞலிங்கம்

**கடந்த 18.01.2016 அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் நாகலிங்கம் கவிஞலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (02.03.2016) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

குறிப்பு: இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல: 82, தாமரை வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**தோற்றம்:**
18 . 12 . 1945



**மறைவு:**
01 . 03 . 2016

**திருமதி நேசமணி கிறிஸ்ததாஸ்**

வதிரி மேற்கு, சோனாவளவைப் பிறப்பிடமாகவும், அல்வாய் தெற்கு தங்கமாலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசமணி கிறிஸ்ததாஸ் நேற்று (01.03.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான V.T. சின்னத்துரை (ஓய்வுபெற்ற அதிபர்)-இளையதங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான ஜோன் சண்முகம் (தலைமை ஆசிரியர்)-தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற J.S.கிறிஸ்ததாஸ்ஸின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், சமாதான நீதிவான்) அன்பு மனைவியும், சுபாஷினி (இத்தாலி), சுகந்தினி (ஜேர்மனி), ராஜ்குமார் (ஜேர்மனி), சுதர்மினி (கனடா), ரஞ்சித்குமார் (பிரான்ஸ்) லலிதா, ரமேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், செல்வராஜா (இத்தாலி), பரமதாஸ் (ஜேர்மனி), சுபாசினி (ஜேர்மனி), சாள்ஸ் புனிதவளன் (கனடா) றொனிற்றா (பிரான்ஸ்), இக்மால், நென்சி, அஸ்வினி, திலீபன், விக்கினேஸ்வரன், ராதா ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற நேசராஜனின் சிறிய தாயும், தேவகுமார் (கனடா), தேவமணி (உஷா-சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற J.S.சத்தியநாதன் (ஓய்வுபெற்ற கணக்குப் பதிவாளர்- பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்), ஆனந்தி (கனடா), மனோகர் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் றொசான், நர்மதன், பரமசுதன், பியூலா, திஷான் கிருஷானி, விருஷான், தக்ஷா, சாரோன், சியோன், அம்ஷன், றொனிஸ், ரித்திஸ், கின்ஷா, ஆசிவ், ஹஸ்னா, அக்மல், அயன், அஸ்ரின், அமீஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மயூதரன், மனோஷா, மாருதி, சத்தியராஜன் ஆகியோரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
021 226 3921, 076 646 5867

(c/29590)(15,17)

**இணைந்த** கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார். இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தலைமையில், இலங்கையின் ஒன்பது மாகாணங்களினதும் போக்குவரத்து அமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாடு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன் போதே மேற்படி பணிப்புரையை ஜனாதிபதி விடுத்துள்ளார்.

இதில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர், வடக்கு மாகாணத்தில் மக்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்துச் சேவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக தனியார்போக்குவரத்துத் துறையினக்கும், இலங்கை போக்குவரத்துச் சபைக்கும் 60 க்கு 40 என்ற விகிதத்தில் சேவை வழங்கும் இணைந்த நேர அட்டவணை தயாரிக்கப்பட்டது.

இந்த நேர அட்டவணையில் தனியார் துறையினரும், மாவட்ட அரச அதிபர்களும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அலுவலர்களும் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்த இணைந்த நேர அட்டவணையில் கையெழுத்திடுமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையினரைக் கேட்ட போது, அவர்கள் சாக்குப் போக்குச் சொல்லித் தவிர்க்கின்றனர்.

இதனால் வினைத்திறனான சேவையை வழங்க முடியாமல் இருக்கின்றது.

எனவே இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவருக்கு உரிய பணிப்புரையை ஜனாதிபதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதற்கமைய ஜனாதிபதி மைத்திரிபால, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவரை உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார்.

இது தொடர்பில் வடபிராந்திய முகாமையாளரை நடவடிக்கை எடுக்கப் பணிப்பதாக, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

(த-வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசத்துக்காக

அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள். இரும்புக் கதவுகளுக்குப் பின்னாலிருக்கும் வலிகளை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் அரசியல் ரீதியான தீர்மானமொன்றை எடுத்து அரசு உடன் விடுதலை செய்ய வேண்டும்.

இவ்வாறு கண்ணீருடன் கோரிக்கை விடுத்தார் ஏழு வருடங்களாக தமிழ் அரசியல் கைதியாகத் தடுத்து வைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் கொழும்பு விசேட நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் முருகையா கோமகன்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் சிறையில் தனது அனுபவங்கள், ஏனைய கைதிகளுக்கான விடுதலை தொடர்பில் கருத்துக்களை வெளிப்படுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது முருகையா கோமகன் மேலும் கூறுகையில், என்னை சக அரசியல் கைதிகள் வழியனுப்பி வைத்துள்ளனர். எனினும், எனது விடுதலை மகிழ்ச்சியளிப்பதாகவில்லை. சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள எமது உறவுகளான தமிழ் அரசியல் கைதிகளில் தற்போது எவரும் ஆயுதம் ஏந்திப் போராடும் மன நிலையில் இல்லை.

தமது உறவுகளுடன் எஞ்சிய காலத்தைப் போக்கிக் கொள்வதற்கே விரும்புகின்றார்கள். பாசத்திற்காக அவர்கள் ஏங்குகின்றார்கள். அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளவேண்டும். நானும் ஒரு காலத்தில் எனது உறவுகளுடன் இணைவேனோ என்று எண்ணினேன். ஏக்கத்தோடு காத்திருந்தேன். அதேபோன்றே இன்று ஏனையவர்களும் காத்திருக்கின்றார்கள்.

அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். அவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவேண்டும். அவர்களின் விடுதலையை உறுதி செய்யவேண்டும். அப்பணியையும் சுமந்தவனாகவே நான் தற்போது உங்கள் முன்னிலையில் இருக்கின்றேன். இரும்புக் கதவுகளுக்குப்பின்னால் இருக்கும் கொடுமையான வலிகளை யாரும் அறியமாட்டார்கள். அந்த வலிகளை நேரடியாக அனுபவித்தவன் நான்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கோரிக்கைகள் நியாயமானது. அதனைப் புரிந்துகொள்ளவேண்டும். மிக நீண்டகாலமாக வார்த்தைகளினால் வடிக்க முடியாத வலிகளுடன் விடுதலைக்கான ஏக்கத்துடன் காத்திருக்கின்றார்கள்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக குறிப்பாக தமிழ்த் தலைமைகள் உரிய தீர்மானங்களை மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலைசெய்ய முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்டிருந்த முன்னாள் போராளி ஜெனீபனை அவர் பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்திருந்தார். ஜெனீபனின் விடுதலையானது எமது விடுதலைக்கான வழியை உருவாக்கும் சமிக்ஞையாகவே கருதியிருந்தோம். இருப்பினும் தற்போது அவ்வாறான சூழலொன்று காணப்படுவதாகத்தெரியவில்லை.

இவ்வாறான நிலையிலேயே விசாரணைகளின்றி மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 14 அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் தொடர்ச்சியாக எட்டாவது நாளாகவும் உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அவர்கள் இவ்வாறு தொடர்ந்தும் போராடிக்கொண்டிருப்பதை அனுமதிக்க முடியாது. அவர்களின் உடல் நிலை மோசமடைந்துள்ளது. அவர்களைப் புனர்வாழ்வளித்தோ அல்லது பிணை அடிப்படையிலோ அல்லது அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்படும் தீர்மானத்தின் அடிப்படையின் பிரகாரம் ஏதாவதொரு பொறிமுறையில் விடுதலையளிப்பதற்கு அரசு முன்வரவேண்டும்.

தற்போது நல்லாட்சி அரசு உருவாகியுள்ளது எனக் கூறப்படுகின்றது. ஆகவே, நல்லெண்ண சமிக்ஞையாக அரசியல் ரீதியான தீர்மாணங்களை மேற்கொண்டு அவர்களின் விடுதலையை உறுதி செய்யவேண்டுமென இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் அரசியல் தலைமைகள், சிவில் சமூக அமைப்புக்கள் உட்பட அனைத்து தரப்பினரும் சிறைகளின் வாடும் எமது உறவுகளின் விடுதலைக்கு தொடர்ந்தும் அழுத்தமளிக்க வேண்டும் எனக் கோருகின்றேன்" என்றார்.

**யாழில் இன்று போராட்டம்**

இதேவேளை, நீண்டகாலமாக விசாரணைகளின்றி மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் 14 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி நேற்று செவ்வாய்க்கிழமை எட்டாவது நாளாகவும் உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் அவர்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையிலும் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் வகையிலும் யாழ்ப்பாணத்தில் இன்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் இன்று முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாண பிரதான பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் சிவில் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், பொதுமக்கள் உட்பட அனைத்துத் தரப்பினரையும் பங்கேற்று கைதிகளின் விடுதலைக்கு ஒன்றுபட்டு குரலெழுப்புமாறு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான வெகுஜன அமைப்பு கோரியுள்ளது. (கு-வ-சி)

## உணவு

சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கைதிகளின் உற வினர்களால் தெரிவிக்கப்பட்டது.

மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 தமிழ் அரசியல் கைதிகள், தமது விடுதலையை வலியுறுத்தி உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை அவர்கள் ஆரம்பித்த இந்தப் போராட்டம் நேற்று 8 ஆவது நாளாகத் தொடர்ந்தது.

இதில் ஏற்கனவே 4 பேர் மயங்கி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றும் 5 பேர் மயங்கிய நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். எனினும் அவர்கள் உணவு தவிர்ப்பைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர்.

இதேவேளை, தமது விடுதலை பற்றிய பேச்சுவார்த்தைகள் இன்னும் வெற்றியளிக்காமை தொடர்பில் அரசியல் கைதிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (கு-வ-4)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்மா சிறீகரன்



தொல்புரத்தைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா சிறீகரன் கடந்த 29.02.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிமுத்து - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் தம்பிமுத்து - சிறீகரன் அவர்களின் பாசமிகு மனைவியும் நாகராஜன் (கனடா), குகனேசன் (கனடா), கிரிஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஞானதர்சினி (கனடா), நிறஞ்சலா (கனடா), சிவயோகலிங்கம் (ஆசிரியர் - யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சறூஜென், சிபிலன், கிஷான், தக்சி, டனிசி, துஷானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமா வார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2016) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
தொல்புரம் கிழக்கு (c/29589)(15,17)

### திருமதி நாகரட்ணம் கதிரித்தம்பி (பெரியம்மா)



தோற்றம்: 20.03.1911
மறைவு : 01.03.2016

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வதிவிடமாகவும், தற்போது நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கில் வசித்தவருமாகிய திருமதி நாகரட்ணம் கதிரித்தம்பி நேற்று (01.03. 2016) செவ்வாய்க்கிழமை 105 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் செல்லப்பா - நாகம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற கதிரித்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் பரமேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம், ஞானம்மா, ஞானசுந்தரி ஆகியோரின் அன்பு சகோதரியும், மகாலட்சுமி (கனடா), சாந்தா (கனடா) ஆகியோ ரின் அன்பு மாமியாரும், சுரஞ்சன் (சிங்கப்பூர்), சஞ்சுளா (கனடா), லக்ஸ்மன் (USA), கிரிசாந்தி (கனடா), சயந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், இந்திராதேவி (சாவகச்சேரி), வனிதாதேவி (சாவகச்சேரி), ஞானராஜன் (ஜேர்மனி), ஞானசந்திரன் (கருணாலயம்), ஞான றஞ்சினி (ஜேர்மனி), ஞானேஸ்வரி (கொழும்பு), ஞானசீலன் (சுவிஸ்), ஞானபூபதி (பாரதி இன்டஸ்றீஸ் - கொக்குவில்), சொர்ணராஜா (லண்டன்) ஆகியோரின் பெரிய தாயாரும், புவனேஸ்வரன் (லண்டன்), றஜனி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.03.2016 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(69744) (11,17,20)

தகவல்:
க.ஞானச்சந்திரன் (ஞானி) (கருணாலயம்)

**021 222 3108 077 773 2364**

## மரண அறிவித்தல்கள்

### லோகநாயகி இராமுப்பிள்ளை



காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் இல.16 1/1, இராமையாச்செட்டியார் ஒழுங்கை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட லோகநாயகி இராமுப்பிள்ளை (Education Centre Jaffna) நேற்று (01.03.2016) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை (ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர்) விசாலாட்சி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற பரமநாதன் (பொதுச்சுகாதார பரிசோதகர்), காலஞ்சென்ற வாமதேவன் (லிகிதர் இலங்கை துறைமுக அதிகார சபை) காலஞ்சென்ற சிவபாக்கியம், இராசலட்சுமி ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற நாகம்மா காலஞ்சென்ற பொன்னம்பலம் காலஞ்சென்ற பாலசிங்கம், மங்கையர்க்கரசி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.03.2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று யாழ்ப்பாணம் வில்லூன்றி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பா.சிவசுப்பிரமணியம் (பெறாமகன்)

**T.P: 07777 22215**
(69752)(15,17,20)

### தம்பிப்பிள்ளை துரைசாமி



அரியாலையைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை துரைசாமி 29.02.2016 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் தம்பிப்பிள்ளை-பூரணாம்பிகை தம்பதியரின் மகனும், தம்பிப்பிள்ளை-கனகாம்பிகை தம்பதியரின் மருமகனும், இலங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், சுதர்சன், ஜனனி, உஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிரிஜா, செல்வராஜா, கணேஸ் ஆகியோரின் அன்பு மாமனும், ஜெய்சன், யாழினி, மயூரன், மயூரி ஆகியோரின் அன்புப் பாட்டனும், மேயனின் பூட்டனும், காலஞ்சென்றவர்களான ரமணீகரம், சரஸ்வதி, சின்னத்தம்பி, மோகனாம்பிகை ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஆலாலசுந்தரம், இரத்தினசுந்தரம் மற்றும் சிவஞானேஸ்வரி, யோகேஸ்வரி, சுவர்ணேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வியாழக்கிழமை காலை 9 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைக்காக தெகிவளை மயானத்துக்கு பிற்பகல் 4 மணியளவில் எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்.
T.P: 2503620
(C/29740)(10.17)

## கண்ணீர் அஞ்சலி



தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராக 28.07.2003 - 31.07.2004 வரை கடமையாற்றிய

**கலாநிதி கந்தையா குணராசா**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி எம்மையெல்லாம் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்,
தெல்லிப்பழை.

அனைவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெருடாவில் அண்ணா, சென். தோமஸ் அணிகள் பருத்தித்துறை கரப்பந்தில் கிண்ணம் வென்றன





கரணவாய், மார்ச் 2
பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்த கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் கெருடாவில் அண்ணா விளையாட்டுக்கழகமும், பெண்கள் பிரிவில் பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக்கழகமும் நடப்பு வருடத்தின் சம்பியனாகின.

தொடரின் இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் மாதனை விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றன. முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. மூன்று செற்களைக்கொண்ட இந்த ஆட்டத்தில் 2:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனாகியது சென்.தோமஸ் விளையாட்டுக்கழகம்.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகமும் வல்வை விளையாட்டுக்கழகமும் மோதின. 5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் 3:0 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று சம்பினாகியது கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகம்.

(ம-108)

## மருதநிலாவுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 2
சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மருதநிலா அணி வெற்றிபெற்றுள்ளது.

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து அல் இக்பால் அணி மோதிக் கொண்டது. இதில் மருதநிலா அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## காளியம்பாள் அபாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 2
வைகறை வி.கழகம் நடத்திவரும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் காளியம்பாள் பி அணி வெற்றிபெற்றது.

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடந்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் பி அணியை எதிர்த்து கோண்டாவில் மறுமலர்ச்சி அணி மோதிக் கொண்டது. இதில் தாவடி காளியம்பாள் 'பி' அணி 12:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## தெல்லிப்பழைக் கோட்ட மெய்வன்மை

யாழ்ப்பாணம், மார்ச் 2
தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கோட்ட மட்ட மெய்வன்மைப் போட்டிகள் நாளை வியாழக் கிழமை மற்றும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறவுள்ளன. 13, 15வயதுப் பிரிவினருக்கான போட்டிகள் அருணோதயக் கல்லூரி மைதானத்திலும், 17, 19, 21 வயதுப் பிரிவினருக்கான போட்டிகள் மகாஜனக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (ம-422)

## யாழ். கல்விக்கோட்ட கால்பந்து

யாழ்ப்பாணம், மார்ச் 2
யாழ். கல்விக்கோட்ப்பாடசாலைகளுக்கு இடையிலான 15வயது 17வயதுபிரிவுஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடர் இன்று புதன்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ம-23)

## சம்பியனானது யாழ். இந்துக்கல்லூரி நல்லூர் கல்விக்கோட்ட துடுப்பாட்டத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 2
நல்லூர் கல்விக் கோட்ப்பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் யாழ். இந்துக்கல்லூரி கிண்ணம் வென்றது.



5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட குறித்த தொடரின் இறுதியாட்டம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் யாழ். இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து கோண்டாவில் இரமகிருஷ்ண மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக்கல்லூரி அணி 3 இலக்குகளை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிகேஸ் ஆட்மிழக்காமல் 38 ஓட்டங்களையும், கஜனன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அணியின் சார்பில் கிருபாகரன், சனுசன், கஜீபன் மூவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். 77 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கோண்டாவில் இரமகிருஷ்ண மகா வித்தியாலய அணி 48 ஓட்டங்களை மட்டும் பெற்று தோல்வியடைந்தது. அதிகபட்சமாக துவாரகன் 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் யாழ். இந்துக்கல்லூரி அணியின் சார்பில் கிருபாகரன், கஜனன், யனுசன் மூவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச். 2

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண் சையின் அணியை எதிர்த்து 786 அணி மோதவுள்ளது.

**றோயல் வி.கழகத் தொடர்**
ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றிஸ் அணி மோதவுள்ளது.

**குணபாலசிங்கம் ஞாபகார்த்தத் தொடர்**
யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் குணபாலசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக் கான 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி அணி மோதவுள்ளது.

(ம-23)

## கரவெட்டி பிரதேச செயலக கபடி

மாங்குளம், மார்ச் 2
கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கழகங்களுக்கு இடையேயான இருபாலாருக்குமான கபடித் தொடர்கள் எதிர்வரும் சனிக்கிழமை யங்கம்பன்ஸ் மைதானத்தில் காலை 8.30 மணிமுதல் நடைபெறவுள்ளது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சிக் கோட்டக் கபடித் தொடரில் சிவநகர் அ.த.க. பாடசாலை ஆதிக்கம்

கரணவாய், மார்ச் 2
கரைச்சிக்கோட்டப்பாடசாலைகளுக்கிடையிலான கபடித் தொடரில் 15 வயதுப்பிரிவில் சிவநகர் அ.த.க.பாடசாலையின் ஆண், பெண் அணிகள் கிண்ணம் வென்றுள்ளன.
இறுதியாட்டங்கள் சிவநகர் அ.த.க.பாடசாலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றன. 15வயதுப் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சிவநகர் அ.த.க.பாடசாலை அணியை எதிர்த்து கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் சிவநகர் அ.த.க. பாடசாலை அணி 5:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் சம்பியனாகியது. 3ஆம் இடத்தை புதுமுறிப்பு விக்னேஸ்வரா அணி பெற்றது.
15 வயது ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சிவநகர் அ.த.க.பாடசாலை அணியை எதிர்த்து கனகாம்பிகைக் குளம் அ.த.க.பாடசாலை அணி மோதியது. இதில் சிவநகர் அ.த.க.பாடசாலை அணி 35:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனாகியது. 3ஆம் இடத்தை கிளிநொச்சி இந்து கல்லூரி அணி பெற்றது. (ம-422)



# பருத்தித்துறை கோட்ட துடுப்பாட்டத்தில் சம்பியனானது ஹாட்லிக் கல்லூரி அணி

கரணவாய், மார்ச் 2
பருத்தித்துறைகோட்டபாடசாலைகளுக்கிடையிலான துடுப்பாட்டத் தொடரில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி சம்பியனாகியது.
தொடரின் இறுதியாட்டம் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயமும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தொண்டமா னாறு அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக திவ்வியன் 10 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஆனந்த் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.
30 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு களமிறங்கிய ஹாட்லிக் கல்லூரி அணி 3.5 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக நிசாந்தன் 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தயன் 2இலக்குகளையும் டிலக்சன் மற்றும் சசிகரன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம-108)



சண்டிலிப்பாய் கோட்டமட்ட கரப்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்ற சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் 15 வயதுக்கு உட்பட்ட அணி. (ம)

# வடமராட்சி வலய துடுப்பாட்டம்

கரணவாய், மார்ச் 2
வடமராட்சி வலயப்பாடசாலைகளுக் கிடையிலான வலய மட்ட துடுப்பாட்டத் தொடர் இன்று புதன் கிழமை காலை 8 மணி முதல் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் பருத்தித்துறைகரவெட்டிமற்றும் மருதங்கேணி கோட்டங்களில் வெற்றி பெற்ற அணிகள் பங்குபற்றவுள்ளன.
இதேவேளை- ஆண்களுக்கான வலய மட்டக் கரப்பந்தாட்டம் நாளை வியாழக் கிழமை அதே மைதானத்தில் இடம்பெறவுள்ளதோடு பெண்களுக்கான போட்டிகள் நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளன.
(ம-108)

# கிண்ணம் வென்றது இளந்தாரகை

யாழ்ப்பாணம், மார்ச் 2
கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் தருமபுரம் இளந்தாரகை விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.
வள்ளுவர் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் தருமபுரம் இளந்தாரகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பரந்தன் இளைஞர் வட்ட அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில், தருமபுரம் இளந்தாரகை விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது. (ம-23)

# புதுக்குடியிருப்பு கோட்ட வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 2
புதுக்குடியிருப்பு கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் சனிக் கிழமை புதுக்குடியிருப்பு விசுவமடு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-422)

# துடுப்பாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், மார்ச் 2
ஜமகா வி.கழகம் அணிக்கு 9 வீரர்கள் பங்கு பற்றும் 8 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடர் ஒன்றை கல்வியங்காடு ஜி.பி.எஸ். விளையாட்டு மைதானத்தில் நடத்தவுள்ளது. மேற்படி தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தமது பதிவுகளை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு ஏற் பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ம)

රූපවාහිනී
ரூபவாஹினி
RŪPAVĀHINĪ

# ஐ.சி.சியின் ஒளிபரப்பு உரிமம் ரூபவாஹினிக்கும் கிடைத்தது

நடைபெறவுள்ள ரி-20 உலக கிண்ணத் தொடரிலிருந்து எதிர்வரும் நான்கு வருடங்கள் வரை, சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தொடர்களை ஒளிபரப்புச் செய்வதற்கான உரிமத்தை தேசிய தொலைக்காட்சி சேவையான ரூபவாஹினி தனதாக்கிக் கொண்டுள்ளது.
இந்த மாதம் 8ஆம் திகதி ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் தகுதிச்சுற்று ஆட்டங்கள் ஆரம்பமாகவுள்ளன. 15ஆம் திகதி பிரதான ஆட்டங்கள் ஆரம்பமாகின்றன. இந்நிலையில் தொடரை ஒளிபரப்புவதற்கான உரிமம் ரூபவாஹினிக்கும் கிடைத்துள்ளது. இதன்படி, ரி-20 உலகக்கிண்ணத் தொடர், மகளிர் ரி-20 உலகக்கிண்ணத் தொடர், 2019ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடர் என்பன ரூபவாஹினி ஒளிபரப்பப்போகும் பிரதான தொடர்களாக அமைந்துள்ளன. (ம)



சர்வதேச மேசைப்பந்தாட்ட பயிற்றுனர் பரீட்சையில் சித்தியடைந்த செ.சோமசுந்தரம் அண்மையில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் வைத்து இலங்கை மேசைப்பந்தாட்ட பயிற்றுனர் மான்சில் முத்தலிபுவினால் கௌரவிக்கப்பட்டார். (ம-108)

# கோக்லிக்கு அபராதம்



நடுவரின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் இந்திய அணியின் துணைத் தலைவர் விராட் கோக்லிக்கு அபராதம் விதித்துள்ளது ஐ.சி.சி.
ஆசியக் கிண்ணத் தொடரில், கடந்த சனிக்கிழமை நடந்த ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின. 84 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு இந்திய அணி துடுப்பெடுத்தாடியது. வெற்றிக்கு அருகில் இந்திய அணி இருந்த வேளையில் 49 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யு. ஆனார் கோக்லி. உண்மையில் பந்து முதலில் துடுப்பு மட்டையில் பட்ட பின்னரே கால் கவசத்தில் பட்டது. நடுவரின் தவறான தீர்ப்பை ஏற்க மறுத்து மைதானத்தில் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார் கோக்லி. இதனால் குறித்த குற்றத்துக்காக கட்ட ணத்தில் இருந்து 30 சதவீதம் அபராதம் விதித்துள்ளது சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை. கோக்லியும் தனது தவறை ஏற்றுக்கொண்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்கினை வழங்கி வாக்கைப் பெறவில்லை அடித்துக்கூறுகிறார் ஜியானி இன்பான்டினோ




2026ஆம் ஆண்டின் உலகக்கிண்ணத்தை நடத்தும் உரிமத்தை வழங்குகிறேன் எனத் தெரிவித்து அமெரிக்காவின் வாக்கினைப்பெறவில்லை எனத்தெரிவித்துள்ளார் சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவரான ஜியானி இன்பான்டினோ.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் (பீபா) தேர்தலில் ஜியானி இன்பான்டினோ வெற்றி பெற்றார். முதலாம் கட்ட வாக்கெடுப்பில் ஜியானி இன்பான்டினோவுக்கு எதிராக வாக்களித்த அமெரிக்கா,இரண்டாம் கட்டத்தெரிவில் அவருக்கு ஆதரவாக வாக்கினை வழங்கியது. அமெரிக்காவின் இந்த திடீர் மாற்றத்துக்கு, 2026ஆம் ஆண்டின் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரை நடத்தும் உரிமத்தை அமெரிக்காவுக்கு தருவதாக ஜியானி இன்பான்டினோ தெரிவித்திருந்தமையே காரணம் என்று குறிப்பிடப்பட்டது. இந்தக் கருத்துக்களை இன்பான்டினோ மறுத்துள்ளதுடன் அவ்வாறான உத்தரவாதம் எதுவும் வழங்கவில்லை எனவும், உலகக்கிண்ண உரிமத்தை வழங்குவதென்பது தனது தனிப்பட்ட முடிவு அல்ல என்றும் தெரிவித்துள்ளார். (ம)

வெளிவந்து விட்டது
A/L பாஸ் பேப்பர் – 2015 ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது.
கிடைக்கும் இடம் யாழ் நகரில்
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்
222 9881
(e 29581) (14,18,20)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியில் வேலை வாய்ப்புக்களை பெறுவதற்கு வங்கியியல் கற்கைநெறிகள்
IABF & DABF
Medium: Tamil & English
Minimum qualification: G.C.E.O/L
6 Passes including 5 credits
பட்டயக்கணக்காளர் ஆவதற்கு
Chartered Accountancy
Executive Level, Business level
Medium :- Tamil & English
Minimum qualification :- G.C.E. A/L 3 Passes
Further Details: Jaffna College
Undergraduate Dept.
464,Hospital Road,
Jaffna.
Contact TP NO 021 222 3382,
021 222 9149

கோழி எரு விற்பனைக்கு
கோழி எரு வாடிக்கையாக விற்பனைக்குண்டு.
தொடர்: வீனஸ் பாம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.
077 8448 300

# இறுதிக்கு முன்னேறியது இந்தியா இக்கட்டான நிலையில் இலங்கை



ஆசியக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இலங்கை, இந்திய அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 5 இலக்குகளால் இலங்கையை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியது இந்தியா.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஆரம்ப வீரர்களாக டில்சான் மற்றும் சந்திமல். முதல் பந்துப்பரிமாற்றத்தில் இரண்டாவது பந்தை பவுண்டரிக்கு விரட்டினார் சந்திமல். அதுவே அவர் மூலம் பெறப்பட்ட ஒட்டுமொத்த ஓட்டங்களுமாகியது. மூன்று ஓட்டங்களுடன் பும்ராவிடம் சிக்கினார் ஜெயசூரிய.டில்சான் நிலைத்துநின்றாலும் நீடிக்க விடவில்லை பாண்டியா. மத்தியூஸையும் பாண்டியா வெளியேற்ற 11 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகள் இழப்புக்கு 57 ஓட்டங்களைப் பெற்றிருந்தது இலங்கை. கப்புகெதரவுடன் இணைந்தார் சிறிவர்த்தன. இலக்குச் சரிவுகள் சிறிது நேரம் பிற்போடப்பட்டன. அடித்து விளையாடி சராசரியில் மாற்றங்களைக் கொண்டு வந்தார் சிறிவர்த்தன. குறிப்பாக ஜடேயாவின் பந்து நேற்று எடுபடவில்லை. சிக்சர்களும் அவ்வப்பொழுது இடம் பெற்றன. மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் நூறு ஓட்டங்களை எட்டியது இலங்கை. நூறு ஓட்டத்தில் வைத்து ஆட்டமிழந்தார் சிறிவர்த்தன. வந்ததும் விடைபெற்றார் சாணக. பின்வரிசையில் மிரட்டினார் திசரபெரேரா. அவர் ஆறு பந்துகளில் 17 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் ஸ்டம்பிங் மூலம் வெளியேற்றினார் டோனி. இது சிறிது சர்ச்சைக்குரிய ஆட்டமிழப்பாகவும் பதிவாகியது. டில்சானுக்கு எல்.பி.டபிள்யூ. வழங்க மறுத்த நடுவரே பெரேராவை ஆட்டமிழப்பு எனவும் அறிவித்தார். முடிவில் இலங்கை 138-9.

பந்துவீச்சில் இந்தியா சார்பாக அஸ்வின், பாண்டியா, பும்ரா மூவரும் தலா இரு இலக்குகளையும், நெக்ரா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய இந்தியாவுக்கும் ஆரம்பம் அவ்வளவு சிறப்பாக அமையவில்லை. தவானை ஓர் ஓட்டத்துடனும் ரோகித் சர்மாவை 15 ஓட்டங்களுடனும் வெளியேற்றினார் குலசேகரா. கோக்லி, ரெய்னா இணைய வெற்றிச் சதவீதம் இந்தியாவுக்கு 65ஆகவும் இலங்கைக்கு 35 ஆகவும் மாற்றம் பெற்றது. இலக்கை எட்டும்படியான சராசரியில் சென்று கொண்டிருந்தனர். இணைப்பாட்டமாக ஐம்பது ஓட்டங்கள் பகிரப்பட்ட பிற்பாடு 25 ஓட்டங்களுடன் சாணகவிடம் வீழ்ந்தார் ரெய்னா. களமிறங்கினார் யுவராஜ். கூடவே இலங்கைக்கு ஆபத்தும் வந்தது. கேரத்தின் பந்தில் அடுத்தடுத்து இரு சிக்சர்களை விளாச பெறப்பட வேண்டிய ஓட்டங்களும் மீதமிருந்த பந்துகளும்சமநிலையாகின. அவ்வப்பொழுது சில பவுண்டரிகளுடன் பதற்றமில்லாமல் விளையாடிக் கொண்டிருந்தார் கோக்லி. 18 பந்துகளில் 35 ஓட்டங்களுடன் யுவராஜின் இன்னிங்ஸ் முடிவுகண்டது. பாண்டியா இரண்டே ஓட்டத்துடன் ஆட்டமிழந்தாலும் கோக்லி, டோனி இணைந்து ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தனர்.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக குலசேகர 2 இலக்குகளையும், பெரேரா, கேரத், சாணக மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். கோக்லி ஆட்டநாயகனானார். (ம)




# செவில்லா அணியை இலகுவாக வீழ்த்தி பார்சிலோனா முதலிடத்தில் நீடிக்கிறது

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனா அணி வெற்றிபெற்று தரவரிசைப் பட்டியலில் தொடர்ந்து முதலாம் இடத்தில் நீடிக்கிறது. ஆட்டம் ஆரம்பித்து முதல் முப்பது நிமிடங்கள் வரை கோல்கள் எவையும் பதிவாகவில்லை. 31ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி ஒரு கோலைப் பதிவுசெய்தார். 1:0 என்ற பார்சிலோனாவின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது முதல் பாதி. 48 ஆவது நிமிடத்தில் ஜெராட் பீகே மற்றொரு கோலைப் பதிவுசெய்ய பார்சிலோனா பலம் பெற்றது. ஆட்டம் நிறை வடைய 5 நிமிடங்கள் இருக்கையில் பதில் கோலைப் பதிவு செய்தது செவில்லா. இருப்பினும் தோல்வியை தவிர்த்துவிட முடியவில்லை. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில் பெற்ற வெற்றியுடன் 66 புள்ளிகளைப் பெற்றுள்ள பார்சிலோனா, லா லிகாப் புள்ளிகள் தரவரிசையில் இரண் டாமிடத்திலுள்ள அத்லெட்டிகோ மட்ரிட்டுடனான புள்ளிகள் வித்தியாசத்தை எட்டாக அதிகரித்துக் கொண்டுள்ளதுடன், மூன்றாமிடத்தில் உள்ள ரியல்மட்ரிட்டுக்கு இடையிலான புள்ளிகள் வித்தியாசத்தை 12ஆக அதிகரித்துக் கொண்டுள்ளது. (ம)

வடிவமைப்பாளர்கள் தேவை
வட மாகாணத்தில் இயங்கும் முன்னணி நிறுவனத்துக்கு வேகமும், படைப்பாற்றலும் உடைய கணினி வடிவமைப்பாளர்கள் பகல், இரவு முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ வேலைசெய்யக் கூடிய இருபாலாரும் உடன் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- Adobe Photoshop
- Adobe InDesign
- Adobe PageMaker
- CorelDRAW
தெரிந்தவர்கள், பக்க வடிவமைப்பாளர்கள் தங்கள் சுயவிவரங்களுடன் இன்று (02.03.2016) புதன்கிழமை காரியாலய நேரத்தில் கீழ் காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

ES Printers
021 492 7471 / 021 492 7472
357, Kasthuriyar Road, Jaffna.
esprintersjaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.